

**இல்லாமை என்பது**

**பிரச்சினையல்ல**

செல்வின்

**பக்கம்**

**04**

பக்கங்கள்: 20

விலை: 30.00

THEEMPUNAL

# தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 | புனல்:31 | 27.11.2021 சனிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2052



**சுமந்திரனின் மேற்குலக**

**அரசியல்ப் பயணம்**

**ஏற்படுத்தியுள்ள சர்ச்சைகள்**

கருணாகரன்

**பக்கம்**

**10**



## ஜனநாயகத்தின் அவசியம் உணரப்பட வேண்டும்

நா.தம்பித்துரை



தமிழ் மக்களின் உணர்வுகள், சுதந்திரங்கள் பெரும்பான்மை ஆட்சியாளர்களால் நசுக்கப்படுவதாக தமிழ் மக்கள் கவலை கொள்ளத் தொடங்கியுள்ளனர். கடந்த மே மாதம் 18 ஆம் திகதி இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கான நினைவேந்தலை ஏதோவொரு வகையில் திட்டமிட்டு தடை செய்ததனைப்போலவே. மண் மீட்பு யுத்தத்தில் இறந்த தமது பிள்ளைகளின் நினைவினைச் சுமந்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நாளான நவம்பர் 27 ஆம் திகதி அரசால் திட்டமிட்டுத் தடை செய்யப்படுவதாகவே மக்கள் கருதுகின்றனர்.

வடக்கின் பல பகுதிகளிலும் பொலிஸ் தரப்பினரால் நீதி மன்றங்களில் தாக்குதல் செய்யப்பட்ட மாவீரர்களை நினைவேந்தல் செய்வதற்கு எதிரான தடை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது ரத்து செய்யப்பட்டதோடு முல்லைத்தீவில் நீதி மன்றத்தால் ஆரம்பத்தில் பொலிஸாரின் மனுவை ஏற்று வழங்கப்பட்ட தடை உத்தரவானது பின்னர் இறந்தவர்களை நினைவு கூருவதற்குரிய உரிமையினை யாரும் தடை செய்ய முடியாது என்றும் கொடிகள், ஆர்ப்பாட்டங்கள் இன்றி இறந்தவர்களை நினைவு கூரலாம் என்றும் மறுபரிசீலனை செய்யப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களால் வழங்கப்பட்டுள்ள இத்தகைய தீர்ப்பானது நீதியின் அடிப்படையில் யாரும் இறந்தவர்களுக்கான நினைவினை செலுத்துவது தவறு அல்ல என்ற உணர்தலை வெளிப்படுத்துகின்றது. இருந்தாலும் அரச தலைவர்கள் இராணுவத் தரப்பின் துணையுடன் வடக்குக் கிழக்குப் பகுதியில் யுத்தத்தில் இறந்த பிள்ளைகளின் நினைவேந்தலைத் தடுக்கும் நோக்குடன் துயிலுமில்லங்கள், நினை வேந்தல் செய்யும் இடங்கள், சந்திக்குச் சந்திகள் என இராணுவத்தினரைத் தரையிறக்கம் செய்து மக்களை அச்சப்படச் செய்து வருகின்றனர். இது உண்மையில் மனித உரிமை மீறல் என்பதோடு, ஒரு இனத்தின் உரிமையினை மறுக்கும் செயல் என்றும் உலகின் பல்தரப்பட்ட மனித உரிமை ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனாலும் இலங்கை அரசு அதனைச் செவிசாய்ப்பதாக இல்லை. இந்நிகழ்வு மேலும் தமிழ் மக்களை சிங்கள அரசின் மீதும், சிங்கள இனத்தின் மீதும் அதிருப்தியை ஏற்படுத்தச் செய்யும் செயலாகவே மாறியிருக்கின்றது. இத்தகைய செயல்கள் தொடர்ந்தும் நிகழுமாக இருந்தால் தமிழ் மக்கள் பிரிவினையினை நோக்கி மீண்டும் நகரும் சூழலே உருவாகும் என்பதனை அரச தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசதலைவர் ஜனநாயகத்தை மதிக்கும் பண்புடையவராக இருந்தால் அதன் மீது விருப்புக் கொண்டவராகத் தன்னை வெளிப்படுத்த நினைத்தால் தமிழ் இனத்தின் உரிமைகள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதில் கவனஞ் செலுத்த வேண்டும். ஒரே நாடு ஒரே சட்டம் என்பது எல்லா இனத்தினையும் உள்ளடக்கியதே என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் அரச தலைவர் எல்லா இன மக்களுக்கும் தலைவர் என்பதனைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.




**'பேசாப் பொருளையும் பேசும் குரல்'**

# பைடன் - புடின் சந்திப்பு அமெரிக்க மீள் எழுச்சிக்கான உத்தியாகுமா?

ஐ.வி.மகாசேனன்

அரசியல் இராஜதந்திரத்தில் சந்திப்புக்களும் உரையாடல்களும் கனதியான பெறுமதி பெறுகிறது. ஆயினும் கொரோனாப் பெருந்தொற்று முடக்கங்கள், பயணத்தடைகள் தலைவர்களுக்கிடையிலான நேரடியான சந்திப்புக்களைத் தவிர்த்து வந்தது. தற்போது நேரடியான சந்திப்புக்களுக்கான களங்கள் திறக்கப்பட்டுள்ள போதிலும் முழுவீச்சில் இடம்பெறவியலாத நிலை நிலவுகிறது. இந்நிலையில், சர்வதேச அரசியலில் நிகழ்நிலை சந்திப்புக்கள் ஓர் அங்கமாக வளர்ச்சி பெற்று வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சந்திப்பு இராஜதந்திர பொறிமுறையில் அதிக நாட்டத்தைச் செலுத்துகின்ற போதிலும், சந்திப்புக்கள் இறுதியில் அமெரிக்கா எதிர்பார்த்த விளைவுகளைத் தருபவைகளாக அமைவதில்லை. எனினும் தொடர்ச்சியாக ஜோ பைடன் தனது பிரதான போட்டி அரசுகளின் தலைவர்களுடன் சந்திப்புக்களைத் திட்டமிட்டு வருகின்றார். சீனா ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடனான நிகழ்நிலை சந்திப்புக்குப் பின்னர் தற்போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான சந்திப்புக்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. இக்கட்டுரை பைடன்-புடின் சந்திப்புக்கான சர்வதேச அரசியல் சூழல் காரணிகளைத் தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பின்னர் கடந்த ஜீன்-16(2021) அன்று பைடன்-புடின் இடையே முதலாவது நேரடிச் சந்திப்பு மகாநாடு ஜெனிவாவில் இடம்பெற்றது. குறித்த மாநாட்டில் இரு தலைவர்களதும் சந்திப்பின் ஆரம்பத்திலிருந்து நிறைவுப்பகுதி வரை நிகழ்ந்த அனைத்து விடயங்களையும் அவதானிக்கும் போது நெருக்கமில்லாத இருநாட்டுத் தலைவர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக அவர்களது உடல்மொழி காட்சிப்படுத்தியது. அத்துடன் மாநாட்டு நிறைவிலும் இரு தலைவர்களும் இணைந்து அறிக்கை வெளியிடுவதனையும் தவிர்த்திருந்தனர். அம்மாநாட்டுக்கு முன்னர் ரஷ்ய ஜனாதிபதியைக் கொலைகாரன் என்றும் ரஷ்சியாவின் நடவடிக்கைகளை ஆக்கிரமிப்புக்கள் என்றும் எச்சரிக்கைகளை வெளிப்படுத்திவிட்டு அவ்வகைத் தலைவரை பேச்சுவார்த்தை மேசையில் நேருக்கு நேர் சந்திப்பது என்பது ஜோ பைடன் உள்ளார்ந்த ரீதியில் பலவீனமான தலைவர் என்பதை அடையாளப்படுத்தும் செயலாகியது. அதேநேரம் விளாடிமிர் புடின் அமெரிக்காவைப் பொதுவெளியில் விமர்சிக்கும் போது முதிர்ச்சியோடும் சரியான அளவுகோலோடும் செயற்பட்டது மட்டுமன்றி ஜோ பைடன் மீதான அவதூறான எந்த வார்த்தைப் பிரயோகத்தையும் மேற்கொள்ளாது தவிர்த்து வந்தமை ஜெனீவா சந்திப்பில் புடின் பலத்தை முதன்மைப்படுத்தி இருந்தது.

முழுமையாக ஜெனிவா மாநாடு அமெரிக்காவிற்கு எதிர்வினையான விளைவுகளையே ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையிலான மெய்நிகர் சந்திப்புக்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகக் கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் நவம்பர்-17அன்று செய்தியாளர்களிடம் உறுதிப்படுத்தினார். அன்றைய தினம் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் மற்றும் ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரி நிகோலாய் பட்ருஷே இடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பு தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் எமிலி ஹார்னின், “இருவரும் அமெரிக்க-ரஷ்ய உறவு தொடர்பான பல்வேறு முக்கிய விடயங்களைப் பற்றி விவாதித்ததாகவும், ஆனால் சந்திப்புக்கான தயாரிப்புகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை” என்றும் தெரிவித்துள்ளார். எனினும் பெஸ்கோவ், “இரு அதிகாரிகளும் உக்ரைன், இணையப் பாதுகாப்பு மற்றும் போலந்துடனான பெலாரஸின் எல்லையில் புலம்பெயர்ந்தோர் நெருக்கடி குறித்து விவாதித்ததாகவும், இது அனைத்தும் உயர் மட்டத் தொடர்புக்கான தயாரிப்பின் கட்டமைப்பில் இருந்தது” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பைடன்-புடின் சந்திப்புக்கான ஏற்பாடுகள் இடம்பெறும் நிலையில் அமெரிக்க-ரஷ்ய உறவின் சூழமைவை அறிந்து கொள்ளல் அவசியமாகிறது.

முதலாவது, உக்ரைன் சார்ந்து அமெரிக்க-ரஷ்ய உறவு கடுமையான நெருக்கடியில் காணப்படுகிறது. உக்ரைனுடனான எல்லைக்கு அருகில் ரஷ்ய இராணுவ உபகரணங்களைக் குவிப்பது குறித்து அமெரிக்க அதிகாரிகளிடையே எச்சரிக்கைகள் அதிகரித்து வருகின்றது. பல வாரங்களாக, உக்ரேனிய எல்லையில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அந்தோனி பிளிங்கன் குற்றச்சாட்டுக்களை வெளிப்படுத்தி வருகிறார். “ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நோக்கங்கள் என்னவென்று எங்களுக்குத் தெரியாது, ஆனால் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும். உக்ரைன் அல்லது வேறு எந்த நாட்டிலிருந்தும் சில மாயையான ஆத்திரமூட்டல்களை மேற்கோள் காட்ட முயற்சிக்கும் விளையாட்டு எங்களுக்குத் தெரியும்.” என்றும் குற்றம் சுமத்தியுள்ளார். மாறாக ரஷ்யாவும் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலையீட்டை எச்சரித்துள்ளது. ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் கூட்டத்தில் புடின், “கிரெம்ளினின் சிவப்புக் கோடுகளை மேற்கு நாடுகள் மதிக்கவில்லை மேற்கத்தியப் பங்காளிகள் உக்ரைனிற்கு நவீன ஆயுதங்களை வழங்குவதன் மூலம் நிலைமையை மோசமாக்குகிறார்கள். கருங்கடலில் ஆத்திரமூட்டும் இராணுவ சூழ்ச்சிகளை நடத்துகிறார்கள்” என்று குற்றம் சாட்டினார். இதன் விளைவான அச்சங்கள் அமெரிக்காவிற்கும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகளுக்கும் மற்றும் ரஷ்யாவிற்கும் இடையே இராஜதந்திர நடவடிக்கைகளின் ஒரு சலசலப்பைத் தூண்டியுள்ளன.



இரண்டாவது, பெலாரஸ்-போலந்து எல்லையில் அகதிகளை வெளியேற்றும் விவகாரத்திலும் ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அமெரிக்கா குற்றஞ்சுமத்துகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் நீண்டகாலத் தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோவின் சர்ச்சைக்குரிய வெற்றிக்குப் பின்னர் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளைக் கைவிடுமாறு பெலாரஷ்ய அரசாங்கம் மத்திய கிழக்கு குடியேற்றவாசிகளைப் போலந்துக்கு அனுப்பியதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் பெலாரஸின் ஒரே முக்கிய கூட்டாளியும், முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவாளருமான ரஷ்யா, நெருக்கடியைத் திட்டமிட்டதாகக் கூறுகிறது. மேலும், பதட்டமான மோதலுக்கு எதிர்வினையாகச் சமீபத்திய நாட்களில் பெலாரஸுடனான போலந்தின் எல்லையில் சுமார் 15,000 போலந்து வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர் அவர்களுக்கான பயிற்சி மற்றும் ஆயுத உதவிகளை நேட்டோ தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. மறுமுனையில் நவம்பர் 10,11(2021) அன்று பெலாரஸ் வான்பரப்பில் இரண்டு ரஷ்யன் Tupolev Tu-22M3 சூப்பர்சோனிக் நீண்ட தூரக் குண்டுவீச்சுகளை பறக்கவிட்டு ரஷ்யாவின் பெலாரஷ்சிற்கான ஆதரவை உறுதி செய்தது.

மூன்றாவது, ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே ஆயுதப் பயன்பாடுகள் தொடர்பிலான சச்சரவுகள் அதிகரித்து வருகின்றது. நவம்பர் மாத(2021) தொடக்கத்தில் இரண்டு வெவ்வேறு திசைகளில் இருந்து ரஷ்யா மீது அமெரிக்கக் குண்டுவீச்சு விமானங்கள் அணு ஆயுதத் தாக்குதல் நடத்த ஒத்திகை பார்த்ததாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் நவம்பர்-23 அன்று குற்றம் சாட்டினார். மற்றும் ரஷ்ய எல்லையில் இருந்து 20கி.மீ தொலைவில் விமானங்கள் வந்ததாக புகார் கூறினார். ஆனால் பென்டகன் அதன் பயிற்சிகள் அந்த நேரத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதாகவும் சர்வதேச நெறிமுறைகளுக்கு இணங்குவதாகவும் கூறியுள்ளது. மாறாக அமெரிக்க அதிகாரிகள், ரஷ்யா அதன் தெற்கு அண்டை நாடான உக்ரைன் மீது தாக்குதல் குறித்து கவலை தெரிவிக்கின்றனர். எனினும் கிரெம்ளின் இந்தப் பரிந்துரையை தவறானது என்று நிராகரித்துள்ளது.

நான்காவது, பொருளாதாரத் தடைகள் அமெரிக்க-ரஷ்ய முரண்பாட்டை வலுவாக்கிறது. ரஷ்யாவுக்கும் ஜேர்மனிக்கும் இடையே ‘நார்ட் ஸ்ட்ரீம் 2 (Nord Stream 2)’ எரிவாயு குழாய்த்திட்டத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் மீது அமெரிக்கா நவம்பர்-22 (2021) அன்று புதிய தடைகளை விதித்துள்ளது. தடைகள் திட்டத்தை முடிக்கும் முக்கிய நிறுவனத்தை குறிவைக்கவில்லை. மாறாக ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட கப்பல் நிறுவனம் மற்றும் கப்பலைக் குறிவைக்கிறது. அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன், சமீபத்திய தடைகள் Transadria Ltd என்ற கப்பல் நிறுவனத்திற்கும் அதன் கப்பலான மார்லின் மீதும் அனுப்பப்படும் என்றார். அமெரிக்கா, உக்ரைன் மற்றும் பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ‘நார்ட் ஸ்ட்ரீம் 2’ ரஷ்யாவிற்குப் பிராந்திய அரசியலில் அதிக செல்வாக்கைக் கொடுக்கும். மற்றும் ஐரோப்பாவின் எரிசக்தி பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று கவலை தெரிவித்துள்ளன. தடை பற்றிய அறிவிப்பில் அந்தோனி பிளிங்கன், “நார்ட் ஸ்ட்ரீம் 2 பைப்லைனை எங்கள் நிர்வாகம் பொருளாதாரத் தடைகள் உட்பட தொடர்ந்து எதிர்த்தாலும், நாங்கள் ஜேர்மனி மற்றும் பிற நட்பு நாடுகள் மற்றும் பங்காளிகளுடன் இணைந்து குழாய் மூலம் ஏற்படும் அபாயங்களைக் குறைக்க தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.” என்று தெரிவித்துள்ளார். எனவே ரஷ்யா-ஜேர்மனி வர்த்தக நடவடிக்கையிடேயே பெருளாதாரத் தடை விதித்துள்ள போதிலும், அது முழுமையாக ரஷ்யாவைக் குறிவைத்த செயற்பாடு என்பது தெளிவாகிறது.

**“பெலாரஸ்-போலந்து எல்லையில் அகதிகளை வெளியேற்றும் விவகாரத்திலும் ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அமெரிக்கா குற்றஞ்சுமத்துகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் நீண்டகாலத் தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோவின் சர்ச்சைக்குரிய வெற்றிக்குப் பின்னர் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளைக் கைவிடுமாறு பெலாரஷ்ய அரசாங்கம் மத்திய கிழக்கு குடியேற்றவாசிகளை போலந்துக்கு அனுப்பியதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.”**

எனவே, இத்தகைய முரண்பாட்டு சூழலிலே பைடன் - புடின் சந்திப்புக்கான ஏற்பாடுகள் மீள பைடன் நிர்வாகம் தனது பலவீனத்தை வெளிப்படுத்த முனைகிறதோ என்ற எண்ணப்பாங்குகள் சர்வதேச அரசியல் பரப்பில் எழுகிறது. எதுஎவ்வாறாயினும் இம்முறை ரஷ்யா மீதோ அல்லது புடின் மீதோ பைடன் நேரடியாக எவ்வித முரண்பாடான கருத்துக்களையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது முன்னைய சந்திப்பிலிருந்து மாறுபட்ட காரணியாக உள்ளது. எனினும் முன்னைய அனுபவங்கள் மற்றும் அமெரிக்க-ரஷ்ய உறவின் தற்போதைய நிலைமைகளை நோக்குகையில் புடின்-பைடன் இரண்டாவது சந்திப்பும் அமெரிக்காவின் எதிர்பார்ப்புக்களை ஈடு செய்யும் என்பதில் சந்தேகத்தையே உருவாக்குகிறது. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# நாடு, சிங்கள மக்களுக்கு மட்டுமே உரியதா?

தொடர்ந்தும் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை சிங்களப் பேரினவாதம் அடக்கி ஒடுக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகின்றது என்பதனையே மாவீரர் தினத்தினை தமிழ் மக்கள் கொண்டாடி விடுவார்கள் என்ற அச்சத்தில் வடக்குக் கிழக்கு பகுதிகளின் தெருக்கள் எங்கும் இராணுவத்தினரைக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் செயற்பாடானது விளக்குகின்றது. வன்னி இறுதி யுத்தத்தில் இறந்த மக்களின் நினைவுகூறல் நிகழ்வினையும் கொரோனாப் பெருந் தொற்றினைக் காரணம் காட்டி தடுத்திருந்தமையும் இங்கு கவனத்திற்குரிய விடயமாகும்.

இத்தகைய அரசின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் உரிமையினை மறுக்கும் செயல் எனப் பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வரும் நிலையிலும் அரசு விடாப்பிடியாக இந்த வருடம் எப்பாடுபட்டாவது மாவீரர் நினைவேந்தலை தடுத்து நிறுத்துவது என்ற முடிவுடன் செயற்பட்டு வருகின்றது. இது ஒரு பச்சை மனித உரிமை மீறல் செயற்பாடு என்பதனைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்று இல்லை. ஒரு ஜனநாயக நாட்டில் யாரும் யாரையும் அஞ்சலிப்பதற்குப் பூரண உரிமை உடையவர்கள். இதன் அடிப்படையில்தான் பிரிட்டிஷ் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் நிலவரம் மோசமான நிலையில் உள்ளது என்று அறிக்கையினை வெளியிட்டிருக்கின்றது.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் தமிழர் தாயகப்பகுதிகளில் மாவீரர் தினம் சுதந்திரமாகவும் விமர்சையாகவும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அன்றைய அரசாங்கம் தமிழ் மக்களின் உணர்வினை மதித்து மாவீரர் தினத்தினை அனுஷ்டிக்க அனுமதித்தது என்று சொல்லிவிட முடியாது. ஒரு இனத்தின் உணர்வுகளை நசுக்கும் போது அது இன்னும் வீரியத்துடன் கிளர்ந்தெழும் என்பதனை நன்கு உணர்ந்திருந்ததன் வெளிப்படே அவர்கள் அன்று தமிழ் மக்களின் எந்தவொரு செயற்பாட்டுக்கும் தடையாக நிற்காமல் செயற்பட்டதற்குக் காரணம் எனக் கருதிக் கொள்ள முடியும். உண்மையில் இன்றைய நிலையில் அது சரி என்றே தோன்றுகின்றது. இன்று அரசாங்கத்தின் மிலேச்சத் தனமான இத்தகைய செயல் இலங்கையிலும் சரி உலகின் பல பகுதிகளிலும் சரி பல்வேறுபட்ட விமர்சனங்களையும் எதிர்ப்பலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அதேவேளை இளைஞர்கள் மத்தியில் வழிப்பூட்டல்களை ஏற்படுத்தத் தவறவும் இல்லை. இது பழைய கதைகளைப் புதுப்பிக்கவும் செய்திருக்கின்றது. மாவீரர் கதைகள் தெரியாத குழந்தைகளிடமும் கதைகள் உலாவத் தொடங்கியிருக்கின்றன. ஆக மொத்தத்தில் அரசாங்கத்தின் கடும்போக்கு ஏதோவொரு வகையில் அவர்களுக்கு எதிரான செயற்பாடாகவும் மாறிக் கொண்டிருக்கின்றது.

உலகில் எத்தனையோ போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. எத்தனையோ துயரங்கள், இழப்புக்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவை அனைத்தும் இன்றுவரை நினைவு கூரப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஒரு இனத்தின் உணர்வுகளை அவ்வளவு இலகுவாக மழுங்கடிப்புச் செய்துவிட முடியாது. அது காலத்தின் நீட்சியில் கலந்து நீண்டுகொண்டேயிருக்கும் ஆத்மார்த்தமான உணர்வு. எத்தனை நூற்றாண்டு கடந்தாலும் சந்ததி சந்ததியாய் கடத்தப்பட்டுக் கொண்டே செல்லும். இந்நிலையில் தமிழ் மக்கள் தமது பிள்ளைகளை நினைத்து மனமுருகி அவர்களை அஞ்சலிக்கும் நாளாகவே இத்தனை காலமும் நவம்பர் 27 இனைக் கருதி வந்திருக்கின்றனர். அந்த நாட்களையே ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் நினைவு நாளாகவும் மானசீகமாக எண்ணத் தலைப்பட்டுள்ளனர் அல்லது பழக்கப்பட்டுப் போயுள்ளனர். அவ் உணர்வுகளை உதாசீனம் செய்வதுபோலவே தமிழர் தாயகப் பகுதிகளில் அரசின் செயற்பாடுகள் அமைகின்றன. இது தமிழ் மக்களை உணர்வு ரீதியாக பாதிப்புக்குள்ளாக்கும் செயற்பாடு ஆகும். இலங்கையில் சிங்கள மக்களுக்கு எவ்வளவு உரிமை, சுதந்திரம் இருக்கின்றதோ அதே அளவு உரிமையும், சுதந்திரமும் ஏனைய இனத்திற்கும் உண்டு என்பதனை பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்களும், சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கு இவ்வாறான அநீதிகள் நிகழும் போது சிங்கள மக்களும் சேர்ந்து குரல் கொடுப்பதே தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட வாய்ப்பளிக்கும். அதுவே இலங்கையில் இத்தனையாண்டுகள் நிலவிவரும் சிங்கள தமிழ் முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி இடவும் வாய்ப்பினை ஏற்படுத்தும்.

அதேவேளை அரசு நாட்டில் சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம் தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என இருக்க முடியாது. ஒரே நாடு ஒரே சட்டம் என்பதனை நாட்டில் அமுல்படுத்துவதற்கு முனைப்புக் கொள்ளும் அரசு தான் தமிழ் மக்கள் உணர்வுகளையும் சிங்கள மக்கள் உணர்வுகளையும் வேறுபடுத்திப் பார்க்கின்றது. ஜே.வி.பி யினர் ஒரு காலத்தில் அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள்தான் அவர்கள் தமது வீரர்களை நினைத்து அஞ்சலிக்கும் நிகழ்வுகளுக்கு அரசாங்கம் எப்போதும் தடை விதித்ததோ அல்லது அடக்கியதோ கிடையாது. ஆனால் தமிழ் மக்களின் உணர்வுகளை மட்டும் இவ்வாறு அடக்குவது எவ்வளவு தூரம் நியாயமானது என்பதே பொது வெளியில் முன்வைக்கப்படும் முக்கியமான கேள்வியாகும். நாட்டில் இனங்களுக்கிடையில் மேலும் மேலும் முரண்பாடுகள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்குரிய புரிந்துணர்வே அரசுக்கு இப்போது தேவை. ஒரே நாடு ஒரே மக்கள் என்றுரைக்கும் அரசின் குரல் உண்மையானதாக இருப்பதற்கு அரசு ஏனைய இனத்தின் உரிமைகள், உணர்வுகள் என்பவற்றினை மதிப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். பிரயோசனமற்ற அடக்குமுறைகளும் தடைகளும் இனங்களுக்கிடையில் மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்துமே தவிர ஐக்கியத்தினை ஏற்படுத்தாது. இதனைப் புரிந்து செயற்படுவதில்தான் நாட்டின் வெற்றி தங்கியுள்ளது. ■

---

# மக்கள் உணர்வுகளை உதாசீனம் செய்யக் கூடாது

தந்திரன்



சிங்கள மக்களின் பெருவாரியான வாக்குகளால் மட்டுமே ஆட்சிப் பீடம் ஏறியதாகச் சொல்லும் கோத்தபாய அரசு நாட்டு மக்களுக்கு எந்த வகையான நன்மைகளையும் ஏற்படுத்தித் தராது. காலங்களை மட்டும் கடத்திச் செல்கின்றன. கொரோனாப் பெருந் தொற்றைக் காரணம் காட்டி செய்ய வேண்டிய அபிவிருத்தி தொடர்பான நல்ல விடயங்களை விடுத்து அபிவிருத்தி என்ற பெயரில் ஊழல்கள் நிறைந்த அரசாகவே தன்னை வடிவமைத்து விடுவதாக அவருக்கு வாக்களித்த மக்கள் உட்படபலரும் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறு சிங்கள மக்களின் மனங்களைக் கூட தனது ஆட்சிக்காலத்தில் வெல்ல முடியாத அரசினால் எவ்வாறு காலகாலமாகத் தங்களது உரிமைகளுக்காகவும் நியாயத்திற்காகவும் போராடி வரும் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியும்.

அதாவது சாதாரண சிங்கள மக்களின் சாதாரண அபிலாசைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத அரசினால் எவ்வாறு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் கொடுக்க முடியும் என்பது தொடர் கேள்வியாக எழுகின்றது. எந்தக் காலத்திலும் அரசு மக்களின் மன நிலை சார்ந்து, சாத்தியப்பாடான செயற்பாடுகளை முன்னெடுக்காது என்பதும் பொதுவான புரிதலுக்குரியது.

இந்த நிலையில்தான் விடுதலைப் போராட்டத்தில் மடிந்த வீரர்களினதும் மக்களினதும் நினைவுகூரலை மாவீரர்தின நாளில் மேற்கொள்வதற்காக முஸ்தீபுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுவும் முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் பின்னர் இது தீவிரம் பெற்றுக் காணப்படுகிறது.

உலக நாடுகளைப் பொறுத்தவரையில் விடுதலையை அவாவி நிற்கும் ஒவ்வொரு நாடும் தமது போராட்ட வீரர்களின் மரணங்களை எழுச்சி நாளாகவோ துக்க தினமாகவோ கொண்டாடப்பட்டு வருவதும் நாம் அறிந்ததே. சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தமிழர்கள் மாத்திரம் அல்ல சிங்கள மக்களும் போராடி வந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஜே.வி.பி தனது வீரர்களுக்காக நினைவுகூரலைத் தொடர்ச்சியாக மேற்கொண்டே வருகிறது.

ஆனால் தமிழர்களுக்கான தீர்வை மட்டுமின்றி இறந்த வீரர்களின் - மக்களின் நினைவைக் கூட, குறைந்தபட்ச உரிமையைக்கூட பயங்கரவாதச் செயலென மறுதலிக்கும் சிங்கள தரப்பிடமிருந்து எத்தகைய நியாயத்தினை - தீர்வினை எதிர்பார்க்க முடியும்.

கடந்த நாட்கள் தொடக்கம் இந்த பத்தி எழுதப்படும்வரை மாவீரர் நாளுக்குத் தடை கோரி நீதிமன்ற வழக்குகளும் பொலிஸ் - இராணுவ ரோந்துகளும், சந்திகளில் தொடர்ச்சியாக இராணுவப் பிரசன்னமும், கனரக வாகனங்களின் ஆர்ப்பரிப்பும் என வீதிகளும் நகரங்களும் அச்சம் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

இந்த நிலைமை ஏதோவொரு யுத்தத்தினை எதிர்கொள்வதற்கான அவசரகால நிலைமைக்கான தயார்ப்படுத்தல்களாகவே எண்ணத்தோன்றும். ஆனால் அது முழுக்க முழுக்க பெற்றோரை இழந்த பிள்ளைகளினதும் பிள்ளைகளை இழந்த பெற்றோர்களினதும் கணவனை - மனைவியை இழந்தவர்களின் நினைவு கூரலைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கை என்பதே துக்கம் தரும் ஜனநாயக மறுப்புச் செய்தியாகக் காணப்படுகிறது.

இந்தப் பின்னணியின் பேரில்தான் ஒன்றுபடாத தமிழ்த்தலைமைகள் மாவீரர்நாளைக் கொண்டாடும் முனைப்பைக் காட்டிக்கொண்டு நிற்கின்றன. மக்களின் உணர்ச்சிகளோடு விளையாட முற்படுகின்றன.

இதுதான் இரண்டு தரப்புக்குமுள்ள பிரச்சினை மாவீரர்நாள் நினைவேந்தலைக் கொண்டாடித் தமிழ் மக்கள் மத்தியில் நாயக விம்பத்தினை ஏற்படுத்துவது தழிழ்த் தலை மைகளின் திட்டமாக இருந்தால் அதனைக் கொண்டாடாது தடுத்து சிங்கள மக்கள் மத்தியில் நாயக விம்பத்தினை ஏற்படுத்துவது சிங்களத் தலைமைகளின் திட்டமாக உள்ளது.

இக்கட்டுரையாளர் சொல்ல விளைவதெல்லாம் மக்களின் உணர்வுகளோடு எந்தத் தரப்பும் விளையாடமல் இதயசுத்தியுடன் உறவுகளை இழந்த மக்களின் குறைந்தபட்ச உரிமையான நினைவு கூரும் உரிமையினைப் பெற்றும் - கொடுத்தும் உதவுவதே.

இதன் மூலமே இரு தரப்பினரும் தம்மிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கும். தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கான ஓரளவு சாத்தியப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் பகையுணர்வும் வெறுப்புணர்வும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ■



# இல்லாமை என்பது பிரச்சினையல்ல

செல்வின்

“திட்டமிடுவதில் தோற்றுப்போகின்றவன் தான் தோற்றுப்போவதற்குத் திட்டமிடுகின்றான்”

திட்டமிடுதல் என்பது நாங்கள் செய்யப்போகும் செயற்பாடுகளை முன்கூட்டியே தீர்மானிக்கும் ஒரு அவசியமான படிமுறையாகும். ஏனெனில் நாங்கள் செய்கின்ற செயல்கள் அனைத்திலும் ஏதாவது ஒரு வகையில் வளங்கள் செலவு செய்யப்படுகின்றது. இயற்கையாகவே தன்னை மீளப்புதுப்பிக்க முடியாத அனைத்துக்காரணிகளும் எங்களுடைய பயன்பாடுகளின் போது குறைவடைந்து செல்கின்றது. எனவே அத்தகைய காரணிகளை நாம் பயன்படுத்தி எமது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது அங்கு எமது செயற்பாடுகள் யாவும் மிகவும் சிறப்பான திட்டமிடலுக்கு ஊடாக வடிவமைக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

நாங்கள் பயன்படுத்தும் காரணிகளில் எல்லோருக்கும் பொதுவான காரணிகளைப் பொருளாதாரக் கருத்தில் “பொதுப்பண்டம்” (Common Goods) என்று கூறுவர். பொதுப்பண்டங்கள் என்னும்போது அங்கு இரண்டு விடயங்கள் முன்னிலைப்படுத்தப்படும்.

1. எத்தகைய காரணிகளை நுகர்வதற்கு (பயன்படுத்துவதற்கு) ஒரு தனிநபருக்கோ அல்லது சமூகத்திற்கோ தடைவிதிக்க முடியாதோ அத்தகைய காரணிகளைப் பொதுப்பண்டம் எனலாம்.

2. தனிநபரோ அல்லது சமூகமோ ஒரு பண்டத்தையோ காரணியையோ பயன்படுத்துவதனால் ஏனையோர் அதனைப் பயன்படுத்துவதினால் பற்றாக்குறையோ குறைவோ ஏற்படாது என்றால் அத்தகைய காரணிகளைப் பொதுப்பண்டங்கள் எனலாம்.

முன்பு ஒரு காலத்தில் காற்று ஒரு பொதுப்பண்டமாகக் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது சுத்தமான காற்று என்பது ஒரு பற்றாக்குறையான காரணியாக மாறிக் கொண்டுள்ளது. காற்றினை நாங்கள் எந்தளவிற்குச் சுவாசிக்கின்றோம் என்பது மட்டும் எங்களது நுகர்வின் அளவாகத் தீர்மானிக்கப்படமுடியாது. எங்களது செயற்பாடுகளால் - தீ மூட்டி எரித்தல், காற்றினை மாசுபடுத்தக் கூடிய வாயுக்களை உற்பத்தி செய்து காற்றினை மாசுபடுத்துதல், வாகனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றினை இயக்குவதனால் காபனீரொட்சைட் போன்ற காரணிகள் காற்றில் கலத்தல், வெடிபொருட்கள் ஆயுதங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதனால் அபாயகரமான வாயுக்கள் காற்றில் கலத்தல் என்பனவும் எமது நுகர்வின் அளவுடன் சேர்த்துக்கூட்டப்படவேண்டும். இதனால் தற்போது சுத்தமான காற்று என்பது பொதுப் பண்டம் என்ற பட்டியலில் இருந்து அத்தியாவசியப் பண்டங்களின் பட்டியலில் இணைந்துள்ளது.

நாங்கள் எங்களது செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அச்செயற்பாடுகளினால் எதிர்பார்த்த ஒரு வெளியீடு அல்லது தாக்கம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அத்தகைய எதிர்பார்க்கைகள் நேரடியாக கண்ணுக்குத் தெரியக்கூடிய விடயங்களாகவும் அளவிடக்கூடிய விடயங்களாகவும் இருக்கலாம். கண்ணுக்குத் தெரியாதவையாகவும் அளவிடமுடியாததாகவும் மறைமுகமாகவும் காலநீட்சியிலும் பயன்தரு விளைவுகளைக் கொண்டிருப்பவைகளாகவும் இருக்கலாம்.

வளங்களை அர்ப்பணிக்கும் போது எதனை எதிர்பார்க்கின்றோமோ அது கிடைக்காவிட்டால் அதற்கென அர்ப்பணிக்கப்பட்ட வளங்கள் யாவும் விரையமே. அதிகளவு வளங்களை அர்ப்பணித்து அதனிலும் குறைவான பெறுமதியுடைய விளைவு கிடைக்கப் பெறுமானால் அல்லது எதிர்பார்க்கப்பட்டளவு விளைவு கிடைத்தும் அதனால் எதிர்பார்க்கப்படும் தாக்கம் குறைவாக இருக்குமானால் அந்த நிலையிலும் அங்கு வளவிரயமே ஏற்படுகின்றது.



உதாரணமாக விவசாயத்திற்காக நிலம், மூலதனம், உழைப்பு, நேரம், வேறு உள்ளீடுகள் ஆகியவற்றினைப் பாவித்து உற்பத்தி செய்யப்படும் போது அவ் விளைச்சல் யாவும் முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் பல்வேறு காரணங்களால் விளைச்சலின் ஒருபகுதி விரையமாகிப் போக மிகுதியளவுதான் பயன்பாட்டிற்கு உட்படுமானால் இங்கும் வளவிரையமே ஏற்படுகிறது. இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் விவசாயத்தினூடாக விளைநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் விளைவின் 30 தொடக்கம் 40 வீதமானவை இறுதிப்பயன்பாட்டிற்குக் கிடைக்காமலேயே இடையில் விரையமாகிப்போகின்றது. அறுவடை, சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல், பதனிடல், பொதியிடல், விநியோகம், பயன்படுத்தல் ஆகிய நிலைகளில் ஏற்படும் தவறுகள் மற்றும் குறைபாடுகள் காரணமாக இவ்விரையம் ஏற்படும் போது அது பயன்பாட்டிற்கு கிடைத்த முடிவுப்பொருளின் சராசரி உற்பத்திச் செலவினை அதிகரிக்கும்.

எனவே ஒரு எதிர்பார்க்கப்பட்ட தாக்கத்தை அல்லது விளைவினைக் கருத்திற்கொண்டு வளங்களை அர்ப்பணிக்கும் போது அங்கு தெளிவானதும் துல்லியமானதுமான திட்டமிடல் செயன்முறை முக்கியமானதாகும்.

நாங்கள் ஒரு முயற்சியினை முன்னெடுக்கும்போது அங்கு எம்மிடம் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட




எதிர்பார்க்கைகள் காணப்படலாம். அவை தெளிவாக வரையறுக்கப்படவேண்டும். இலக்கற்ற செயற்பாடும் செல்லுமிடம் தெரியாத பயணமும் முட்டாள்த் தனமானது.

நாங்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட பிரச்சினை அல்லது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம். இவ்விடத்தில் எங்களது பிரச்சினை என்பது யாது? எனத் தெளிவாக நாம் வரையறுக்கவேண்டும்.

மற்றவர்களிடம் இருக்கின்ற பொருள் அல்லது தகுதிநிலை எங்களிடம் இல்லை என்பது பிரச்சினையாக வரையறுக்கக்கூடாது. எங்களிடம் மோட்டார் வண்டி இல்லை, எங்கள் ஊரில் பெரிய சிறப்பு அங்காடி இல்லை, எங்களுடைய போக்குவரத்திற்கு அதிசொகுசு போக்குவரத்துப் பேரூந்து அல்லது அதிவிசைப் பயணிகள் படகு இல்லை, எங்கள் ஊரில் தரம் மேம்படுத்தப்பட்ட விரைவுச்சாலை இல்லை போன்று எமது விடயங்களைப் பிரச்சினைகளாக விவரிக்க முடியாது. எங்களிடம் இல்லாமை ஒரு பிரச்சினையல்ல.

உதாரணமாக நெடுந்தீவில் உள்ள மக்களிடம் உங்கள் பிரதானமான பிரச்சினை யாது? எனக்கேட்டால் அவர்கள் ஒருமித்த குரலில் தங்களுக்குப் பாரிய போக்குவரத்துப்படகுச் சேவை இல்லை எனச்சொல்வார்கள். ஆனால் அவர்களது பிரச்சினை பாரிய போக்குவரத்துப்படகு இல்லாமை அல்ல. அவர்களது பிரச்சினைகள் வேறு.

தீவிலுள்ள மக்கள் கடலினைத் தாண்டி குடாநாட்டுடன் தொடர்புகளைப் பேணுவதில் வரையறைகளை எதிர்கொள்கின்றார்கள். அதனால் அவர்களுக்கும் குடாநாட்டிற்கும் இடையில் பெரும் அபிவிருத்தி இடைவெளி காணப்படுகிறது.

இலகுவில் பழுதடையக்கூடிய விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப்பொருட்களை உரிய நேரத்தினுள் நகரத்தின் சந்தையில் கொண்டுவந்து விற்பனை செய்து உரிய பெறுமதியினைப் பெறுவதற்குத் தற்போதுள்ள போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தும் போது விவசாயிகளும் மீன்பிடியாளர்களும் அதிகளவு நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

> **நான் ஏன் இந்தக் கபடத்தனமான விளையாட்டினை எமது சொந்தச் சமூகத்துடன் சகமனிதனுடன் விளையாடுகின்றேன்? நான் யாருக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும்? எனக்குக் கூலிகொடுக்கும் நிறுவனங்களினதும் அதன் உரிமையாளர்களாக அல்லது அதனைக் கட்டுப்படுத்துபவர்களாக இருக்கும் தரகு முதலாளித்துவ சக்திகளின் அபரிமிதமான இலாப வேட்கைகளின் கையாட்களாக எமது சமூகம் மிக மோசமாகச் சீரழிந்து போவதற்கு நான் எவ்வாறு உடந்தையாக இருக்கின்றேன்? போன்ற வினாக்களை நாங்கள் எங்களை நோக்கி எப்போதாவது கேட்டதுண்டா?**

நேரத்தைக் கூடியளவில் கொண்டதும் உடல் உபாதைகளைத் தரக்கூடியதுமான கடல்வழிப் பயணத்தினைக் காரணங்காட்டிப் பல்வேறு அரச பணியாளர்களும் ஆசிரியர்கள், வைத்தியர்கள் போன்றோரும் தீவில் பணிசெய்ய மறுப்பதனால் மாணவர்களுக்குச் சிறப் பான கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

கல்விக்காக நகரத்தை நோக்கிய இடப்பெயர்வு ஒவ்வொரு குடும்பத்தினதும் பிள்ளைகளின் கல்விச் செலவை அதிகரிக்கின்றது.

தீவின் குடித்தொகைப்பலம் குறைகின்றபோது அரசின் சேவைகள் துறைக்கான ஒதுக்கீடும் குறைந்து போகின்றது. இதனால் உள்ளூரிலுள்ள பொதுக்கட்டுமானங்களின் பராமரிப்பும் சீர்செய்தலும் முதன்மையற்றும்போக அது உள்ளூரில் வாழும் மக்களின் அன்றாடச் செயற்பாடுகளை மோசமாகப் பாதிக்கின்றது.

மறுபக்கத்தில் இக்கல்விச்செலவினை எதிர்கொள்ள முடியாத குடும்பங்களின் பிள்ளைகளின் பாடசாலை இடைவிலகல் வீதம் அதிகரிக்கின்றது.

இயற்கையின் சீற்றம் அதிகமுள்ள காலங்களில் தீவு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உட்கொண்டுவருவதில் இருக்கும் மட்டுப்பாடுகள் காரணமாக உள்ளூர் சந்தையில் பொருட்களின் பற்றாக் குறையினால் தூண்டப்பட்ட விலை உயர்வு மக்களின் கொள்வனவு சக்தியை மிகவும் மட்டுப்படுத்துகின்றது.

இவ்வாறு நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகளைச் சரியாக அடையாளம் காணப்படவேண்டும். மாற்றாக அதிவிரைவுப் பயணிகள் மற்றும் பொதிகள் படகு இல்லை என்பதாக பிரச்சினைகளைக் குறிப்பிடக்கூடாது.

நாங்கள் எங்கள் செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் போது பிரச்சினைகளின் மூலங்களைக்கண்டறிந்து அதனை மாற்றியமைப்பதனையே இலக்காகக் கொள்ள வேண்டும்.

இதற்கு மற்றுமொரு உதாரணத்தையும் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுத்தமான குடிநீர் இல்லை என்று ஒரு பிரச்சினை முன்வைக்கப்படுகிறது. அதற்கு தற்காலிகத் தீர்வாக குடுவையில் அடைக்கப்பட்ட வடிகட்டிய நீரினை கிடைக்கச்செய்தல் என்பது தீர்வு என அதிகளவானோர் நம்புகின்றனர். அதேவேளை கடல்நீரினைச் சுத்திகரித்து வடிகட்டி குழாய்கள் மூலம் விநியோகிக்கும் முறைமையினை ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இங்கு எழும் முதன்மையான வினாக்கள் யாழ்ப்பாணக்குடாநாடு பாலைவனத்திலா அமைந்துள்ளது?

(19 ஆம் பக்கம் பார்க்க...)



# தோல்வியின் விளிம்பில் நிற்கிறதா அரசாங்கம்?

⊖ செல்வழகன்

'தோல்வியடைந்த அரசு', 'பெயில் சேர்' என்ற வார்த்தைகளை அடிக்கடி எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களிலும், பத்திரிகையாளர் சந்திப்புக்களிலும் கேட்டிருப்போம். உண்மையில் இந்த ஆட்சி தோல்வியை நோக்கிச் செல்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. 69 இலட்சம் மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறியதும், தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான கூட்டணி பெரும்பான்மை அரசாங்கத்தை அமைத்ததும் இந்த அரசாங்கம் வீழ்த்த முடியாத பலமான அரசாங்கம் என்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்தியது.

இரண்டு பதவிக் காலத்தைக் கொண்டு அசைக்க முடியாத தலைவராக விளங்கிய மஹிந்த ராஜபக்ஷ தனது மூன்றாவது பதவிக் காலத்துக்காக முன் கூட்டியே தேர்தலை அறிவித்திருந்தார். இரவு அவருடன் ஒன்றாக அமர்ந்திருந்து அப்பம் சாப்பிட்டு விட்டுச் சென்ற மைத்திரிபால சிறிசேன அவருக்குப் போட்டியாளராக மாறி, அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவின் கதை முடிந்தது என்றே எல்லோரும் கருதினர். தாம் சுதந்திரக் கட்சியில் இருந்தவாறே தனது தம்பியாரான பசில் ராஜபக்ஷ மூலம் பொதுஜன பெரமுன கட்சியை ஆரம்பித்து, குறுகிய காலத்துக்குள்ளேயே ஆட்சி பீடமேறினார் மஹிந்த. யாரும் எதிர் பார்க்காத வண்ணம் தமது தம்பியாரான கோட்டாபய ராஜபக்ஷவையே ஜனாதிபதியாக்கினார். தான் பிரதமராக இருந்து பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை நிறுவினார்.

மறுபுறம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே பலமான ஒரு அணியினை உருவாக்கியிருந்தார். மக்களின் நாடித்துடிப்பை அறிந்து, மக்கள் ஆதரவைக் கட்டியெழுப்பக் கூடிய வகையில் எலிய என்ற அமைப்பையும், நாட்டின் பிரச்சினைகளையும், அதன் மூலங்களையும் கண்டறிந்து எதிர் காலத்தில் தீர்வு தேடக்கூடிய வகையில் வியத்மக என்ற அமைப்பையும் கட்டியெழுப்பி இருந்தார். தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்த வியத்மக அமைப்பில் இணைந்து செயற்பட்ட பல புத்திஜீவிகளையும், முப்படை அதிகாரிகளையும் பல் வேறு பதவிகளிலும் அமர்த்தினார். சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தை இவர்களைக் கொண்டு தயாரித்தார். நிறுவனப் பிரதானிகள் முதல் ஆளுநர்கள் வரை இவர்கள் நியமிக்கப்பட்டனர். மஹிந்த கூட எதிர் பார்க்காத வகையிலான ஆட்சியமைப்பினையே கோட்டாபய கட்டியெழுப்ப விழைந்தார்.

நாட்டைப் பசுமை விவசாய பூமியாக மாற்றவும், உள்ளூர் கைத்தொழில்களைப் பெருக்கி, சுயசார்புப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்பவும், நாட்டினை விரைவான அபிவிருத்திக்குள் கொண்டு வரவும் சுபீட்சத்தின் நோக்கு எதிர்பார்த்தது. ஆயினும் உலகளாவிய பெருந்தொற்று சவாலாக மாறியது. ஆரம்பத்தில் கோவிட்டைக் கட்டுப்படுத்திய, இழிவளவாக்கிய நாடாக இலங்கை தோற்றங் காட்டியது. ஆயினும் விமான நிலையத்தைச் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்ததைத் தொடர்ந்து, கோவிட் தொற்றானது பேரலையாக எழுந்து, நாட்டைப் பல கொத்தணிகளாக - அபாய வலயங்களாக - மாற்றியது. அரசாங்கம் புத்தாண்டில் நாட்டைத் திறந்து வைத்து மேலும் சீரழிவை எதிர் கொள்ளக் காரணமாகியது. கோவிட் பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக வீழ்ந்து கிடந்த நாட்டின் பொருளாதாரம் மேலும் அதலபாதாளத்துக்குச் சென்றது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏப்ரல் 26 ஆம் திகதி விவசாயத்துக்குத் தேவையான இரசாயன உரம், களை நாசினி, கிருமி நாசினி ஆகியவற்றின் இறக்குமதிக்கு அரசாங்கம் தடை விதித்தது. எந்தவித மாற்று ஏற்பாடுகளையும் செய்யாமல் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்தது. இதனால் நாட்டில் விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டன. பதுக்கப்பட்ட இப்பொருட்களின் விலைகள் கறுப்புச் சந்தையில் பெரிதும் உயர்ந்தன. விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வீதிக்கு இறங்கினர். பெரும் போராட்டங்களை நடத்தினர். அரசாங்கமோ தாம் கொண்ட கொள்கையில் இருந்து விலகப் போவதில்லை என்று அறிவித்தது. நாட்டில் தானியங்களதும், மரக்கறிகளதும் உற்பத்தி குறைந்தது. பல விளைநிலங்களில் பயிரிடலை விவசாயிகள் நிறுத்திக் கொண்டனர். சந்தையில் மரக்கறிகளின் கிடைப்பனவு குறைந்து விலை எகிறியது.

சீனாவில் இருந்து சேதனப் பசளையை இறக்குமதி செய்ய முயன்று, பரிசோதனையில் தீங்கு விளைவிக்கக்கூடிய பக்றீரியாக்கள் இருப்பது கண்டறியப்பட்டு அது நிறுத்தப்பட்டது. ஆனால் அந்தப் பசளையை ஏற்றி வந்த கப்பல் இன்னமும் இலங்கையிலேயே தரித்து நிற்கிறது. கடன் ஒப்பந்தம் செய்த மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்தது முதல் நட்ட ஈடு கோரியதுவரை சீனாவின் பொறிக்குள் சிக்கியுள்ள இலங்கை அரசாங்கம் அந்தப் பசளையை இறக்குமதி செய்தேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது.

உள்ளூர் சேதன உரம் என்ற பெயரில் ஒரு திரவத்தை (Soil Conditioner) விவசாயிகளுக்கு மானியமாக விநியோகித்தனர். அது எந்தப் பயனையும் தரவில்லை என்கின்றனர் விவசாயிகள். இந்தியாவில் இருந்து அதிக விலைக்கு நனோ நைத்திரஜன் திரவத்தைக் கொள்வனவு செய்து, அதையும் செய்து காட்டுதல்களோடு விளம்பரப்படுத்தி விநியோகித்தனர். அதிலும் எந்தப் பலனும் இல்லை என்கின்றனர் விவசாயிகள். இப்போது 7 மாதங்களின் பின்னர் காலபோகம் ஆரம்பித்து, பல நாள்கள் கழிந்த பின்னர் அரசாங்கம் உரம், களைநாசினி, கிருமிநாசினி ஆகியவற்றின் இறக்குமதிக்கான தடையை ரத்துச் செய்துள்ளது. கண் கெட்ட பின் நமஸ்காரம் போல, காலபோகப் பயிர்ச் செய்கை அழிவைச் சந்தித்த பின்னால் அரசாங்கம் இவற்றின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது. மறுபுறம் பசுமை விவசாயம் என்ற தனது செயற்பாட்டில் இருந்து விலகவில்லை என்று காட்ட முயன்றாலும், அதில் அரசாங்கம் தோல்வியையே சந்தித்துள்ளது.

பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராகவும் அரசாங்கம் பெருந் தடைகளைப் போட்டது. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை பல பொருள்களின் அதிகரிப்புக்கு அனுமதி அளிக்க மறுத்தது. பால்மா, அரிசி, கோதுமை மா, சமையல் எரிவாயு, எரிபொருள் என விலை அதிகரிப்புக்கு எதிராக அரசாங்கம் செயற்பட்டது. இதன் விளைவாக நாட்டில் பெருந் தட்டுப்பாடு நிலவியது. இப்போது எல்லாவற்றுக்கும் கட்டுப்பாடு தளர்ந்து போயுள்ளது. இவற்றின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. சிலவற்றுக்கு இன்னும் தட்டுப்பாடு நீங்கவில்லை. இவற்றின் விலைகள் மேலும் அதிகரிக்கும் சாத்தியமே உள்ளது. இதன் காரணமாக ஏனைய சகல பொருள்களின் விலைகளும் கிடுகிடுவென உயர்ந்துள்ளன. வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் நாட்டு மக்கள் திண்டாடுகின்றனர்.

69 இலட்சம் மக்கள் வாக்களித்து ஆட்சி பீடத்துக்குக் கொண்டு வந்த ஜனாதிபதிக்கு எதிராக விலைவாசியால் பாதிக்கப்பட்ட அதேமக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். பல்வேறு தடைகளுக்கும் மத்தியில் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜன சமுத்திரம் சொல்லிய செய்தி இந்த அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என்பதாகவே அமைகின்றது. தமது ஆதரவாளர்களான இந்த மக்களின் எதிர்க் குரலே, ஆளுங் கூட்டணிக் கட்சியினரின் எதிர்க் குரலுக்குக் காரணமாகும். பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களே தமது மாவட்டத்துக்குள் கால் வைக்க அஞ்சும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்கள் தமக்கான சம்பள உயர்வு கோரி நடத்திய பேச்சு வார்த்தைகள் யாவும் தோல்வியடைந்து, பெரும் போராட்டங்களை முன்னெடுத்தனர். கடும் தடைகளைப் பிரயோகித்தும், மாணவர்களின் பெற்றோர்களைத் தூண்டி விட்டும் எதுவும் நடைபெறவில்லை. இப்போது அதிபர், ஆசிரியர்களிடம் அரசாங்கம் மண்டியிட்டுள்ளது. சுகாதாரத் துறையின் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் சலுகைகளை நிறுத்த முயன்ற விடயத்திலும் தோல்வியே ஏற்பட்டுள்ளது. ஒன்றிணைந்த சுகாதாரத் தொழிற்சங்கம், கிராம சேவகர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் தொழிற்சங்கக் கூட்டு என்பன சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளுடன் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

நாட்டின் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வீதிகளை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் திட்டமே ஓரளவு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.




> **சீனாவில் இருந்து சேதனப் பசளையை இறக்குமதி செய்ய முயன்று, பரிசோதனையில் தீங்கு விளைவிக்கக்கூடிய பக்றீரியாக்கள் இருப்பது கண்டறியப்பட்டு அது நிறுத்தப்பட்டது. ஆனால் அந்தப் பசளையை ஏற்றி வந்த கப்பல் இன்னமும் இலங்கையிலேயே தரித்து நிற்கிறது. கடன் ஒப்பந்தம் செய்த மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்தது முதல் நட்டஈடு கோரியது வரை சீனாவின் பொறிக்குள் சிக்கியுள்ள இலங்கை அரசாங்கம் அந்தப் பசளையை இறக்குமதி செய்தேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளது.**

அதற்கப்பால் நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. குளங்களை அண்டி நடைபாதைகளை அமைக்கும் செயற்பாடுகள் சில இடங்களில் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளன. யுகதனவி மின் உற்பத்தி நிலையைப் பங்குகளை அமெரிக்காவுக்கு விற்பது உட்பட நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்வது தொடர்பிலும் மக்களின் அதிருப்தியை அரசாங்கம் பெற்றுள்ளது.

யுத்த வெற்றியையும், இரண்டாண்டு ஆட்சி நிறைவையும், பிரதமரின் 76 ஆவது பிறந்த தினத்தையும் நினைவுகூரும் வகையில் சந்தகிருசேய விகாரையை கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து திறந்து வைத்திருந்தனர். இது நாட்டின் நான்காவது பெரிய தூபி என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தூபி திறப்பு ஒரு சாதனையாகப் பார்க்கப்படும் என்றே நம்பப்பட்டது. ஆனால் அது கூட ராஜபக்ஷவினருக்குப் பாதகமானதாகவே கருத்து வெளியிடப்பட்டுள்ளது. அட்டமஸ்தானங்களாக இருந்து பழமை வாய்ந்த எட்டு பழமையான தாதுகோபங்கள் நாட்டிற்கு ஆசி வழங்கும் நிலையில் புதிதாக ஒன்பதாவது தாதுகோபம் அமைவது நாட்டிற்கு நல்லதல்ல என்ற கருத்தை பௌத்த குருமார்கள் வெளிப்படுத்தி உள்ளனர். மறுபுறத்தில் அழிவு தந்த யுத்த வெற்றிக்கு பௌத்த தர்மத்தைப் பயன்படுத்தியது தவறு என்ற குரல்களும் வெளிப்பட்டுள்ளன.

அரசாங்கம் ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும் போதும் பிரச்சினைகளையே எதிர்கொள்கிறது. எடுக்கும் காரியங்களில் தோல்வியே கிடைக்கின்றது. எந்த நகர்வும் முன்செல்ல முடியாமல் இருக்கிறது எனில் தோல்வி முகமே அரசாங்கத்துக்கு ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இது நாட்டின் ஆட்சிக்குப் பாதகமானதே! ■

# சிந்துவெளி ஆய்வில் திராவிடத் தொன்மங்கள்:




## பத்ம ஸ்ரீ ஐராவதம் மகாதேவனின் முன்மொழிவுகள்

**எஸ்.சத்தியதேவன்**


*-1-*

உலகின்தலைசிறந்த புத்திஜீவிகளில் ஒருவரும் குறியி யல் பேராசிரியருமான உம் பர்டோ ஈகோ அவர்கள் எழுதிய வித்தியாசமான ஒரு கட்டுரையின் தமிழாக்கத்தைக் படிக்கும் வாய்ப்பை நாகர்ஜுனன் தனது வலைத்தளத்தில் ஏற்படுத்தித் தந்தார். (நாகர்ஜுனனின் வலைத்தள ஆக்கங்களின் தொகுப்பான "நளிர்" தொகுப்பில் அக்கட்டுரை 'அணுக்கழிவுகளின் குறியியல்' என்ற தலைப்பில் இடம்பெற்றிருக்கிறது. மூலக் கட்டுரை (Umberto Eco, In Search of a Perfect Language, p. 177-178, 1995.)




1984 ஆம் ஆண்டில் தாமஸ் ஏ. செபோக் அமெரிக்க அணுசக்தி கட்டுப்பாட்டு ஆணையம் முன்வைத்த ஒரு கேள்விக்கு விளக்கமான பதில்கள் நல்குவதற்கான ஆய்வுக்காக எழுதிய அறிக்கை தொடர்பான கட்டுரை அது.

அமெரிக்காவில் அணுக்கழிவுகளைப் பல நூறு மீட்டர் ஆழத்தில் புதைப்பதற்கென பல்வேறு பாலைவனப் பகுதிகளைத் தேர்வுசெய்திருந்தது, அமெரிக்க அரசாங்கம். இந்தப்பகுதிகளில் வெளியார் அறியாமல் சட்டென்று நுழைந்துவிடக்கூடிய அபாயம் உண்டு. ஆனால் இன்று நுழையக்கூடியவர்கள் பற்றியதல்ல இந்தக்கவலை! மாறாக, அடுத்த பத்தாயிரம் ஆண்டுகள்வரை இப்படி யாரும் நுழையாமல் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் பிரச்சினை! அதுவரை இந்த அணுக்கழிவுகளின் கதிரியக்கம் நீடிக்கும் என்பதே காரணம்.




இப்பிரச்சினை தொடர்பில் பல்வேறு சாத்தியங்களை முன்வைத்த செபோக் முன்வைத்த ஒரு உத்தி, நாமறிந்த அத்தனை மொழிகளிலும் குறியியல் வடிவங்களிலும் இந்தச்செய்தியை எழுதிப்போட்டு இவற்றில் ஏதாவது ஒன்றையாவது பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் வரப்போகிறவர்கள் புரிந்துகொள்ளலாம் என விட்டுவிடுவது. அதாவது, இவற்றில் ஒன்றையாவது புரிந்துகொள்ளப்படக் கூடிய சாத்தியம், புள்ளிவிபரவியலின்படி, உண்டு என விட்டுவிடுவது. இவற்றில் ஒன்றை அரைகுறையாகப் புரிந்துகொண்டால் கூட, அதைவைத்துப் பிறதை மொழியாக்கம் செய்துகொள்ள முடியலாம் அல்லவா.

எடுத்துக்காட்டாக, கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த ஐந்தாம் தாலமி என்கிற கிரேக்க அரசரின் ஆணை ஒன்று, எகிப்தியச் சித்திர எழுத்து, டெமியாட்டிக் மற்றும் செவ்வியல் கிரேக்கம் ஆகிய மூன்று மொழிகளில் கல்லில் எழுதப்பெற்றது. இந்தக்கல்லை, பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் எகிப்து நாட்டின்மீது படையெடுத்த நெப்போலியனின் ஃப்ரெஞ்சுத் துருப்புக்கள் ரஷீத் என்ற துறைமுகத்தில் வைத்துக் கைப்பற்றினர். ரோஸ்ஸட்டா எனப்படும் இந்தக் கல்வெட்டை வாசிக்கப் பலர் முயன்றார்கள். இறுதியாக, இருபத்துமூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டிஷ் அறிஞர் தாமஸ் யங் மற்றும் ஃப்ரெஞ்சு ஆய்வாளர் ழான்-ஃப்ரான்ஸ்வா ஷம்போய்யான் என்ற இருவர் தனித்தனியாகக் கடுமையாக உழைத்து வாசித்துவிட்டார்கள். இதன் மூலம் எகிப்திய அசீரிய நாகரீகங்கள் பற்றி எழுதப்பட்டிருந்த களிமண் தட்டுக்களில் இருந்தவை தம் நீண்டகால புதிரை அவிழ்த்தன. ஆனால் இதற்குக்கூட ஒருவகை கலாச்சாரத்தொடர்ச்சி தேவைப்பட்டது, அது வலுவற்றதாக இருந்தபோதும் எனக்காட்டுகிறார் செபோக்...

இறுதியாக செபோக் முன்வைத்த உத்தி - அணுவிஞ்ஞானிகள் மற்றும் மானுடவியல், மொழியியல், மனோவியல் வல்லுனர்கள் கொண்ட குழு ஒன்றை அமைப்பது. வேத உச்சாடனம் செய்யும் பிராமணர்கள், மாந்திரீகம் தெரிந்த பூசாரிகள் போன்ற ஒரு குழு. இந்தக்குழு அணுசக்தி அபாயங்கள் பற்றிய தொன்மங்கள், கதைகள், கலைவெளிப்பாடுகள் போன்றவற்றைப் படைத்து, உலவவிட்டுக்கொண்டே செல்லும். இந்தக்குழு காலப்போக்கில் தனக்கு வேண்டிய வேறு பிறரை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு தொடரும். நூற்றாண்டுகள் தொடரும்போது எந்த அபாயத்தைச் சுட்ட இதையெல்லாம் செய்கிறோம் என்ற மூலக்காரணம் மங்கி மறைந்து போய்விடும்தான். ஆனால் எதிர்காலத்தில் மனித இனம் காட்டுமிராண்டிகளாக ஆனாலும்கூட, ஏதோ மறைபொருளாய், புதிராய், கைகண்டதாய் விலக்காக, அபாயமாக, அணுகக்கூடாததாக இருக்கிறது என்ற அறிவும் உணர்வும் தொடருமல்லவா என்கிறார் செபோக்.

*-2-*

சிந்துவெளி அல்லது ஹர்பன் நாகரீகம் தான் பண்டைய உலகில் மிக விரிந்த பரப்பளவில் அமைந்தது. இந்த நாகரீகம் சொந்த மண்ணின் பண்பாடுகளிலிருந்தே, நீண்ட காலமாக கி.மு. எட்டாயிரத்தில் புதிய கற்காலத்தின் முற்பகுதியிலிருந்து, உருவாகி வந்திருக்கிறது. தெற்கு ஆசியாவின் வடமேற்குப் பகுதியில் பத்துலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவியிருந்தது. இங்கே சிறிதும் பெரிதுமாக 200க்கும் மேற்பட்ட ஊர்களும் 6 மிகப்பெரிய நகரங்களும் இருந்திருக்கின்றன. இந்த நகரங்கள் குடியேற்றங்களுடைய ஒரு தன்மையான அமைப்பு இவையனைத்தும் ஒரு உயர் வளர்ச்சி நிலையில் சமூக ஒருங்கிணைப்பு வல்லமை கொண்ட ஒரு நாகரீகமாக இருந்திருக்கின்றதைக் காட்டுகின்றது என அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மோசமான வானிலை, புவியின் மேற்பரப்பில் நிகழ்ந்த கடும் மாற்றங்கள், நதிகளின் போக்கு மாறியது அல்லது நீர் வற்றியது. அளவுக்கு அதிகமான பயன்பாட்டால் மண்ணின் வளம் குன்றியமை போன்ற இயற்கை விளைவுகளாலும் சமூகக் கட்டுப்பாடு, கொள்கைப் பிணைப்பு இவற்றில் தளர்வும் உட்பூசல்களும் சிந்துவெளி நாகரிக சரிவிற்கும் வீழ்ச்சிக்கும் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. மாறாக கி.மு.1900 இற்குப் பிறகான ஆரியர்களின் ஆக்கிரமிப்பும் சிந்துவெளி நாகரிக மறைவிற்குக் காரணமாக சிலரால் முன்வைக்கப்படுகின்றது. ஆயினும் ஆரிய திராவிட என்ற சொற்களை இனமாகவும் மொழியாகவும் வேறுபடுத்துவதும் வரலாற்றியலாளர்கள் அறிஞர்களிடையே உள்ளது.

சிந்துவெளி நாகரிக இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பெருந்தொகையான முத்திரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எறத்தாழ 400 தொடக்கம் 450 குறியீடுகள் கொண்ட இக்குறியீடுகளைச் சித்திர எழுத்துக்களில் அமைந்த சிந்துவெளி வரிவடிவம் எனப் பெரும்பாலான சிந்துவெளி ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆயினும் இவை ஒரு வரிவடிவமல்ல வெறும் குறிகள் எனச் சிலர் மறுக்கின்றனர். சிந்துவெளிக் குறியீடுகளுக்கு ஒரு தொகுப்புரை ஆய்வு நூலை உருவாக்கிய அஸ்கோ பார்ப்பொலோவும் ஐராவதம் மகாதேவனும் சிந்துவெளிக் குறியீடுகள் வரிவடிவம் என்பதை உறுதியாக கூறகின்றனர். அக்குறியீடுகளின் சேர்க்கைகளை வாசகங்களாகவும் அடையாளம் காண்கின்றனர், அவற்றை குறிநீக்கம் செய்வதற்கான முன்மொழிவுகளையும் முன்மொழிந்துள்ளார்.

இருவருமே சிந்துவெளி நாகரீகம் நாடோடி நாகரிகமான வேதகால நாகரிகத்திலிருந்து பண்பாட்டிலிருந்து வேறுபட்டது என்பதை உறுதியாக நிறுவுவதுடன் அது திராவிட நாகரிகமே என்பதைப் பல்வேறு ஆதாரங்களுடன் முன்வைக்கின்றனர். இதற்கு வலுச்சேர்ப்பதாக சிந்துவெளி குறியீடுகளில் உள்ள குறியீடுகள் ஒத்த குறியீடுகள் பொறித்த சான்றுகள் தென்னியாவில் கிடைத்துள்ளன.செம்பியன் கண்டியூரில் கிடைத்த குறிகள் பொறித்த புதிய கற்கால கற்கோடரி, சூலூர் குடுமண் தட்டு, சாணூரில் பெருங்கற்கால ஈமத்தாழிகளில் இருந்து கிடைத்த குறியீடுகள் மிகப் புகழ் பெற்ற முசிறிப் பட்டணத்திலிருந்து கிடைத்த பெருங்கற்காலக் கீறல்க் குறிகள் என்பன சிந்துவெளிக் குறியீடுகளோடு மிகமிக அதிகவளவில் ஒத்துள்ளதை அறிஞர்கள் முன்வைக்கின்றனர்.

*-3-*

செபோக் இனிவரும் பத்தாயிரம் ஆண்டுகளில் நடக்கும் என எதிர்வுகூறுகின்ற நிலையை சிந்துவெளி நாகரிகத்துக்கு பொருந்துவதாக உள்ளது. ஏறக்குறைய செபோக் இறுதியாகச் சென்றடைந்த உத்தியின் வழியில் நேரெதிர்த் திசையில் சென்று இன்றுவரை பெரும் புதிராக இருக்கும் சிந்துவெளிக் குறியீடுகளுக்கான புதிரை அவிழ்ப்பதற்கான முன்மொழிவுகளை திராவிட தொன்மங்களை முன்வைத்து முன்மொழிகிறார் கடந்த 2018 நவம்பரில் மறைந்த தொல்லெழுத்தியல் சிந்துவெளி ஆய்வாளரான பத்ம ஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்கள்.

இதற்காக அவர் சிந்துவெளி நாகரிகத்தூடு கலாசாரத் தொடர்ச்சி கொண்டதாக கருதப்படும் திராவிடப் பண்பாட்டின் தொன்மைகளைக் கொண்டு சிந்துவெளி குறியீடுகளை புதிரவிழ்க்கும் முறையை முன்வைக்கிறார். தொன்மங்கள் பழமரபுக்கதைகள் தொடர்பில் முன்வைக்கப்படும் ஆய்வுகள் அதன் வரலாற்று தொடர்பை

(19 ஆம் பக்கம் பார்க்க...)

**சிந்துவெளி வரிவடிவத்தில் காவுவோர்/ பொறையர் குறியீடுகள்: புனைவும் உண்மையும்**






# என்ன உலகமடா பரமானந்தா? 31

தமிழ்க்கவி

“ஆடுமாடில்லாதவன் அடைமழைக்கு ராசா, பெண்டில் பிள்ளை இல்லாதவன் பஞ்சத்துக்கு ராசா” பாக்கிற சாடைக்கு அவங்கட வாழ்க்கை நல்லா இல்லாத மாதிரித்தான் தெரியும். ஆனா வெகு காயாத் திரிவங்கள். அதிலும் பாக்க பெண்டில் பிள்ளை இருக்கிறவன் அனுபவிக்கிற சுகத்தை அவன் அனுபவியான்.



அதைப் பத்தி தெரியவும் தெரியாது. ஆனா ஆடு மாடிருக்கிறவன் அந்த மாரி தெம்பலுக்கயும் அதுகளுக்கு தீன் போட்டு சாணியள்ளி கட்டியவிட்டு கயிட்டப் பட்டாலும், பின் நேரம் அதுகள்ள பாலைக்கறந்து

என்னடா கதைசொல்ல சிரிக்கிறாய். ஏடேய் சந்திரன்ர மூத்தவன் மோட்டச்சயிக்கிள்ள போகயுக்க மாடுகள்ள மோதித்தானாம் விழுந்தவன் பின்ன சொல்லுறாய். உந்த பொலிசுக்காரன் சமாதானக்கூட்டத்தில சொன்னவனெல்லே கட்டாக்காலி நாயளோடயும் மாடுகளோடயும் மோதுப்பட்டுத்தான் கன கட்டாக்காலிப் பொடியள் கையக்கால முறிக்கிறதும் உயிரக் குடுக்கிறதும் அதிகமெண்டு. ஆனாப்பாரடா இப்பத்தையில் பொடியள் உந்த ஏறைன் ரோட்டில பைலட்டுக்கு பிறக்றீஸ் பண்ணுறாங்களடா. நிலத்தில சரியா ஓடிற்றா... அடுத்தது வானத்தில விட்டிருவாங்கள். நிலத்தில சரியா ஓடித் தாங்களாவே மேல போறவங்களும் உண்டு. செல்லப்பிள்ளைக்கு மோட்டச்சயிக்கிள் வாங்கிக் குடுத்த தாய்தேப்பன் தாங்களே வழியனுப்பியும் வைப்பினம். வன்னியில ஆடுமாடுகளும் அமந்தறைதானேடா. வெள்ளாமை விதைச்சா மாட்டுச்சட்டம் போட்டிருவங்கள். அதுக்குப்பிறகு மாடு கட்டித்தான் வைக்கோணும் பட்டிகட்டி அடைக்க வேணும்... மாடுகள ஆராவது ஒருத்தர் ரெண்டு பேர் வாரத்துக்கு எடுத்து ஒதுக்கா பட்டி அடைச்சுக் கட்டிக் கொண்டே கூட நிண்டு தாங்களும் அங்கயே மேஞ்சு கொணந்து அடைக்க வேணும்.

மாடுகளை பட்டிக்கால கழட்டின உடன அதுகள் மேயப் போகுமெண்டோ ச்சிக், அதுகள் எங்கயும் கட்டாந்தரை பாத்து போய் படுத்திருங்கள். பின்ன போய்ப் பாரடா மாட்டுக்காலையள. முழங்கால் மட்டுச் சேறும் சாணியும் கலந்து மழைத்தண்ணி விட்டு குழைச்சு கூழாக் கிடக்கு அதுக்க ரா ராவா நுளம்புக்கடியில கிடந்திட்டு, ஒரு மாட்டுக்கும் அதுகளின்ர சொந்த நிறம் கிடையாது உடம்பெல்லாம் சேத்து நிறம்தான். விடிய வெட்டைக்கு வர அதுகளுக்கு என்ன தோணும். உப்பிடியே நீ ஒருக்கா வன்னிக் கிராமங்களுக்கால ஒரு

வந்த உனக்கு கேற்றச் சாத்தத் தெரியாதே? எப்பன் அயண்டயீனமா இருக்க உவள் கிளியின்ர மாடு ரெண்டும் பூந்திட்டுதே... ஆ... கடவுளே அது மாங்கண்டக் கடிச்சிட்டுதடா. மறி எட்டிக்கலையடா மறி மறி. ம் கேற்றப் போட்டு தண்டத் தள்ளிவிடடா. இல்லாட்டா... எடுபட்டவளின்ர மாடுகள் சொத்தையால தள்ளிப் போட்டு உள்ளுக்க வருமடா. சுத்திச்சுத்தி சுப்பற்ற கொல்லைக்கதான் திரியநிக்குதுகள். எங்க அவளிட்ட சொல்லிப்பார் உந்த மாடுகளக் கட்டினா என்னடி எண்டு. அவளின்ர வாய் வங்காள விரிகுடா மாதிரி திறந்திடும். நீ வேலிய ஒழுங்காப் போட்டா ஏன் மாடுவருதாம்.

ஏதோ நாங்கள் மாடுவளத்த அனுபவம் இல்லாத ஆக்கள் எண்டதுதான் அவாவிட நெப்பு. எட இப்ப மாடு வளக்கிறவைக்கு எங்கடா மேய்ச்சல் தரவை கிடக்கு உந்த அரசாங்க அதிகாரியளெல்லாம் சனத்தைக் கூப்பிட்டு கூட்டங்கூட்டி மீற்றிங்கும் வைக்கிறாங்கள் தானே எவனொருதன் எழும்பி உதுகளக் கதைக்கிறான். மாடுகள மேயவிட்ட காணியள பிடிச்சு வங்களாக்கட்டுறவை எப்பிடி உதுகளக் கதைக்கப்போகின.

கதைச்சா வேலிக்கு ஓணான் சாட்சி சொன்ன கதையாத்தான் முடியும். மேச்சல் தரவையளப்பிடிச்சு இணங்கினவைக்கு குடுத்து முடிச்சிட்டாங்கள். மாடு கண்டுகள் வச்சிருக்கிறவை என்னேய்யிறதெண்டதில என்ன கவனம். அதுகளென்னடா வாயில்லாத சீவனுகள் சாப்பாடு கண்டடத்தை பாயத்தானே செய்யுங்கள். இந்த மழை உந்தப்போடு போடுது. ஒரு எப்பன் காலாற நிக்க படுத்தெழும்ப அதுகளுக்கு உள்ளடம் உந்தத் தார் ரோட்டுகள்தானே. போய் ஆசறுதியா படுக்கிதுகள்.

வருங்காலத்தில மாடுகள ஆடுகளை வளக்கிறது பெரிய சாகசமான வேலையாத்தான் இருக்கப்போகுது. தோட்டஞ்செய்யிறது நல்லமாத் தெரியுது. அதுக்கும் உந்த மாடுகள் நிண்டாத்தானேடா எருவுக்கும் வேலைக்கும். எல்லாம் வெறுத்துப் போச்சடா. வரவர மனிசருக்கும் தான் வாண்டாப்போதும், மற்றவன் எக்கேடு கெட்டா எனக்கென்ன எண்ட எண்ணந்தான் வளருது. எட விடிஞ்சாப் பொழுது பட்டா வாழ்க்கைய எப்பிடி நடத்தப் போறமெண்ட கவலை சிலது

சுடச்சுடக் காச்சிக் குடிக்கயுக்க வாற சுகம் தெரியும்.

பின்ன சொல்லுறாயடா காலிலும் நீர்ச் சிரங்கு போட்டிரும். கையிலும் விறைச்சு விறைச்சு வெடிப்பு விழுந்திரும். ஆனா நெய்யில பொரிச்ச கோதம்பமா ரொட்டிய தேனில தொட்டோ, கானக் கொச்சிக்காச் சம்பலோடயோ திண்டு பாத்திருக்கிறியே? உவங்கட புறியாணி பீசா எல்லாம் பிச்சை வாங்கோணுமடா.

இப்பயும் எங்கட அயலுக்க உவன் சீரங்கன் வீட்டில ஆடுகள் மாடுகளெல்லாம் நிக்கிது. அதுகள கட்டியவிட்டு மினைக்கெடுறானோ. ச்சைக், - ஒரு நாளுமில்ல. அதுகள் ‘துறந்த மண்டபம் துறைச்சேரி துரை எப்ப வருவார்’ எண்டு அந்த நாளையில தாசியள் காத்திருப்பாளவையாமடா... அதுபோலதான் இதுகளும் வேலி பாஞ்சு மற்றவை கயிட்டப்பட்டு நட்ட பயிர் பச்சையள மேஞ்சிட்டு ரோட்டு வழிய படுத்திருதுகள். அவன் பாவி பலார் பத்தி விடிய முதல் ரோட்டு ரோட்டா அலைஞ்சு பால்கறக்கிற மாடுகள மட்டும் சாச்சுக் கொண்டே பாலைக் கறந்திட்டுப் பிறகும் கண்டைக் கட்டி வச்சுக் கொண்டு மாடுகளக் கலைச்சு ரோட்டில விட்டிருவான். அதுகளும் அங்க சுத்தி இஞ்ச சுத்தி தங்கட வயித்தை நிறப்பிக் கொண்டு ரோட்டிலதான் வாழ்க்கை.

நடை போயிட்டு வா. மல்லாவி தொடக்கம் மன்னார் வரைக்கும் இஞ்சால கிளிநொச்சி தொடக்கம் முல்லைத்தீவு செம்மலை அளம்பில் நாயாறு வரைக்கும். எவனாவது ஒழுங்கானக் கூரை போட்ட மாட்டுக்காலை வச்சிருக்கிறானெண்டா சொல்லு. உந்தச் சீமை மாடுகளெண்டா... மட்டும் கவனம்.

ஊரில உள்ள நாயள முத்தத்தில படுக்க விட்டிட்டு நிம்மதியாப்படுத்த காலம் போய் இப்ப அலுமோனியன் நாயள வாங்கி அதுக்கு கூடுகட்டி பூட்டுப்போட்டுட்டு நாங்கள் காவல் காக்கிறமெல்லெ. அதேதான் இப்ப சீமையில் மாடுகள காவந்து பண்ணுறம். நம்ம நாட்டு மாடுகள் நடத்த ஆளில்லாம திரியுதுகள் ஆனா வைத்தியத்துக்கு நாட்டு மாட்டுப்பால், நாட்டு மாட்டுநெய் எண்டு தேடித்தான் திரியினம். பின்ன ஒவ்வொண்டும் எங்களுக்குப் படிப்பிக்கத்தானே வருது.

உந்தக் கொரோனா வந்தபிறகுதான் நாட்டு மருந்துக் கடையளுக்கும் ஒரு மினுக்கம். எடேய் கருவேப்பிலைப் பொடி செம்பருத்திப் பொடி ஆவாரம் பூப் பொடி அந்தப்பொடி இந்தப்பொடி எண்டு அச்சடிச்ச அலுமினியப் பையளில கலாதியா வந்திருக்கிதுடா. எங்கட வளவெல்லாம் செம்பருத்தி என்ர பேத்திக்கு செம்பருத்திப் பொடி வேணுமாம். கேளடா கதைய. ‘அம்மியடியில் தள்ளின சூத்தை மிளகும் கறிக்குதவும்’ எண்டு ஆத்தை சொல்லுவா அப்ப.

எடஎடஎட நான் கதையில நிக்க, மோடா!

பேருக்கு ஆனா வாழுறவன எப்பிடி கெடுக்கப் போறம் எண்ட கவலை சிலது பேருக்கு. ‘ஈனுற மாட்டை ஈனவிடாங்கள் நக்கிற மாட்டை நக்கவும் விடாங்கள்.’ எல்லாத்துக்காலயும் சுழியோடித்’ தப்பினாத்தான் வாழ்க்கை. பொறடா பொறு தேத்தண்ணி ஊத்திறன் குடிச்சிட்டுப்போ... இதில என்ன குறைஞ்சு போறனே. ■

> “ஊரில உள்ள நாயள முத்தத்தில படுக்க விட்டிட்டு நிம்மதியாப்படுத்த காலம் போய் இப்ப அலுமோனியன் நாயள வாங்கி அதுக்குக் கூடுகட்டி பூட்டுப்போட்டுட்டு நாங்கள் காவல் காக்கிறமெல்லெ. அதேதான் இப்ப சீமையில் மாடுகள காவந்து பண்ணுறம். நம்ம நாட்டு மாடுகள் நடத்த ஆளில்லாம திரியுதுகள் ஆனா வைத்தியத்துக்கு நாட்டு மாட்டுப்பால், நாட்டு மாட்டுநெய் எண்டு தேடித்தான் திரியினம். பின்ன ஒவ்வொண்டும் எங்களுக்குப் படிப்பிக்கத்தானே வருது.”

# ரோபோ சித்தாள் கட்டிய பூங்கா!

சீனாவின் ஷென்ஜென் நகரில் ஒரு கண்காட்சி அமைப்புக்காக, முப்பரிமாண அச்சியந்திரத்தால் கட்டப்பட்ட உலகின் முதல் பூங்கா உருவாகி உள்ளது. ஏ.ஐ.சி.டி., என்ற கட்டுமான நிறுவனம், ‘குகா’ என்ற கட்டுமான ரோபோக்களை கொண்டு பூங்காவிற்குள் பல வசதிகளை கட்டியது. குகா ரோபோக்களின் கரங்கள், சிறப்புக் கலவையை அடுக்கடுக்காக, மெதுவாக படியச் செய்தன. இப்படியே அந்தப் பூங்காவில் சுற்றுச்சுவர், இருக்கைகள், செடித் தொட்டிகள், நடைபாதை என, பல கட்டமைப்புகளை, ரோபோக்கள் கட்டுவித்துக் கொடுத்துள்ளன.

கட்டுமானத் துறையில், முப்பரிமாண அச்சியந்திரத்தின் பயன்பாடு ஆழமாக அஸ்திவாரமிடப்பட்டு விட்டது. இப்போது, முப்பரிமாண அச்சியந்திரத்தால்



கட்டப்படும் குடியிருப்புகள், குட்டிப் பாலங்கள், கிராமத்துப் பள்ளிகள் என, அதன் பங்களிப்பு வளர்கிறது. சில அழகான சிலைகள் உட்பட, அந்தப் பூங்காவில் 2 ஆயிரம் கான்கிரீட் பொருட்களை குகா ரோபோக்கள் படைத்துள்ளன.

பூங்காக்கள், அலுவலக கட்டடங்கள், குடியிருப்புகள் போன்றவற்றுக்கு குகா ரோபோக்களைப் பயன்படுத்தினால், வேகமாகக் கட்டடங்களைக் கட்டி முடிக் கலாம் என்பதோடு, குறைந்த செலவே அதற்கு ஆகும் என, ஏ.ஐ.சி.டி., பொறியாளர்கள் சுட்டிக் காட்டு கின்றனர். முப்பரிமாண கட்டுமானம் இனி மிகவும் சகஜமாகிவிடும். ■

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




# முதுமையை எதிர் கொள்ளுதல் யதார்த்தமும் மன உணர்வுகளும்

இயற்கையில் மனிதன் எதிர்கொள்கின்ற பருவங்களிலொன்று முதுமை. பூவிலிருந்து பிஞ்சும் காயும் முற்றிய நிலையும் கனியாதலும் நிகழ்வது போன்றே மனித வாழ்வு குழந்தையாக ஆரம்பித்து விருந்தோம்பிய நிலையென்ற வயோதிபத்தைச் சென்றடைகிறது. இயல்பான ஒரு நகர்வின் இறுதி நிலையான முதுமை பலரது வாழ்வில் ஒரு சோதனை போலவும் சவால் போலவும் எதிர் கொள்ளப்படுகிறது.


எவ்வாறு கருதப்பட்டாலும் விரும்பப்படாத ஒரு நிலையாய் எண்ணப்பட்டாலும் எவராலும் தவிர்க்கப்பட முடியாத ஒரு பருவம் இது என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். முதுமை நேரிடுகின்ற போது இயலாமை, நோயுறுதல், செயல்வலு குன்றிப் போதல், உடலின் தொழிற்பாடுகளில் தளர்ச்சி, எப்போதும் அடுத்தவரை எதிர்பார்த்திருக்கின்ற ஒரு மனோநிலை, மனநிலைக் குழப்பம், மறதி எனத் தொடரும் இடர்களால் பொதுவாகவே மனிதர்கள் முதுமையைக் கண்டு அஞ்சுபவர்களாகவும் வாழ்வை வெறுத்து விடுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

இத்தகைய நிலையில் மனித மனம் பெரிதும் துயரில் முழ்கிப் போகிறது. சிறிதாய்த் தோன்றுகிற தாக்கங்களைக் கூடப் பெரிதாக எண்ணிக் கலங்கும் இயல்பு ஏற்பட்டுப் போகிறது. இவையெல்லாம் முதுமைப் பருவத்தில் எவரும் பொதுவில் எதிர்படக் கூடிய நிலைமைகள்தான். எதிர்ப்பட நேரும் இந்த நிலையை எவ்வாறு நாம் மனதளவில் ஏற்றுக் கொள்ளப் போகிறோம். ஆற்றும்பால் எமது நனவு எப்படி அமையப் போகிறது. என்பதைப் பொறுத்தே எமது மன நிம்மதி, மனமகிழ்ச்சி எவ்வாறு நிலை கொள்ளப் போகின்றன என்பது முடிவாகின்றது. யதார்த்த நிலைமைகளை அங்கீகரிக்க மறுத்து, மனங்குழம்பி எமது எதிர்பார்ப்புக்களுக்கும் எண்ணங்களுக்கும் தகுந்தாற்போல் எல்லாம் நடக்க வேண்டும் என்று கருதுவது அறிவுடைமையாகாது.

முதியோர் மனநிலையும் துயரமும் ஒருபுறம் இருக்க, முதியோரை அனுசரிக்க வேண்டியோராய் இருக்கின்ற பிள்ளைகள் மற்றும் உறவினர்களது மனப்பாங்கும் அவர்கள் பால் இருக்க வேண்டிய பரிவு, பொறுமை, விட்டுக் கொடுத்தல், புரிந்து கொள்ளல் ஆகிய பண்புகள் முதியோரது நிம்மதியான வாழ்க்கையின் பிரதான இடத்தை வகிக்கும் பண்புகளாய் அமைகின்றன.

இயலாமையால் துன்பமடைகின்ற முதியோர் அடுத்தவரது உதவியை அதிகம் நாடும் நிலைக்கு உட்படும் போது எதிர் கொள்கின்ற ஏனையோரது கோபம், எரிச்சல், புறக்கணிப்புப் போன்ற இயல்புகள் முதியோரை மிகவும் பாதிக்கின்றன. பிறரால் வெளிக்காட்டப்படும் ஒரு சிறிய அதிருப்திக்கான சமிக்ஞை கூட முதியோரைப் பெரிதும் பாதிப்பதுண்டு.

எமது சமூகத்தில் முதியோர் தொடர்பான புறக்கணிப்பும் வெறுப்புணர்வும் பல சந்தர்ப் பங்களில் வெளிப்படையாகவே காட்டப்படும் களங்கள் தோன்றுவதை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடியும். இவர்கள் அடுத்தவர்களது அன்புணர்வு எவ்வளவு பொறுப்போடு வெளிக்காட்டப்பட வேண்டும் என்கிற உள்ளம் புலனாகியிருந்து தமக்கு வசதியான விதத்தில் தமக்கு ஏற்ற மாதிரியான ஒரு நிலையில் முதியோரை அன்போடு நடத்துதல் கடினமான காரியமாகும். தமது சுயநல வட்டத்தை மீறி முதியோரைப் புரிந்து கொண்டு காட்டப்படும் அன்புதான் முதியோரின் தேவையாக உள்ளது. ■




# காமிக்ஸ் கதைகளின் உலகம்

த.அபிநாத்

இலக்கியவெளியிலே வசனநடை பயின்று சிறுகதை, கட்டுரை, நாவல் முதலிய இலக்கிய வடிவங்கள் உலா வருகின்றன. அவற்றுள் சித்திரங்களையும் சொற்களையும் குறித்த படிமுறையிலே வெளிப்படுத்திக் கதையை சொல்வதாக காமிக்ஸ் அமைந்துள்ளது. விறுவிறுப்புக் குன்றாமல் தன்னுள் ஈர்த்து வைத்திருக்கும் இக் காமிக்ஸ் கதைகளின் பண்புகள் தொன்மக் குகை ஓவியங்களோடும் ஒத்துப்போகின்றன. பிரான்ஸ் நாட்டில் லாஸ்காக்ஸ் (Lascaux) குகை ஓவியங்கள் காமிக்ஸ் கதை வடிவின் முன்னோடியாகவும் கருதப்படுகின்றன. இக்காமிக்ஸ் கதை வடிவமானது ஜப்பானிய மொழியில் மங்கா என்றும் பிரெஞ்சு மொழியில் பந்தேஸ் டெஸ்ஸினிஸ் (babdes dessinees) எனவும் ஜெர்மனிய மொழியிலே காமிக் எனவும் மன்ஹீவா என சீனத்திலும், தமிழில் சித்திரக் கதை என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

1869 இல் "நியூயோர்க்ஜேர்னல்" பத்திரிகையில் வெளியான காமிக்ஸ் பலரது கவனக்குவிப்பை சம்பாதித்திருந்தது. "The yellow kid", "bear and tiger" எனும் ஆரம்பகால காமிக்ஸ் நூல்கள் வாசகர் மத்தியில் ஈர்ப்பினை ஏற்படுத்திய நூல்களாக அமைந்தன.

ஆரம்பகால காமிக்ஸ் கதைகள் நிகழ்வுகளை கூறி அதனூடாக நகர்த்தப்படினும் பிற்பட்ட காலங்களில் வசனங்கள் இடம் பெறத் தொடங்கின. வசன வெளிப்பாட்டு நுட்பத்தை காமிக்ஸ் கதைகளில் உரை கூண்டு ("Speech balloon") மூலமாக வெளிப்படுத்துவர். உரைக்கூண்டுகளானவை சாதாரணப் பேச்சு, மெல்லிய குரற் பேச்சு, எண்ண ஓட்டம், அலறல் போன்றவற்றினைக் கதையில் தத்ரூபமாக வெளிப்படுத்துவதற்காக வரையப்பட்டிருக்கும். குறிப்பாக மெல்லிய குரல் பேச்சானது சிறுவிட்டிசைக் கோடுகளினாலான உரைக்கூண்டாலும், அலறல் குண்டு வெடிப்பு வடிவ உரைக்கூண்டாலும், எண்ண ஓட்டம் குமிழி வடிவ உரைக்கூண்டாலும் அமைக்கப்பட்டிருக்கும்.

தமிழில் வெளியான காமிக்ஸ் கதைகள் பெரும்பாலும் மொழி பெயர்ப்புக்களாகவே அமைகின்றன. பிற நாடுகளில் வெளி வந்த கதைகளின் உரிமத்தை பெற்று தமிழாக்கம் செய்தனர். இதனாலேதான் பதிப்புரிமை கிடைக்காத Super man, spider man போன்ற காமிக்ஸ் தமிழிலே வெளிவரவில்லை. தமிழ் வாசகர்களுக்கு "இரும்புக்கை மாயாவி", ஜேம்ஸ்பாண்ட் -007", "tex willer", "மாயாவி" போன்ற கதாபாத்திரங்கள் பரிச்சயமாயின. இங்கிலாந்தில் "The Steel Claw" என்ற கதாபாத்திரம் மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இப்பாத்திரமே தமிழில் "இரும்புக்கை மாயாவி" யாக வடிவமெடுத்தது. தமிழ்ப்பதிப்பகத்தினர் பிறமொழி உரிமத்தை பெற்றுக் கொண்டு வாசகர்களின் இரசனைக்கேற்ப பதிப்பு முயற்சியை மேற் கொண்டனர். இந்திரஜாலகாமிக்ஸ் (1965), அமர்சித்ரகதா (1967), பால்கன் காமிக்ஸ் (1968), முத்துகாமிக்ஸ் (1971), பொன்னி (1976), லயன்காமிக்ஸ் (1984), ராணி காமிக்ஸ் (1984) போன்ற நிறுவனங்கள் காமிக்ஸ் கதைகள் வெளியீடு செய்தன. மர்மங்கள் நிறைந்த கதை, விண்வெளிக் கதை, கௌபோய்க் கதை, செவ்விந்தியக் கதை போன்ற பல்வேறு கதைகள் வெளிவந்தன. அமர் சித்ரகதாவில் இராமாயணம், மகாபாரதம் என்பன காமிக்ஸாக வெளிவந்தமையானது குறிப்பிடத்தக்கது.







காமிக்ஸ் தமிழுக்குரித்தான வரைகதைகளாய் வெளிவந்தமை மிகக் குறைவாகவே இருந்தன. ஆனந்த விகடனில் 1965 இல் "ஜமீன்தார் மகன்" என்ற காமிக்ஸ் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. தினத்தந்தியில் "கன்னித்தீவு" எனும் காமிக்ஸ் கதையானது தொடர்ச்சியாக 50 வருடங்கள் வெளிவந்துள்ளது. தமிழ் சமூகத்தின் மத்தியில் காமிக்ஸ் கதைகளின் பொற்காலமாக 1970 - 1990 களின் முற்பகுதி வரையான காலம் குறிப்பிடப்படுகிறது.

பாலர் தொட்டு விருத்தர் வரை சகலரும் விரும்பி வாசிக்கும் கதை வடிவமாய் காணப்படும் காமிக்ஸை வாசிப்பதால் வாசகர்களின் கற்பனைச் சக்தியானது மேலும் விருத்தியுறுகிறது. வாசகர்கள் இக்கதைகளில் இலயித்திருக்கையில் சட்டகங் கட்சிடையிலான விடுபடலைக் கற்பனையூடாய் நிரப்பிடும் ஆளுமையும் வளர்ச்சியுறுகிறது.

தமிழ்ச்சினிமா நாயகர்களை மையமாக வைத்தும் சில காமிக்ஸ் கதைகள் வெளிவந்துள்ளன. முல்லை தங்கராஜன் கண்மணி காமிக்ஸ் இதழில் எம். ஜி. ஆரை வைத்து காமிக்ஸ் எழுதியுள்ளார். பிற்காலங்களில் ரஜினிகாந்தை வைத்தும் ஒரு சில காமிக்ஸ் கதைகள் வெளிவந்தன.

ஈழத்திலும் காமிக்ஸ் கதைகளுக்கான வாசகர் கூட்டமொன்று அமைந்திருந்தது. இந்தியாவிலிருந்து இறக்குமதியான கதைகளை விரும்பி வாசித்து வந்தனர். 2000 ஆம் ஆண்டு தொட்டு இறுதிப் போர் வரைக்குமான காலப்பகுதியில் வன்னியில் அம் மக்களின் வாழ்வியல் சார்ந்த கதைகள் காமிக்ஸ் கதைகளாய் உருவெடுத்தன. "யாழுசிவா" அவர்கள் ராஜ் சிவாவோடு இணைந்து எழுதிய அண்டத்தைப் பார்க்கலாம்வாங்க என்ற காமிக்ஸ் நூலே தமிழின் முதலாவது அறிவியல் விண்வெளி காமிக்ஸ் ஆகும். அண்மைக் காலத்தில் உதயன் - சஞ்சீவி வார இதழிலும் சில காமிக்ஸ் கதைகள் இடம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. ஈழத்தின் மிகச் சிறந்த காமிக்ஸ் வரை கலைஞர்களில் ஒருவராக எஸ். வினோபா அமைந்துள்ளார். "வெற்றியை தேடி", "முப்பதாயிரம் டொலர்" எனும் அவரது காமிக்ஸ் கதைகள் முக நூலில் பிரபலமடைந்துள்ளன. காமிக்ஸ் கதைகளை வாசித்த சந்ததி ஒன்று நூல் வாசிப்பிலே அதிக நாட்டத்தைக் கொண்டிருந்தமை சிறப்புக்குரியது. சமூக வலைத்தள யுகத்தில் காமிக்ஸ் கதைகள் மீதான நாட்டம் அருகிவரினும் இன்னமும் தீவிரவாசகர்கள் பலரை இணையத்தளங்களினூடாய் காணமுடிவது மனமகிழ்வைத் தருகிறது. ■



# கிராம சமுதாய அபிவிருத்தியில் சமுதாய நூலகங்களின் பங்கு:

## தகவல் வறுமைத் தணிப்புக்கான உபாயங்களின் வழியாக கிராம சமுதாய அபிவிருத்தியை உறுதிசெய்தல்

இ.இராஜேஸ்கண்ணன்

இன்றைய உலகம் தகவல் மையமானது. மனித வாழ்வின் சகல கூறுகளும் தகவல்களின் பரவலிலும், கிடைப்பனவிலும், பேணுகையிலுமே தங்கியுள்ளது. தகவல் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான அவசியமான வளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தகவல் தொழினுட்பத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமிடையே நேரடியான தொடர்புகள் நிலவுகின்றன. அபிவிருத்தியின் பலமட்டங்களிலும் தகவலும், தகவல் தொடர்பாடல் தொழினுட்பமும் செல்வாக்குச் செலுத்துவதை, சாதாரணமாகவே ஒருவர் உணரலாம். அபிவிருத்தியானது தனிமனித அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி, பிராந்திய அபிவிருத்தி, தேச அபிவிருத்தி என பல மட்டங்களில் நோக்கப்படும் நிலையில் அந்த மட்டங்கள் ஒவ்வொன்றிலும் தகவலும், தகவல் தொடர்பாடல் தொழினுட்பமும் மிகுந்த செல்வாக்கைப் பெறுகின்றன. சமுதாய அபிவிருத்தியில் தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் அவசியம் உணரப்பட்டுவரும் இந்தக் காலத்தில் கிராம சமுதாயங்களில் அதனை நடைமுறை ரீதியில் சாத்தியமாக்குவதற்கு ‘கிராம சமுதாய நூலகங்கள்’ பெரும் பங்காற்றுகின்றன. தகவல் மைய உலகில் கிராமிய சமுதாய அபிவிருத்தியில் சமுதாய நூலகங்களின் பங்கை விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகின்றது

**சமுதாய நூலகம் என்றால் என்ன?**

மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதிலும் அவற்றை அவர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் பொருத்தப்பாடுடையதாக கிடைக்கச் செய்வதிலும் சமுதாய நூலகங்கள் பங்கு வகிப்பதால் அவை அந்தந்த சமுதாயங்களினதும், ஒட்டுமொத்த தேசத்தினதும் அபிவிருத்திக்குக் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றன. நூலகங்கள் அறிவின் நுழைவாயிலாக அமைவதாலும், வாழ்க்கை முழுமைக்கான கற்றலுக்கான அடிப்படைகளைத் தருவதாலும், சுயாதீனமாக முடிவுகளை மேற்கொள்வதிலும் பண்பாட்டு மேம்பாட்டிலும் சமூகத்தில் வாழும் தனியன்களுக்கும் குழுக்களுக்கும் அவை பங்களிக்கின்றன என்று யுனெஸ்கோ (1994) பிரகடனம் குறிப்பிடுகின்றது. இது தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை இலவசமாகக் கையாளும் நிலைக்குச் சமுதாயங்கள் மாற வேண்டும் எனும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. சமுதாய நூலகங்கள் பல்வேறு வகையில் சமுதாய அபிவிருத்திக்குப் பங்களிக்கின்றன. சமுதாய அபிவிருத்திக்கான சமுதாய நூலகத்தின் பங்கினைக் கல்வி, சமூகக் கொள்கை வகுத்தல், தகவல், பண்பாட்டு விருத்தி, பொருளாதார விருத்தி முதலான துறைகளுடன் தொடர்புபடுத்தி பல அறிஞர்கள் ஆய்வு செய்து விளக்கியுள்ளனர். அவர்களது ஆய்வுகளில், ‘சமுதாய நூலகம்’ (community library) எனும் எண்ணக்கருவின் பொருள் பெரும்பாலும் ‘பொதுசன நூலகங்களின்’ (public library) தொழிற்பாடுகள் கிராமங்களை நோக்கி நீட்சிபெறுவதை கருத்தில் கொண்டே விளக்கப்படுவதைக் காணலாம். ஆயினும், கிராமிய சமுதாயத்தை மையப்படுத்தி ‘தகவல் வறுமைத் தணிப்பு’ (information poverty alleviation) தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் சமுதாய நூலகங்களைக் கிராமிய சமுதாய அபிவிருத்தியுடன் நேரடியாக தொடர்புபடுத்தியே விளக்கியுள்ளனர்.

சமுதாய நூலகங்கள் பிரதானமாக சமூகம், குடியியல், சுகாதாரம், கல்வி, உள்ளூர் பண்பாட்டு நடவடிக்கைகள், அரச மற்றும் உள்ளூராட்சி, கழகங்கள் முதலானவை தொடர்பான தகவல்களை மக்களுக்குத் தருகின்றன. இவை கிராம அபிவிருத்திக்கான தகவல்களை மக்கள் அறியும்வண்ணம் கொண்டுசேர்க்கிறன. கிராம சமுதாய நூலகங்கள் தகவல்களை வழங்கி அவர்களின் தகவல் வறுமையைக் குறைப்பதோடு கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவன் மூலம், நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை அறியத்தருவன. நல்லாட்சியிலும் சமுதாய முன்னேற்றத்திலும் நேரடியாக மக்களைப் பங்கேற்க வைக்கும் வகையில் தகவல்களை வழங்குவன. தகவல்களை வழங்குவதன் மூலம் திட்மிடுதல், தீர்மானம் மேற்கொள்ளல் முதலான செயன்முறைகளில் கிராமிய மக்களை தவறுகளைச் செய்வதிலிருந்து மீட்டெடுத்து, நிச்சயமின்மையைக் குறைத்து அவர்களின் வினைத்திறனை அதிகரிப்பன.

சமுதாய நூலகம் என்பது பொதுசன நூலகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஓர் எண்ணக்கருவாகும். இது பொதுசன நூலகத்துக்கு ஒரு மாற்றான எண்ணக்கருவாக முன்வைக்கப்படுகிறது. அரச நிதி உதவியுடனோ அல்லது அரச நிதியுதவி இன்றியோ உள்ளூர் மக்களால் நிறுவப்பட்டு அவர்களாலேயே ஆளுகை செய்யப்படுவது. நன்மைகள் சென்று சேராத சமுதாயங்களில் கற்றலுக்கான நானாவிதமான வசதிகளையும், சமுதாய வளர்ச்சிக்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்குமான தகவல் சேவைகளையும் வழங்கும். இது வெறுமனே புத்தகங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்து கற்பவர்களுக்கு வழங்குவதோடு மட்டும் நில்லாமல், எல்லா மக்களுக்கும் ஆலோசனை வழங்கும் செயற்பாட்டைச் செய்யும் நிலையமாகவும் சமுதாயத் தகவல்களை வழங்கும் நிலையமாகவும் தொழிற்படும்.

**தகவல் வறுமை என்றால் என்ன?**

இன்றைய காலத்தில் கிராம சமுதாயம் ஒன்றின் அபிவிருத்தியானது சிறப்பான வழியில் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், அந்தச் சமுதாய மக்களின் தகலைப் பயன்படுத்தும் வழிமுறை திறன்மிக்கதாக அமைதல் வேண்டும். ஏனெனில், கிராம சமுதாய அபிவிருத்தி மக்களுக்கான தகவல் கிடைக்கும் ஆற்றலில் தங்கியுள்ளது. தகவல்கள் சரியாகவும், போதுமான அளவிலும் கிடைக்கமுடியாத நிலையே பொதுவாக ‘தகவல் வறுமை’(information poverty) எனப்படுகின்றது. பிளைப்புக்கும் அபிவிருத்திக்கும் அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழியற்றிருத்தல்தான் தகவல் வறுமை எனப்படுகின்றது. குறித்தொதுக்கப்பட்ட சூழ்நிலையில் தனியன்களோ சமுதாயங்களோ தகவல் பெறும் வினைத்திறன்மிக்க வழிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான திறன்கள், இயலுமைகள், பொருட்கள் என்பவற்றை கொண்டிருக்காத நிலையே தகவல் வறுமை எனப்படுகிறது. இது தகவல் அல்லது தகவல் தொழினுட்பத்தினை பெறுவதிலான தேக்கநிலை

> **அபிவிருத்தி மக்களுக்கான தகவல் கிடைக்கும் ஆற்றலில் தங்கியுள்ளது. தகவல்கள் சரியாகவும், போது மான அளவிலும் கிடைக்கமுடியாத நிலையே பொதுவாக ‘தகவல் வறுமை’** (information poverty) **எனப்படுகின்றது. பிளைப்புக்கும் அபிவிருத்திக்கும் அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள வழியற்றிருத்தல் தான் தகவல் வறுமை எனப்படுகின்றது.**

என்பதற்கும் மேலான பொருளுடையது. அதாவது, தகவல்களை உபயோகித்தல், கையாளுதல், உருவாக்குதல், அவற்றின் உண்மையான பெறுமானத்தை உணர்தல் ஆகியவற்றையும் விளக்கும் ஓர் எண்ணக்கருவாகும்.

தகவல் வறுமையில் வாழும் ஒருவர் தகவலை உபயோகிப்பதில் ஒடுக்கப்பட்ட மனநிலையுடன் இருப்பர். அது ஒருவகை விரக்தி நிலையாகும். அது சமூக சமமின்மையால் ஏற்படும் ஒரு நிலையாகும். இந்நிலையில் அவர்கள் தகவல்களுக்கான தேவையை வரையறுக்கவோ, தகவல் தொடர்பாடல் அறிவைப் பெறும் தொழினுட்ப அறிவு மற்றும் மூலவளங்களைப் பெறவோ முடியாத நிலையில் இருப்பர். இதனால் ‘தகவல் வறியவர்’ (information poor) என்பது தனியன்கள் அல்லது குழுக்கள் அளவிலும் பண்பிலும் சமமானதும் போதுமானதுமான தகவல் பெற முடியாத நிலை என்றும் குறிப்பிடுவர். தகவலைப் பெறும் வழிகளுக்கான வாய்ப்புகள் சமூகத்தில் எல்லா பகுதியினர்க்கும் சமமாக இருப்பதில்லை. வசதி வாய்ப்புகள் அதிகமுள்ள நகரப் பகுதிகளில் தகவல் பெறும் வாய்ப்புகள் அதிகம். மாறாகக் கிராமங்களில் வாழ்பவர்கள் தமது வாழ்வை முன்னேற்றுவதற்கு அவசியமான தகவல்களைப் பெறும் வழிகளில் புறக்கணிக்கப்படுகின்றனர். பெருந்தொகையான கிராமங்களில் வாழும் மிகக் குறைந்த, நடுத்தரமான வருமானம் பெறும் பிரிவினருக்குத் தமது மேம்பாட்டிலும் வளர்ச்சியிலும் தகவல்களின் பங்கினைக்கூட உணரமுடிவதில்லை. அவர்கள் தகவல் தொழினுட்ப பிரயோகம் தொடர்பான பொருத்தமான அறிவையோ திறன்களையோ கொண்டிருப்பதில்லை.

இன்று எல்லோரும் முதன்மை கொடுத்துப் பேசும் அறிவுமையப் பொருளாதாரத்தில் (knowledge-based economy) இவர்கள் புறமொதுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். அறிவுமையப் பொருளாதாரத்துக்கு ஏற்ப தமக்கான தகவல்களின் தேவைகள் தொடர்பில் திருப்தியான நிலையைப் பெறுவதற்கான வழிகளைக்கூட அறியாதவர்களாக இருப்பர். தகவல் வறுமை என்பது ஒப்பீட்டளவில் உலகில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுகின்ற நாடுகளின் முதன்மை பிரச்சினையாகின்றது. அதிலும், இந்த நாடுகளில் வாழும் கிராமப்புற மக்களைப் பொறுத்தவரை இது மிக மோசமான நிலையிலிருக்கும். இதனால், கிராம சமுதாய நூலகங்களின் தொழிற்பாடு இந்த தகவல் வறுமையை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தகவல் பெறும் வழிமுறைகள், அதற்கான திறன்கள், அடிக்கட்டுமான வசதிகள், அவைபற்றிய புரிதல்கள் என்பவற்றைக் கிராம மக்களுக்கு வழங்கி அவர்களை வலுப்படுத்துவது கிராம சமுதாய நூலகங்களின் பணியாகின்றது.

**சமுதாய நூலகங்களின் தொழிற்பாடுகள் எவை?**

கிராம மட்டங்களில் ஏற்கனவே பல சமுதாய மட்ட நிறுவனங்கள் தொழிற்படுகின்றன. சன சமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் முதலான மரபு வழியான நிறுவனங்கள் மக்களது வாழ்நிலை மேம்பாட்டுக்குப் பணிசெய்யும் நோக்கில் இயங்குகின்றன. அவற்றின் ‘வன்-வலுவேடு’(hard power), தவிர்க்க முடியாமல் இன்றைய காலத்துக்கு அவசியமான ‘மென் வலுவை’(soft power) கொடுப்பதற்குச் சமுதாய நூலகங்கள் இன்றியமையாதவை. குறிப்பிட்ட சமுதாய மட்ட நிறுவனங்களுக்கு மேலாக சமுதாய நூலகங்கள் என்னென்ன தொழிற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்:

கிராமப்புற மக்களுக்கான தகவல் பரப்பும் மையமாகத் தொழிற்படுகின்ற வேறு மூலங்களிலிருந்து ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்ட போதிலும், அவை கிராம மக்களுக்கான பொருத்தப்பாடான தகவல்களாயிருப்பதில்லை. இதனால் சமுதாய நூலகங்கள் கிராம மக்களுக்கான ஒரு முதன்மை மையமாக(hub) அமைகின்றது.

சமுதாய நூலகங்கள் மக்களுக்கு ஆலோசனை வழங்கும் நிலையங்களாகத் தொழிற்படுகின்றன. வெறுமனே தகவல்களை மட்டும் வழங்குவதோடு திருப்திகொள்ளாது, அத்தகவல்களின் வாயிலான இறுதிப்பயனை முழுமையாகப் பெறக்கூடிய வகையிலான தொடர்ச்சியான வழிகாட்டலையும் ஆலோசனையையும் வழங்கு

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# சுமந்திரனின் மேற்குலக அரசியல்ப் பயணம் ஏற்படுத்தியுள்ள சர்ச்சைகள்

கருணாகரன்



சுமந்திரன் அணியின் மேற்குலக அரசியற் சுற்றுலா பற்றிய பேச்சே இரண்டு வாரங்களாகத் தமிழ்ப்பரப்பில் நிலவுகிறது. ஒரு தரப்பு ஆதரவாகப் பேசுகிறது. மறு தரப்பு இதை எதிர்த்து நிற்கிறது. இதனால் இந்தப் பயணம் விவகாரமாகிச் சூடு பிடித்திருக்கிறது.

இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, “இந்தச் சுற்றுலா ஒன்றும் முக்கியமானதல்ல. இது சுமந்திரனின் எதிர்கால அரசியல் லாபத்துக்கான ஏற்பாடு. அவர் தமிழரசுக் கட்சியிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலும் தலைமைத்துவ நிலையைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாட்டின் ஒரு வடிவமே இதுவாகும். சுமந்திரன் இந்த இடத்தை எட்ட வேண்டுமென்றால் கட்சிக்குள்ளும் மக்களிடத்திலும் வெளியுலகிலும் கணிசமான ஆதரவுத் தளம் தேவை. அதையே அவர் தொடர்ச்சியாகச் செய்து வருகிறார்.

சுமந்திரனின் ஆதரவாளர்களாக உள்நாட்டில் இருப்போரும் வெளியுலகில் இருக்கும் புலம்பெயர் தமிழர்களும் இதைத் தமக்குரிய சாத்தியங்களின் வழியே செய்து வருகிறார்கள். அப்படியான ஒன்றுதான் உலகத் தமிழர் பேரவையும் சக இணை அமைப்புகள் மற்றும் ஆதரவாளர்களும் இணைந்து மேற்கொண்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் சந்திப்பு, கனேடிய விஜயம், அடுத்து நடப்பதாக எதிர்பார்க்கப்படும் பிரித்தானியப் பயணம் போன்றவை.

கூடவே, மேற்குலகின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்றவாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைத் தயார்ப்படுத்துவதும் இந்த அடிப்படையில்தான் இந்தப் பயணமும் சந்திப்புகளும் நடந்து வருகின்றன. இதை மறைத்து மக்களின் காதுகளில் பூவை வைப்பதற்கு இவர்கள் எல்லோரும் முயற்சிக்கிறார்கள்”.

மேலும் இந்தத் தரப்பின் குற்றச்சாட்டானது, “முதலில் இந்தப் பேச்சுகள் பயனற்றவை. பெறுமதியற்றவை என்பதாகும். ஏனென்றால், பேச்சுகளில் பங்குபற்றிய அமெரிக்கப் பிரதிநிதிகளின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் “இலங்கையிலிருந்து வந்த சிறுபான்மைத் தரப்புப் பிரதிநிதிகளின் Minority representatives கருத்துகள் கேட்டறியப்பட்டன” என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது எவ்வளவு இழிவான, பலவீனமான நிலையை உருவாக்கியுள்ளது? தமிழ் மக்களுடைய இதுவரையான போராட்டத்தையும் தமிழ் மக்கள் ஒருதேசிய இனம் என்ற அடிப்படையையும் கூடக் கவனிக்காமல் எப்படி இந்தப் பேச்சுகளில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று பங்குபற்ற முடியும்? இதற்கான அங்கீகாரத்தையும் அதிகாரத்தையும் கொடுத்தது யார்? இந்த அடிப்படைத் தவறை அமெரிக்கத் தரப்பிடம் முதலில் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். நாம் ஒரு தேசிய இனத்தின் பிரதிநிதிகள். நமக்கென்ற வரலாறும் வரலாற்றுத் தாயகமும் உண்டென்பதைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் Minorities என்பதற்குச் சிரித்துக் கொண்டேயிருந்தால் (அல்லது பம்மிக்கொண்டிருந்தால்) அவர்கள் அந்த அடிப்படையில் தான் இந்தப் பிரச்சினையை - தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையைப் பார்ப்பார்கள். இந்த அடிப்படையில் தான் தீர்வையும் வலியுறுத்துவார்கள். இந்த நிலையில் பிறகெப்படி, எந்த அடிப்படையில் அரசியல் தீர்வு பற்றிப் பேச முடியும்? அந்தத் தீர்வு எவ்வாறானதாக அமையும்? அதனால் பயனென்ன?



எனவேதான் நாம் இதை - இந்த நாடகத்தை - எதிர்க்கிறோம். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு யாருடைய கைப்பொம்மைகளாகவும் இருக்க முடியாது. அப்படி இருப்பதாக இருந்திருந்தால் இவ்வளவு அழிவையும் இவ்வளவு கால விரயத்தையும் நாம் - நமது இனம் - சந்தித்திருக்கத் தேவையில்லை. மக்கள் கூட்டமைப்புக்கு ஆணை தந்ததும் சுமந்திரனை மக்கள் தேர்வு செய்ததும் அரசியல் வியாபாரம் செய்வதற்கல்ல. அரசியல் தீர்வைப் பெறுவதற்கு. அதற்கான முன்னெடுப்புகளைச் சரியாக முன்னெடுப்பதற்குத் தான். இப்படி வழங்கப்பட்ட ஆணையையும் அதிகாரத்தையும் துஸ்பிரயோகம் செய்வதற்கல்ல.

இந்தப் பயணத்தின் போது மட்டுமல்ல, ஏற்கெனவே கடந்த நல்லாட்சிக் காலத்திலும் சுமந்திரனும் சம்மந்தனும் இப்படித்தான் குழப்பமாக - மாறி மாறிக் கதைப்பார். சிங்கக் கொடியைத் தூக்குவார்கள். பிறகு அதற்கொரு மறுப்பு விளக்கத்தைச் சொல்லுவார்கள். ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொள்வார்கள். பிறகு அதற்கொரு நியாயம் சொல்வார்கள். முதலில் அரசியல் விடயத்தில் நிதானமும் தெளிவும் வேண்டும். அதில் உறுதிப்பாடு வேண்டும். இதை சம்மந்தனும் சுமந்திரனும் கடந்த காலத்தில் வெளிப்படுத்தத் தவறியுள்ளனர். இதனால்தான் இவர்களுக்கு தமிழ் மக்களிடத்தில் பலமான எதிர்ப்பு உருவாகியுள்ளது. நம்பகத்தன்மையை இழந்தால் மக்கள் சந்தேகிப்பார்கள். எதிர்ப்பார்கள். இது தவிர்க்க முடியாது.

> “சுமந்திரனும் சம்மந்தனும் இப்படித்தான் குழப்பமாக - மாறி மாறிக் கதைப்பார். சிங்கக் கொடியைத் தூக்குவார்கள். பிறகு அதற்கொரு மறுப்பு விளக்கத்தைச் சொல்லுவார்கள். ஒற்றை ஆட்சியை ஏற்றுக்கொள்வார்கள். பிறகு அதற்கொரு நியாயம் சொல்வார்கள். முதலில் அரசியல் விடயத்தில் நிதானமும் தெளிவும் வேண்டும். அதில் உறுதிப்பாடு வேண்டும். இதை சம்மந்தனும் சுமந்திரனும் கடந்த காலத்தில் வெளிப்படுத்தத் தவறியுள்ளனர்.”

இதையெல்லாம் மறைத்துக் கொண்டு சுமந்திரன் கொம்பனிக்குச் சிலர் வெள்ளையடிக்க முற்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய மனச் சாட்சியையும் அறிவையும் தொட்டுச் சொல்லட்டும். சுமந்திரனுடையதும் சம்மந்தனுடையதும் அரசியல் அணுகுமுறைகளும் நெறிமுறைகளும் சரியா?” என்று நீள்கிறது.

இவர்கள் மேலும் சொல்கிறார்கள், “தமிழரசுக் கட்சியிலும் கூட்டமைப்பிலும் தமக்கேற்றவிதமான தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தியாவும் அமெரிக்காவும் விரும்புகின்றன. ஏன் இலங்கைக்குக் கூட இந்த விருப்பம் உண்டு. யாருடனும் பகைத்துக் கொள்ளாத - சொந்த மக்களையும் விட மாற்றாருக்கு இனிப்பாக நடந்து கொள்ளத் தக்க - ஒரே தரப்புத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். அதிலும் சம்மந்தனும் சுமந்திரனும் இதில் நல்ல சமத்தர்கள். இதை வெளியுலகம் சரியாகவே மதிப்பிட்டுள்ளது. ஆகவே அவர்கள் இந்தத் தலைமைத்துவத்தையே ஆதரிப்பர். இதற்கான ஏற்பாடுகளில் ஒன்றே இந்தப் பயணங்களும் இலங்கையிலும் வெளியிலும் நடக்கின்ற சந்திப்புகளும்” என்று.

இவர்கள் தங்களுடைய நியாயங்களை இவ்வாறு சொன்னாலும் அதை பிரயோக நிலையில் கையாள்வதும் வெளிப்படுத்துவதும் தவறான வழிமுறைகளாகவே உள்ளன. தற்போது கனடாவில் சுமந்திரனுக்கு எதிர்ப்புக் காட்டிய விதமும் கடந்த காலத்தில் அவுஸ்திரேலியாவில் எதிர்த்து விரட்டியதும் ஏற்புடையதல்ல. அது அடிப்படையான ஜனநாயக உரிமையை மறுதலிப்பதாகும். மட்டுமல்ல, அரசியற் பண்புமல்ல.

ஆனால், இந்தப் போக்கை உருவாக்கியதே தமிழரசுக்கட்சியும் பின்னர் தமிழரசுக்கட்சியும் இணைந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியுமே. எதிர்க்கருத்தாளர்களையும் மாற்று நிலைப்பாட்டினரையும் துரோகிகள் என்று அடையாளப்படுத்தி மறுதலிப்பைச்செய்து காட்டியதே தமழரசுக் கட்சிதான்.

இதற்கான அறுவடையை அது பெற்றது. தர்மலிங்கம், ஆலாலசுந்தரம், அமிர்தலிங்கம் கொலைகள் என்று தொடர்ந்து வந்த இந்த அறுவடை இப்பொழுது சம்மந்தன், சுமந்திரனில் வந்து நிற்கிறது. இது இதோடு நிற்கப் போவதில்லை. இன்னும் யார் யாருடைய தலைகளில் இறங்குமோ? ஆனால் நாம் இதை - இந்த மறுப்புப் போக்கை அனுமதிக்கவோ ஆதரிக்கவோ முடியாது. ஒருவர் கருத்துரைக்கும் இடத்தை - சந்தர்ப்பத்தை வழங்கியே ஆக வேண்டும். விவாதங்கள் அதன் பிறகுதான்.

இரண்டாவது தரப்பினர் சுமந்திரனையும் அவருடைய செயற்பாடுகளையும் ஆதரிப்பவர்கள். இந்தப் பயணத்தையும் தற்போது நடக்கும் அமெரிக்க, கனடிய, பிரித்தானிய சந்திப்புகளையும் ஏற்பாடு செய்தவர்களும் அதில் பங்கேற்று ஆதரிப்போரும். இவர்களுக்கு எதைப்பற்றியும் கேள்விகளில்லை. அல்லது பொருட்டில்லை. சமகாலச் சூழலில் தங்கள் அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்று தவிப்பவர்கள்.

இவர்கள் மூன்று வகையினர். ஒன்று புலம்பெயர் நாடுகளில் மிக வசதியான வாழ்க்கைத் தளத்தைக் கொண்டவர்கள். ஏறக்குறைய பிரமுகர் நிலையினர். ஆனால் அந்தப் பிரமுகர் நிலையைப் பேணுவதற்கான பின்னணிகள் குறைவாக இருப்போர். அதனால் சுமந்திரன் போன்ற சக்திகளை நிபந்தனையின்றி ஆதரிக்கின்றனர். இது சுமந்திரனுக்கும் வாய்ப்பாக இருக்கிறது. ஆக இந்த மேல் வர்க்கப் பிரதிபலிப்பின் வெளிப்பாடுகளே நடப்பவை.

இரண்டாவது, உள்நாட்டில் உள்ள சுமந்திரன் - கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் ஆதரவு ஊடகவியாளர்கள். இவர்கள் பகிரங்க விவாதத்துக்கோ எழுப்பப்படும் கேள்விகளுக்கோ ஒழுங்கான முறையில் பதிலளிப்பது கிடையாது. பதிலாக நியாயப்படுத்தல்களைச் செய்வதிலேயே குறியாக இருக்கிறார்கள். இப்போது கூட சுமந்திரன் ஒரு மக்கள் பிரதிநிதி. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். ஆகவே அவரை எதிர்ப்பதும் அவமதிப்பதும் அந்த மக்களை - அவரைத் தெரிவு செய்த மக்களை அவமதிப்பதாகும் என்றெல்லாம் வித்தகம் பேசி வருகின்றனர்.

இது சுமந்திரனின் மீதுள்ள பற்று, அபிமானம் போன்றவற்றால் எழலாம். தனிப்பட்ட ரீதியில் இதைச் சொல்லவும் சுமந்திரனை ஆதரிக்கவும் விடவுமான உரிமைகள் இவர்களுக்குண்டு. ஆனால், சுமந்திரனை, சம்மந்தனை, கூட்டமைப்பைத் தெரிவு செய்த மக்களை சுமந்திரனும் சம்மந்தனும் கூட்டமைப்பினரும் அவமதிப்பதைப்பற்றி எப்போதாவது பேசியிருக்கிறார்களா? அப்படிப் பேசத் தயாராக இருக்கிறார்களா? அல்லது இதற்கான இவர்களுடைய நீதி என்ன?

மூன்றாவது, சுமந்திரனுடைய - கூட்டமைப்பின் அரசியலுடன் உடன்படாதவர்கள். ஆனால், அவருடைய பேசும் உரிமையையும் அவர் தன்னுடைய அரசியலை முன்னிறுத்துவதற்கான உரிமையையும் வழங்க வேண்டும். அதைத் தடுக்க முடியாது. அது ஜனநாயக விரோதம் என்போர். என்னுடைய நிலைப்பாடும் இதுவே. ஆனால், இவர்களின் இந்த நியாயமான குரலை சுமந்திரன் (த.தே.கூ) தந்திரோபாயமாகத் தனக்கேற்ற விதமாக எடுத்துக் கொள்ளும் போக்குத் தொடருமே தவிர எதையும் பரிசீலிக்கத் தயாராக இல்லை. ஆக மொத்தத்தில் இவ்வாறான ஒரு கொதிப்புச் சூழலில்தான் கடந்த இரண்டு வாரங்களைத் தமிழ்த்தரப்புக் கடத்தியது. அடுத்த வாரங்களில் மாவீரர் நாள் தொடர்பான சூடான சேதிகள் இருக்கும். அதற்குப் பிறகும் ஏதாவது வராமலா போய் விடும்? ■

# தேமதுர 'துரோகி' ஓசை உலகமெல்லாம் பரவுமா..?

அவதானி



இலங்கையில் தமிழ் ஈழ அரசியல் வட்டுக்கோட்டை தீர்மானத்துடன் ஆரம்பமாகி பல ஆண்டுகளாகிவிட்டன.

அதனையடுத்து அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களில் ஒருவரான வட்டுக்கோட்டையின் முன்னாள் நாடாளுமன்றப்பிரதிநிதி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் தாம் வளர்த்த கடாக்களினாலேயே மோதப்பட்டு உயிரிழந்தார்.

அதற்கு முன்னர், யாழ். மேயர் துரையப்பா அதே கடாக்களினால் கொல்லப்பட்டபோதும் அவரை இனத் துரோகி என்றனர். இனத் துரோகிகளை இயற்கையாக சாகவிடாதீர்கள் என்று இளைஞர்களை உசுப்பேத்திய உணர்ச்சிக் கவிஞரும் நீண்ட நெடுங்காலமாகத் தமிழ்நாட்டில் அஞ்ஞாத வாசமிருக்கிறார்.

தன்னை ஈழத்தமிழினம் மறந்துவிடும் என்பதனால் அவ்வப்போது தனது இருப்பைக்காண்பிப்பதற்குச் சமகால மெய்நிகரில் வெளியே வருவார்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகத் தேர்தல்களில் வெற்றிபெற்று வந்த மட்டக்களப்பு பிரதிநிதி

> **“2001 ஆம் ஆண்டு விடுதலைப் புலித் தலைமைப்பீடத்தினால் உருவான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவை ஆதரித்தது. இவரும் 2009 மே மாதம் புலிகளின் விடுதலைப் போராட்டம் மௌனமாக்கப்படுவதற்குக்காரணமாகத்திகழ்ந்தவர்களில் ஒருவர். அந்த வெற்றியை ராஜபக்ஷ சகோதரர்களுடன் கேக்கும் பாற்சோறும் வெட்டி உண்டு களித்தவர்.”**

செல்லையா இராஜதுரையை தோற்கடிப்பதற்காகத் தளபதி அமிர்தலிங்கத்தினால் களமிறக்கப்பட்டவர்தான் அந்த உணர்ச்சிக்கவிஞர். இறுதியில் அவர் தம்பிமாருடன் இணைந்த காலத்தில், தளபதி கொழும்பில் துரோகிப் பட்டத்துடன் கொல்லப்பட்டவேளையில் அதனைக் கண்டிக்காமல் மௌனம் காத்தவர் அந்தக்கவிஞர்.

யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா துரோகி, இராஜதுரை துரோகி, இவர்களை துரோகி என்று



சொல்லி இளைஞர்களை உசுப்பேத்திய அதே அமிர்தலிங்கமும் இறுதியில் துரோகிப் பட்டத்துடன் மேல் உலகம் அனுப்பப்பட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினுள்ளும் முதலில் மாத்தையா மகேந்திரராஜா துரோகியாகி, இறுதியில் காணாமலேயே போனார். கிழக்குத் தளபதி கருணா அம்மானுக்கும் அந்தப் பட்டம் சூட்டப்பட்டது.

அந்த இயக்கத்தின் தலைவரும் இயக்கமும் 2009 மே மாதம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், அரசியல் அரங்கிற்கு வந்துள்ள மதியாபரணம் சுமந்திரன் அவர்கள் தற்போது துரோகியாக வர்ணிக்கப்படுகிறார்.

அவர் புகலிட நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் மக்களுடனான சந்திப்புக்களுக்குச் செல்லும்போதெல்லாம் இந்த வசைமொழியைப் பெற்றுக்கொண்டே தாயகம் திரும்புகிறார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடனான பேச்சுவார்த்தைக்குச் சென்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு - வடக்கு பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாணக்கியனும் சுமந்திரனும் இலங்கை திரும்புவதற்கு முன்னர் கனடாவில் இயங்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளையினர் நடத்திய பொது மக்கள் சந்திப்புக் கூட்டத்திற்கும் சென்றனர்.

அவர்கள் வாஷிங்டன் சென்றுவிட்டு, கனடா வந்து நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்த்துவிட்டு, தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளின் விருந்துபசாரத்துடன் திரும்பியிருக்கலாம்.

ஆனால், அவர்கள் அரசியல்வாதிகள். தாம் என்ன செய்கின்றோம்..? என்பதை ஊடகங்கள் வாயிலாக மாத்திரம் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்குத் தெரிவித்தால் மட்டும் போதாதென்று நேருக்கு நேர் சந்தித்துப் பேசுவதற்கும் விருப்பம் தெரிவிப்பது ஜனநாயக மரபுதான்.

தொடர்ச்சியாக சுமந்திரனைக் குறிவைத்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பிரசாரங்கள் சுமந்திரனை மேலும் மேலும் பலப்படுத்தியே வந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் அவர் அவுஸ்திரேலியா வந்திருந்தபோதும் அவர் கலந்துகொண்ட கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

அவருக்கு வெளிநாடுகளில் இத்தகைய வரவேற்பும் துரோகி பட்டமும் கிடைக்கிறது என்பதற்காக எந்தவொரு வெளிநாட்டு இராஜதந்திரிகளும் அவரைப் புறம் ஒதுக்கிவிடவில்லை.

தொடர்ந்தும் இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள் உட்பட வெளிநாட்டு அமைச்சர்கள், செயலாளர்களைச் சந்திக்கும் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளில் முக்கியமானவராகவே அவர் கருதப்படுகிறார்.

தேமதுர தமிழ் ஓசையை உலகமெல்லாம் பரப்பவேண்டிய ஈழத்தமிழர்களில் ஒரு சாரார் , தொடர்ச்சியாகத் தங்கள் சுருதியை மாற்றிப் பாடி வருகின்றனர்.

சாணக்கியனும் சுமந்திரனும் கனடா கூட்டத்தில் இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணவேண்டுமாயின் 1987 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு - கிழக்கு இணைந்த அதிகாரப் பரவலாக்கல் முறைமையே தேவை என்றுதான் பேசினார்கள். அதற்காகவே தொடர்ந்து போராடுவதாகவும் சொன்னார்கள்.

அதாவது, வடக்கும் - கிழக்கும் இணைந்த தீர்வுதான் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள சரியான தீர்வு என்பது அவர்களின் வாதம். அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினதும் தமிழரசுக்கட்சியினதும் நிலைப்பாடும் அதேதான்.

இந்த நிலைப்பாட்டுடன்தான் சில மாதங்களுக்கு முன்னர் சாணக்கியனும் சுமந்திரனும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் நெடும்பயணப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்தினர்.

இந்தப்பின்னணிகளுடன் நாம், குறிப்பிட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை முறைமையையும் அது ஏன் இல்லாமல்போனது என்பதையும் அதனை இல்லாதொழித்தவர்கள் யார்..? என்பதையும் நினைவுபடுத்திப்பார்த்தல் வேண்டும்.

அந்த ஒப்பந்தத்திற்கு எதிராக நின்றவரான அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, தான் “My Boys” உடன் பேசி தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடுவேன், எனச் சொன்னதும் கொழும்புக்கு ஓடிச் சென்றவர்கள் யார்..? என்பது தெரியும்தானே..?

இன்றும் வடக்கு - கிழக்கு இணைந்த தீர்வுதான் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைக்கும் சரியான வழியைக் காண்பிக்கும் என்று அடிக்கடி இந்தியத் தரப்பிடம் நினைவூட்டிக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை உருவாக்கியவர் யார் என்பதும் தெரியும்தானே..?

2001 ஆம் ஆண்டு விடுதலைப் புலித்தலைமைப் பீடத்தினால் உருவான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஃபீல்ட் மார்ஷல் சரத்பொன்சேக்காவை ஆதரித்தது. இவரும் 2009 மே மாதம் புலிகளின் விடுதலைப் போராட்டம் மௌனமாக்கப்படுவதற்குக் காரணமாகத் திகழ்ந்தவர்களில் ஒருவர். அந்த வெற்றியை ராஜபக்ஷ சகோதரர்களுடன் கேக்கும் பாற்சோறும் வெட்டி உண்டு களித்தவர்.

அதன்பிறகும் தமிழ்த்தேசியக்கூட்மைப்பைச்சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவுஸ்திரேலியா, கனடா உட்பட சில ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் பயணித்து பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர்.

எனினும் போர் முடிவுக்கு வந்த பின்னர் நான்கு அதிபர் தேர்தல்களும் நாடாளுமன்றத் தேர்தல்களும் நடந்துவிட்டன.

1987 இல் அறிமுகமான வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதைத் தவிர, சிறந்த செயற்பாடின்றி இரண்டு மாகாணங்களும் தனித்தனியாக இயங்கியும் ஆக்கபூர்வமாக எதனையும் தமிழ் மக்களுக்காகச் சாதிக்கமுடியாமல் போனதையும் தவிர வேறு என்ன நடந்தது..?

ஆனால், ஏதோ நடந்திருக்கிறது. தமிழர் தரப்பில் புதிய கட்சிகள் குட்டிபோட்டுள்ளன. ஒன்றிணைந்திருந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீதியரசர் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோர் தனி வழிசென்றனர்.

செல்வம் அடைக்கலநாதனும் சித்தார்த்தனும் புளியம்பழமும் ஓடுமாக இக்கூட்டமைப்பில் ஒட்டுறவின்றி ஊசலாடுகின்றனர்.

சுமந்திரனும் சாணக்கியனும் அமெரிக்கா - கனடா சென்று வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றி அங்குள்ள இராஜதந்திரிகளைச் சந்தித்துப்பேசிவிட்டு மீண்டுகொண்டிருக்கையில், இலங்கை வந்திருந்த ஐ. நா. மத்திய கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளுக்கான அரசியல் விவகாரங்களுக்கான உதவிப்பொதுச்செயலாளர் காலித் கியாரியிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள், “இலங்கை அரசு ஒரே நாடு ஒரே சட்டம் என்பதன் மூலம் அதிகாரப்பகிர்வுக்குத் தாயாரில்லை” என்று சுட்டிக்காண்பித்தனர்.

இது இவ்விதமிருக்க, புகலிடத்தில் சுமந்திரன் போன்றவர்களுக்கு எதிராக துரோகிப் பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்தக் காட்சிகளைப் பார்த்து ஈழத் தமிழினம் தலையைப் பிய்த்துக்கொள்ளுகிறது.

யார் செய்வது சரி..? யார் செய்வது பிழை..? என்பது தெரியாமல், யாரைத்தான் நம்புவதோ ..? என்று குழம்புகிறது.

■

## வாழ்வியல் வழக்காறுகள்

# தாயறை


தி.செல்வமனோகரன்

‘வீட்டைக்கட்டிப்பார் கலியாணத்தைச் செய்துபார்’ என்பது தமிழிலுள்ள மரபுத் தொடர்களில் ஒன்று. எமது வாழ்வை ஆட்டிப் படைக்கின்ற நம்பிக்கைகள் சாஸ்திரங்களில் பிரதானமானவை தனிநபர் சாதகம், இராசிபலன், மனையடி சாஸ்திரம் எனும் வாஸ்துசாஸ்திரம் போன்றவை. தனிமனித வாழ்வியல் சாதனைகளில் ஒன்றாகச் சொல்லப்படுவது வீடு கட்டுதல். குடும்ப அலகின் ஸ்திரத்தன்மையைத் தீர்மானிக்கும் சக்தி இதற்கு உண்டு. வாடகை வீட்டுக்குச் செல்லுதல் அல்லது ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மாறிச் செல்கின்ற போதும் வாஸ்து எம்முன்னே நிற்கின்றது.

வீட்டின் கட்டமைப்பைத் தீர்மானிப்பது சாமியறை என்று சுட்டப்படுகின்றது. சாமியறையே வீட்டின் பிரதானமானதாகக் குடும்பத்தலைவரின் அல்லது யாருக்குரிய வீடோ அவரது சோதிடப் பலனுக்கு ஏற்பவே சாமியறையின் வாசலுக்கான திசை தீர்மானிக்கப்படுகின்றது. அதுவே வீட்டின் திசையாகவும் கருதப்படும். சாமியறைக்கு எதிரே அறைகள் கட்டுவதை, மூடிக்கட்டுவதைத் தவிப்பர். ஏனைய அறைகளை விட, விறாந்தைகளை விட நீளத்தில் - அகலத்தில் பெரியதாக சாமியறை காணப்படும். ஏதோ ஒரு விதத்தில் அது பெரியதாக இருக்கும். இதனால் இது ‘பெரியறை’ எனப்படுகிறது.

எத்திசை நோக்கிய அறையாயினும் அவ்வறையினுள் தட்டு அல்லது அலுமாரி அமைக்கப்பட்டு மேற்குச் சுவரோடு ஒட்டியதாக சுவாமிப்படங்கள் கிழக்கு நோக்கிய திசையில் வைக்கப்படும். அவையே வீட்டின் பிரதான படங்கள், வழிபாட்டுக்குரியவை. இதனால் இந்த அறை சாமியறை, படஅறை எனப்பலவாறு சுட்டப்படுகின்றது.

அதுசரி, சுவாமிப்படங்கள் எப்போது எம்மிடம் வருகைதந்தன. பிரித்தானியராட்சிக்காலத்தில் அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்ட பின்பே அச்சுப்பண்பாடு எங்கள் தேசங்களில் உருவாகியது. அதற்குப்பின்பே சுவாமிப்படங்கள் ஜனரஞ்சகப்பட்டன. அதுவரை மேட்டுக்குடியினருள் சிலரே ஓவியங்களை வரை வித்துத் தத்தம் வீடுகளில் வைத்திருக்கக்கூடும். அவ்வாறாயின் சுவாமியறை என்ற ஒரு சொல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்பு பயன்பாட்டில் இருந்திருக்குமா? எனும் வினா மேற்கிளம்புகின்றது.




வீடு எனும் சொல் குடிசை கட்டி வாழ்ந்த வாழ்வியலில் குடிசையே குறித்தது. குடிசை - அடுக்களை (குசினி) எனும் இருகட்டுமானங்களே - அறைகளே இருந்தன. குடிசையே வீடு என்ற அளவில் களஞ்சியமாக, தூங்கும் அறையாக, என எல்லாமாகத் திகழ்ந்தது. ஓரளவு செல்வம் பெற்றவர்களின் இரு அறை, மூவறை உள்ள வீடுகளிலும் பிற்கால நாற்சார் வீடுகளிலும் பிரதான அறையை வீடு என்று கூறும் வழக்கம், இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை இருந்தது. குடிசை மண்வீடு தொட்டு நாற்சார் வீடு வரையான கட்டுமானத்தில் பிரதான அறையே ‘தாயறை’ எனவும் வழங்கப்படுகின்றது. நிலம் தாயாக மதிக்கப்பட்டது. நிலத்தில் விளைந்த தானியங்களைச் சேமித்து வைக்குமிடம் தாயறையாயிற்று. ஒற்றைக்குடிசை இருந்த காலத்தில் அது பெற்ற முக்கியத்துவத்தைப் பின் தாயறை பெறுகிறது. குறிப்பாக விவசாயச் சமுதாயத்தில் அது தானியக் களஞ்சியமாகவே திகழ்ந்தது. தாயறையின் வாசலில் வயலின் ‘புதிர் எடுத்தல்’ நிகழ்வின் மூலம் பெறப்பட்ட நெற்கதிர் கட்டப்படுகிறது. இன்று அது வீட்டின் தலைவாசலுக்கு மாற்றம் பெற்றுவிட்டது. விஷேச தினங்களில் தாயறையின் வாசலில் கட்டப்பட்ட மாவிலைகள் இன்று வீட்டு வாசலிலும் கட்டப்படுகின்றன.

தாயறை வாசலே ஒரு காலத்தில் தலைவாசலாகவும் இருந்தது. கூரை முகடு உயர்வாக இருந்தாலும் தாயறையின் வாசல் பதிவானதாகக் குனிந்து போகும் தன்மையுடையதாகவே கட்டமைக்கப்படுகின்றது. மண்ணால் அமைக்கப்பட்ட குடிசையில் அதியுயர் வாசலைக் கட்டமைத்தல் சுவருக்குப்பலமில்லை என்பது காரணமாகச் சுட்டப்பட்டாலும் அது தாயறைக்கு வழங்கப்பட்ட மரியாதையாகவே கருதப்பட்டது. யாருக்கும் வணங்காமுடியாகத் திகழ்ந்த விசுவாமித்திர முனிவரை, தலைகுனிய வைக்கத் தலைவாசலைப் பதிவாக வைத்து விருந்துக்கு அழைத்த புராண வரலாறு பிரசித்தமானது. தாயறை யன்னலும் சிறியதாகவே கட்டமைக்கப் பட்டது. இவ்வாறு ‘சிறிய’ வெளிகள் கட்டமைக்கப் பட்டதன் பின்னணி பாதுகாப்பு - கட்டட வெடிப்பு, களவு பற்றிய பிரக்ஞை காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் அதுவே மரபாக, பண்பாடாக மாறியது. அது ஒளிபுகாத் தன்மையுடைய தாயறைகள் செல்வத்தை அழியவிடாது தடுக்கும் என்ற




நம்பிக்கையாக உருவாயிற்று. யாழ்ப்பாணத்து தீவுப்பிரதேசங்களில் குறிப்பாக காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்டுள்ளவர்கள் தமது வீடுகளில் தாயறைக்கு யன்னல் வைப்பதில்லை. யன்னல் வைத்தாலும் அதனைத் திறப்பதில்லை என்பதை இந்நம்பிக்கைவழி சிந்திக்கலாம்.

ஒருவர் தன் சொத்துக்களை - தானியங்கள், உணவுப்பொருட்கள், பணம், நகை, பாத்திரங்கள் என்பவற்றை சேமித்துப் பாதுகாக்கும் இடமாகவும் தூய்மையான இடமாகவும் தாயறை கருதப்பட்டது. பசுஞ்சாணகத்தால் வாராவாரம் மெழுகுதலும் மஞ்சள் தெளித்தலும் தூய்மை சார்ந்த செயற்பாடுகளாக இருந்தன. மஞ்சள், கிருமிகளை அண்டவிடுவதில்லை. வாசலில் கட்டும் வேப்பிலையும் நெல்லுடன் வைக்கப்படும் வேப்பிலையும் வேர்க்கம்பூவும் பூச்சி விரட்டிகளாயின. பொருட்கள் இதன்வழி பாதுகாக்கப்பட்டன. இதன் வளர்ச்சியே தாயறை தூய்மையுடையது என்ற கருத்தேற்றம் நிகழக் காரணமாயிற்று. அதுவே சாமிப்படம் வைத்து வணங்கும் அறையாயிற்று. தூய்மை மிக்கதான இவ்வறையினுள் பெண்கள் தீட்டுக்காலத்தில் உட்புகுவதில்லை. ‘வீட்டுக்கு வெளியில்’ என்ற மரபுத்தொடர் பயன்பாடு இதன்வழியேதான் பெண்களிடம் உருவாயிற்று. ஆண்களிடமும் பெண்களிடமும் மரணத்தீட்டு, பிள்ளைப் பேற்றுக்காலத் தீட்டு முதலான தீட்டுக்குரியவர் தாயறைப் பொருட்களை, தானியங்களைத் தொடக்கூடாது எனும் பழக்கமும் இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் தெய்வங்கள் பரந்த நிலத்தின் கிணற்றடிகளிலும் வேறு நீர் நிலைகளை அண்டியும் நீண்டகாலம் செழித்து நிற்கும் பெரு மரங்களின் கீழும் குலதெய்வங்களாகவும் காவல்தெய்வங்களாகவும் வீற்றிருந்தன. புனித நாட்களில் குறித்த தினத்தில் நேர்த்திக் கடன் நிறைவேற்றக்காலத்தில் பொங்கிப் படைத்து மடை பரவி வழிபடப்பட்டன. விளக்கேற்றல் பண்பாடும் காணப்பட்டது. சீதனம், முதுசம், எனப் பல காரணங்களால் நிலங்கள் துண்டாடப்பட, துண்டாடப்பட்ட அங்கிருந்த தெய்வங்கள் குறிச்சிக்குரிய, குலத்துக்குரிய தெய்வமாயிற்று. இன்றும் பல காணிகளில், வீட்டு முன்றல்களில் தெய்வங்களுக்கு சிறு கோவில் அமைத்து விளக்கேற்றி வழிபடும் அச்செயற்பாட்டின் நீட்சியைக் காணலாம். அத்தெய்வங்கள் கற்கள், சூலம், மரத்துண்டு என்பவற்றின் வடிவில் வழிபடப்பட்டன. காணிகளில் தெய்வங்களுக்கு இடம் வழங்கப்பட்டு அவ்விடம் தூய்மைக்குரியதாய் பேணப்பட்டது. வீடுகளினுள் தெய்வங்களுக்கு இடம் வழங்கப்படவில்லை. காலனித்துவ காலக் கல்வி, பொருளாதார வளர்ச்சியின் வழி உருவான மத்திய தர வர்க்கத்தின் எழுச்சி கல்வீடு, பலஅறைகள், காணிகள் துண்டாடப்பட்டதால் கடவுளுக்குத் தனியிடம் கொடுக்க முடியாமல் போனமை போன்ற பல காரணிகளோடு சுவாமிப் படங்களின் பெருக்கமும் இணைய, ‘சுவாமி’ தாயறைக்குள் குடி புகுந்தார். வைதீக சமய எழுச்சி இதன் பின்னணியில் நிற்கின்றது.

தாயறை என்பது குடும்பத்தில் தாய் இடத்தை தெளிவுபடுத்துகிறது. யாவுமாகி நிற்கும் தாயின் பண்பியலைக் கொண்டதாகத் தாயறை விளங்குகிறது. அது களஞ்சியமாக, பாதுகாப்பான இடமாக, (பெண்கள், சிறுவர்) தூங்கும் அறையாக, குடும்ப வாழ்வின் இரகசியங்களைக் காலங்காலமாக பேணும் தாய் மடியாக, குடும்ப அலகின் அந்தஸ்தின் அடையாளமாக அது அமைந்திருந்தது. எங்கள்




நன்றி - சி.குணசிங்கம், பதிவுகள்

கலாசாரத்தின் பெட்டகமாக கலைப்பொருட்களைத் தாங்கி நின்ற இடமாக அது அமைந்திருந்தது. தானியமும், பித்தளையும், செப்பும், தங்கமும், வெள்ளியும், மரஉபகரணங்களும், மான்கொம்பும், மான்-புலித் தோல்களும் அங்கே பழுதின்றிப் பாதுகாக்கப்பட்டன. அந்த அறைச்சுவர்கள் கட்டப்படும் போது அனைத்து உலோகங்களும் அவற்றுள் இடப்பட்டன. குடும்ப பொருளாதாரத்தின் தன்மைக் கேற்ப தங்கம், வெள்ளி இடப்பட்டன. பிற்கால சந்ததியினர் வீடு பிரித்து மீளக்கட்டும்போது அத்தங்கம், வெள்ளி வீடுகட்டவோ ஏனைய தேவைக்கோ உதவும் எனக் கருதப்பட்டது. அதன் நீட்சியே வீட்டுக்கு அல்லது கட்டடத்துக்கு அடிக்க(ா)ல் வைக்கும் போது செய்யப்படும் சடங்குகளில் உலோகம் இடுதல், ஐந்து சந்தி மண்ணிடுதல், புனித நீர் தெளித்தல் முதலான சடங்குகள் எனலாம்.

இன்று தாயறையெனும் பெரியறை, சாமியறையாயிற்று. அங்கு அழகியலும் வீட்டாரின் செல்வமிடுக்கைக் காட்டும் அலங்காரங்களுமே காணப்படுகின்றன. அது தன்களஞ்சிய நிலையை இழந்து வருகின்றது. எமது பண்பாட்டு அடையாளங்கள் அங்கு காணாமல் போயுள்ளன. அங்கு அலங்காரமும் மிடுக்கும் மிக்க, வெறும் சாஸ்திரத்தின் அடையாளமாய் வெறுமையுற்று இருக்கின்றது எங்கள் நாட்டு அரசாங்கத் திறைசேரி போல. ■

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

**“புலிகள் இன்று இல்லை என்றாலும் இவர்கள் அவர்களை உயிர்ப்பித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை உள்ளது. சிலர் புலிகளின் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டு அதைப் பயன்படுத்தித் தங்களுடைய நலன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் புலிகளை எதிர்த்துக் கொண்டு தம்முடைய நலன்களைக் கவனித்துக் கொள்கிறார்கள்.”**



# புலிக் ‘கிலி’க்கு வயது நாற்பது

மாவீரர் நாளையொட்டி, படைகள் உசார்ப்படுத்தப்பட்டுள்ளன. சந்திகள், தெருக்களில் முக்கிய இடங்கள், மாவீரர் துயிலும் இல்லங்களாக இருந்த பிரதேசங்கள் என எங்குமே படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இனிப் பல்கலைக்கழகச் சூழலிலும் படைகள் குவிக்கப்படும். இது எதிர்பார்க்கப்பட்ட வழமைதான். புதுமை ஒன்றுமில்லை.

முட்டாள்த்தனத்தில் பழசென்ன, புதுசென்ன? எப்போதும் அது முட்டாள்த்தனம்தானே!

இப்பொழுது புலிகள் இல்லை. என்றாலும் “புலிப் பூச்சாண்டி” போகவில்லை. அது புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அந்தப் பூச்சாண்டிக்காகப் படையினர் கொட்டுகிற மழைக்குள்ளும் தெருவில் நிற்க வேண்டியிருக்கிறது.

“புலியில்லை எண்டாலும் நம்மட ஆக்கள்ட (அரசாங்கத்தின்) இந்தக் கிலி எப்ப போகும்?” என்று கேட்டாராம், மழையில் நனைந்து கொண்டே காவல் நிற்கிற சிப்பாய்.

“உனக்குச் சம்பளம் கிடைக்கிறதல்லவா! அதை வாங்கினால் இப்படி எதையாவது பண்ணித்தான் ஆகணும். பேசாமல் வாயைப் பொத்திக் கொண்டிரு” என்றார் அடுத்த படையாள்.

“சம்பளம் கிடைக்கிறது என்பதற்காக, இல்லவே இல்லாத புலிக்காக எதுக்காக இப்படி மழையில் காவல் நிற்கணும்?” என்று பதிலுக்குக் கேட்டார் முதற் சிப்பாய்.

“அடேய், புலியாலதானே இந்த உத்தியோகமே நமக்குக் கிடைத்தது. நமக்குக் கிடைக்கிற சம்பளம் எல்லாமே “புலிக்கிலி”யாலதானே வந்தது. பேசாம வாயைப் பொத்திக் கொண்டிரு” என்று சத்தமிட்டிருக்கிறார் மற்றப் படையாள்.

படையினருக்கு மட்டுமல்ல, பலருக்கும் புலியும் புலிக் கிலியும் தேவைப்படுகிறது. ஆட்சித்தரப்பினருக்கு, ஊடகங்களுக்கு, தமிழ் - சிங்கள அரசியற் தரப்பினருக்கு, புலம்பெயர் நாடுகளில் உள்ள சிலருக்கு எனப் பலருக்கும் புலி தேவை.

புலிகள் இன்று இல்லை என்றாலும் இவர்கள் அவர்களை உயிர்ப்பித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை உள்ளது. சிலர் புலிகளின் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டு அதைப் பயன்படுத்தித் தங்களுடைய நலன்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் புலிகளை எதிர்த்துக் கொண்டு தம்முடைய நலன்களைக் கவனித்துக் கொள்கிறார்கள்.

ஆக மொத்தத்தில் இரண்டு தரப்பும் இன்று புலிகளின் அடையாளத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. இரண்டுமே மக்களுக்கு விரோதமானவை. பயனற்றவை.

வரலாற்றின் நகைப்பு என்னவென்றால் இரண்டு தரப்புக்கும் “புலிகள்” என்ற அடையாளம் பயன்படுகிறது என்பதுதான். இந்த மோசமான வரலாற்றுச் சுழலுக்குள்தான் நாம் மோசமாகச் சிக்குண்டு இருக்கிறோம்.

இந்தப் “புலிக்கிலி”க்கு வயது ஏறக்குறைய நாற்பதுக்கு மேல். 1970 களில் தொடங்கிய “புலிக் கிலி” இன்னும் தீரவில்லை.

யுத்தத்தில் வெற்றி கொண்ட பிறகும், யுத்தம் முடிந்த பிறகும் “புலிக்கிலி” போகவில்லை என்றால் -

“இது எப்போது முற்றாகத்தீரும் - முற்றாக நீங்கும்?” என்று ஒரு சாதாரண படைச்சிப் பாயின் மனதில் கேள்வி எழுவது நியாயமே. இந்தக் கேள்வி பலரிடத்திலும் உள்ளது. குறிப்பாகச் சிங்கள மக்களிடம்.

ஆனால், அவர்களுடைய மனதில் உருவாக்கப்பட்ட புலிகளைப் பற்றிய சித்திரம் எப்படியென்றால், மிஞ்சியுள்ள ஏனைய தமிழர்களும் புலிகளே. இவர்கள் இப்பொழுது ஆயுதமில்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, மற்றும்படி பொல்லாத ஆட்கள். பொல்லாத புலிகள். நம்ப முடியாதவர்கள். எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள்.

இதனால்தான் இன்னும் சிங்கள மக்கள் தமிழர்களைப் பார்த்து முறைக்கிறார்கள். அல்லது முகத்தைத் திருப்பிக் கொண்டு விலகிச் செல்கிறார்கள்.

இதனால்தான் இந்தப் பொல்லாத ஆட்களுக்கு (பொல்லாத புலிகளுக்கு - புலிகளின் ஆட்களுக்கு) நாம் அரசியல் அமைப்பின் மூலமாக நலமடிக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்துக்கு முதலுரிமை என்ற கடிவாளமெல்லாம்” என்று ஆட்சியாளர்கள் சொல்லி வைக்கிறார்கள். இதைச் சிங்கள மக்களும் அப்படியே நம்புகிறார்கள்.

அவர்கள் என்ன செய்வது? நம்பித்தானே ஆகவேணும். அச்சத்துக்குச் சிறைப்பட்டால் வழியெல்லாம் இருட்டாகி விடும். திசையெல்லாம் இருள் நிறையும். மனசுக்குள்ளே பகை வந்து குடியேறி விட்டால் அது ஆயிரம் சந்தேகங்களை விதைத்துக் கொண்டேயிருக்கும். கூடவே அதை விடப் பன்மடங்கு முட்டாள்த்தனங்களையும். இதே வியாதிதான் நம்முடைய தமிழ்ப்பரப்பிலும் உண்டு.

சிங்களவர்களைப் பார்த்து சந்தேகிப்பது, முறைப்பது, விலகிச் செல்ல முயல்வது என இது தொடர்கிறது. தீராப் பகையுணர்ச்சியின் வெளிப்பாடே இது. இதற்கான வரலாற்றுக் காரணங்கள் (அரசியல் மற்றும் நடைமுறைகள்) உண்டு என்பது உண்மை. ஆனால், இப்படியே எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த வரலாற்றுக் காரணங்களைச் சொல்லிக் கொண்டு நாம் விலகிச் செல்ல முடியும்? எதுவரை விலகிக் கொள்வது? விலகினாலும் இந்தப் பேயின் துரத்தல் நீங்கி விடுமா? இல்லையே!

அப்படியென்றால் என்ன செய்வது? இந்தக் கேள்விதான் மிகப் பெரியதாக, மிக நீண்டதாக நம்முன்னே உள்ளது.

இப்பொழுது படையினர் நம்முடைய தெருக்களிலும் ஊர்களிலும் நிறைந்திருக்கிறார்கள் என்றால்-

ஒவ்வொரு மாவீரர் நாளிலும் படையினர் உஷார்ப்படுத்தப்படுகிறார்கள் என்றால்-

எந்தவொரு நினைவு கொள்ளல்களுக்கும் அரசு இடமளிக்கவில்லை என்றால்-

ஒளிந்து மறைந்துதான் அதையெல்லாம் செய்ய வேண்டுமென்றால்-

இறந்தோரின் நினைவுக்கு ஒரு தீபத்தை ஏற்றுவதற்கே வழியற்றிருக்கிறோம் என்றால்-

இதை எதிர்க்கவும் முடியாமல் ஏந்தவும் முடியாமல் திட்டித்தீர்த்துக் கொண்டுதான் இருக்கப்போகிறோம் என்றால்-

இறந்தவர்களுக்கு நாங்கள் செலுத்தும் மரியாதை என்ன?

எங்களுடைய அறிவுக்கு நாங்கள் அளிக்கின்ற மதிப்பென்ன?

எங்களுடைய திறனுக்கு நாங்கள் கொடுக்கின்ற மரியாதை என்ன?

எங்களுடைய அரசியலுக்கு என்ன பெயர்?

அதற்கு என்ன மதிப்பு?

அதற்கு என்ன அவசியம்?

எதையும் செய்ய முடியாத பலவீனமாக இருப்பதென்றால் அதன் முடிவு என்ன?

இதை எப்படி வெற்றிகரமாக எதிர்கொள்வது?

துருவங்களாக நிற்பதன் விளைவு இப்படித்தான், இதை விடவும் மோசமாகவே இருக்கும்.

ஏனென்றால், இழப்பை நினைவு கொள்ளவும் இறந்தோரை நினைவு கூரவும் தவிக்கின்ற ஒரு மக்கள் திரளின் துயர நிலையை இன்னொரு சமூகம் புரிந்து கொள்ளாமல் இருக்கிறது என்பது எவ்வளவு பெரிய தோல்வி - அவலம்? ■



வேதநாயகம் தபேந்திரன்

# அந்தரத்தில் தொங்கும்...

கூரை இல்லாமல், கட்டிடங்கள் இல்லாமல், தளபாடம், இலத்திரனியல் உபகரணங்கள் இல்லாமல் ஒரு கல்வி நிறுவனத்தை நடத்த முடியுமா ? முடியாது என ஒரு காலத்தில் சொன்னார்கள்.

முடியுமென இன்றைய காலம் சொல்கிறது.

உலகில் அழிவுகள் வந்த காலத்தில் தான் ஆக்கங்களும் பிறக்கின்றன. பூமித் தாயை 101 வருடங்களுக்கு ஒரு முறை பெருந்தொற்று நோய் வருத்துகின்றது. அண்மைய கோவிட் - 19 கொரோனாப் பெருந்தொற்று நோயும் அதில் ஒன்று.

வீட்டுக்குள் முடங்க வேண்டிய தேவை வந்த போது மனிதன் வெளி உலகத்துடன் குழுவாகத் தொடர்பு கொள்ள வேண்டிய தேவையை சூம் செயலி ஓரளவு நிறைவு செய்தது.

வகுப்பறைக் கல்வி நவீன வடிவம் எடுத்தது. கல்விக்கான எல்லைகள் திறந்தன.மெய்நிகர் செயலியான சூம் மூலமாகக் கல்வியின் புதிய பரப்புகள் திறந்தன. நகரப் பிரதேசத்தவர்கள் மட்டும் தான் சிறந்த கல்வியைப் பெறலாமென்ற நிலை மாற்றம் பெற்றது.

ஒரு காலத்தில் தொலைதூரக் கல்வி என்றார்கள். தபால் மூலக் கல்வி என்றார்கள். ஒருவர் முகத்தைப் பலர் பார்த்து ஏன் பல்லாயிரம் பேர் கற்கும் முறையைச் சூம் செயலி தந்துள்ளது.

எமது நாட்டிலும் இந்தக் கல்வி முறைமை பெரு வளர்ச்சி பெற்று வருகிறது. எல்லைகள் கடந்த கல்வி முறையாக இம் முறைமை உள்ளது. வகுப்பறைக் கல்வி முறைமையில் உள்ள சீருடை, ஒழுங்கு முறை, கண் தொடர்பாடல் ஆகியவை இக் கல்வி முறையில் இல்லையென்ற குறைபாடு கூறப்படுகின்றது.

ஆனாலும் வளர்ந்தோர் கல்வியில் நேரடி செய்முறைப் பயிற்சி இன்றிய கல்வி முறைக்கு இது பொருத்தமானதாக இருக்கின்றது.

அலுவலக நிர்வாக முறையிலும் வீட்டிலிருந்து பணியாற்றுதல் எனும் முறைமை பொதுமுடக் கல், ஊரடங்கு நாள்களில் பரீட்சார்த்தமாகப் பார்க்கப்பட்டது.

இந்த முறையிலும் வீட்டிலிருந்தபடி மெய் நிகர் கூட்டங்கள் மகாநாடுகளில் பங்குபற்றினார்கள். கருத்துகள் பரிமாறப்பட்டன. பொருளாதாரத்தின் இயங்கு விசையில் இது புதியதொரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. எதிர்காலத்தில் அலுவலகச் செயற்பாடுகளிலும் இயங்கு முறைகளிலும் பெரியதொரு மாற்றத்தைக் கொண்டு வரப் போகிறது. மனிதர்கள் அறிவுசார் பொருளாதாரச் சக்திகளாக இனம் காணப்பட்டு அவர்களுக்குரிய மதிப்புக் கூடுகின்றது.

இணையவழியாகத் தகவல் பரிமாறலை இலகுவாக விரைவாக மேற்கொள்ளும் கல்வி முறைமை கல்வியின் தேவைகளை நிறைவேற்ற முடியாத பிரதேசத்தவர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

மாற்றம் என்ற ஒரு சொல் தான் என்றும் மாற்றம் காணாதது என்று உலக வரலாறு அடிக்கடி உறுதியாகச் சொல்லிக் கொண்டே வருகிறது. முன்னைய காலத்தில் ஒரு தொழில்நுட்ப மாற்றத்தைக் காண 10 முதல் 20 வருடங்கள் சென்றது. ஆனால் தற்காலத்திலோ தொழில்நுட்ப மாற்றங்கள் நாளுக்கு நாள் கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கிறது.

இதனால் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் பெரும் முதலீட்டை யாருமே நம்பிச் செய்ய முடியாது. அதிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் நம்பிச் செய்யவே முடியாது.

கணனிசார், டிஜிற்றல் கல்வி சார் தொடர்பாடல் சார் உபகரணம் பாவிக்காமலேயே பழைமையடைந்து விடும்.

இலங்கையர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், உறுதி செய்வதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இயங்குகின்றது. 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்துக்கு சென்ற 2020 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தைச் செய்ய எமது நாட்டின் அமைச்சரவை அங்கீகாரம் தந்தது. அதன்படி மெய்நிகர் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் நிறுவப்பட உள்ளது. அது போல தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் உருவாக்கப்பட உள்ளது.

> **“மாற்றம் என்ற ஒரு சொல் தான் என்றும் மாற்றம் காணாதது என்று உலக வரலாறு அடிக்கடி உறுதியாகச் சொல்லிக் கொண்டே வருகிறது. முன்னைய காலத்தில் ஒரு தொழில்நுட்ப மாற்றத்தைக் காண 10 முதல் 20 வருடங்கள் சென்றது. ஆனால் தற்காலத்திலோ தொழில்நுட்ப மாற்றங்கள் நாளுக்கு நாள் கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டே இருக்கிறது.”**

சாத்தியமான கற்கை நெறிகளை மெய்நிகர் செயலி ( சூம் ) ஊடாக மாணவர்கள் தொடரும் முறை உருவாக்கப்பட உள்ளது. தேசத்தின் எல்லைகள் கடந்த உயர் கல்வி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளது.



கட்டிடங்களுக்கும் தளபாடங்களுக்கும் ஆளணிகளுக்கும் பராமரிப்புக்கும் செலவாகும் பெருந்தொகைப் பணம் மீதமடையுமெனக் கூறலாம். அதே வேளை இயந்திரமயமான உலகில் மனிதர்கள் பலர் தொழில் இழந்து போகின்றனர். அந்தத் தொழில் இழப்புகளை மேலும் அதிகரிக்கச் செய்வதை இந்தத் தொடர்பாடல் முறை ஏற்படுத்தப் போகிறது.

நவீன தொழில்நுட்பங்கள் யாவும் மனிதர்களின் வேலை வாய்ப்புகளை விழுங்கி முதலாளிகளின் பணப்பைகளை நிரப்புகின்றன என்ற குற்றச்சாட்டு உள்ளது. இது உண்மையும் கூட.

மாணவர்கள் வகுப்பறைக் கல்வியில் பெறக் கூடிய உள உற்சாகம் தரக் கூடிய தொடர்பாடல், கீழ்படிவு, நேர ஒழுங்கு போன்ற பண்புகள் பல மெய்நிகர் செயலி மூலமாக நடத்தப்படும் வகுப்புகளில் கிடைப்பதில்லையென்ற குறைபாடு கூறப்படுகின்றது. அதுவும் உண்மை தான்.

அதே வேளை போக்குவரத்துச் செய்து கல்வியைப் பெற முடியாத கஷ்டப்பிரதேச வறிய மாணவர்கள் சூம் செயலி வழியாகக் கல்வியைப் பெறும் நிலைமை உருவாகின்றது.

சென்ற 2020 ஆம் ஆண்டு உயர்தரப் பெறுபேறுகளை நோக்கினால் கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றமையை அவதானிக்க முடிகிறது. கோவிட் - 19 பெருந்தொற்று நோய்க் காலத்தில் ஏற்பட்ட நடமாட்டத் தடை காரணமாக சூம் செயலி மூலமான கற்பித்தல் பரவல் அடைந்தது.

இலங்கை மத்திய வங்கியின் கணிப்பின்படி 2020 ஆம் ஆண்டில் 502000 சூம் தொடர்பாடல்கள் நடைபெற்றுள்ளது. 23.2 மில்லியன் ஆள்கள் இதில் பங்குபற்றி உள்ளனர்.

இந்தத் தகவல் கணனித் தொழில்நுட்பத்தில் இலங்கையர்களின் அதிகரித்த பங்கேற்பைக் காட்டுகின்றது. இலங்கையில் அறிவுசார் பொருளாதாரக் கல்வி முறைமை மேம்படுத்தப்படவில்லை. தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள் உருவாக்கப்படவில்லை என்ற கருத்துக் காலாதி காலமாகக் கூறப்பட்டு வருகிறது.

2019 ஆம் ஆண்டு முதல் இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடு என்ற இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது.

கணனித் துறை சார்ந்த தற்போதைய விழிப்பு நிலை அந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டும். இலங்கையர்களின் எழுத வாசிக்கத் தெரிந்தோர் உள்ள கல்வி அறிவு வீதம் 92.9 ஆக உயர்வாக உள்ளது. ஆனால் அறிவுசார் பொருளாதாரமாக இலங்கையர்களின் மாற்றம் உயர்வானதாக இல்லை. இலங்கையரில் ஒவ்வொரு 100 பேருக்கும் 32 பேர் கணனி அறிவு உடையோராகவும், 40 பேர் டிஜிற்றல் கல்வி அறிவு உடையோராகவும் அரசாங்கத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு 100 இலங்கையருக்கும் 143 பேர் கைத்தொலைபேசி பாவிப்பதாகவும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

சூம் கல்வி முறைக்கு திறன்பேசி கைத்தொலைபேசிகள் கட்டாயத் தேவையாக உள்ளது. எல்லாப் பெற்றோருக்கும் இதனை வாங்கிக் கொடுக்க முடியாத கஷ்டநிலை உள்ளது.

அதே வேளை மாணவர்கள் இவற்றைத் தேவையற்ற பாவனைக்கு ஈடுபடுத்திக் கல்வியில் இருந்த நாட்டமும் குறைவதற்கான வாய்ப்புகளும் ஏன் கெட்டுப் போவதற்கான நிலையும் உள்ளது.

21 ஆம் நூற்றாண்டு ஸ்மார்ட் நூற்றாண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த நவீன யுகத்துக்குள் இலங்கையர்கள் உள்வாங்கப்படுவதுடன் அதன் தீமைகளைத் தவிர்த்து முன்னேற வேண்டியதற்கான வழிகாட்டல்களும் அவசியமானவை. ■

# ஊடகப் பேராசான்

# ம.வ.கானமயில்நாதன்



இயல்வாணன்

ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக பேனா எனும் கூரிய ஆயுதங் கொண்டு கருத்துருவாக்கிய பெரும் போராளியான ம.வ.கானமயில்நாதன் காலமாகி விட்டார். தமிழ் மக்களின் ஐம்பது ஆண்டு கால வரலாற்றின் சாட்சியாக, அந்த வரலாற்றைத் தன் பேனாவால் நாளாந்தம் பதிவு செய்தவகையில் ஒரு காலப் பெட்டகமாக, வரலாற்றுச் சான்றுத் தூணாக அவர் நிற்கிறார்.

யாழ்ப்பாண மாவட்டம், வட்டுக்கோட்டை மேற்கில் 1942 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி வல்லிபுரம் வள்ளியம்மை தம்பதிகளின் மகனாகப் பிறந்த கானமயில்நாதன் தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியற் படிப்பை நிறைவு செய்து, பத்திரிகை உலகுக்குள் நுழைந்தார். தன்னுடைய பேரனான மருதப்பு என்ற பெயரின் முதலெழுத்தையும், தந்தையாரது பெயரின் முதலெழுத்தையும் முன்வைத்து ம.வ.கானமயில்நாதன் என்ற பெயரில் தன்னை அடையாளப்படுத்தி எழுத்துலகுக்குள் நுழைந்துள்ளார். 1960களின் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையில் பயிற்சி உதவியாசிரியராகப் பணியினை ஆரம்பித்தார். ஈழநாடு பத்திரிகையில் கே.பி.ஹரன், எஸ்.எம்.கோபாலரத்தினம், சு.சபாரத்தினம் முதலானோரால் பட்டை தீட்டப்பட்ட அவர், பின்னர் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட தினபதி நாளிதழ் மற்றும் சிந்தாமணி வாரஇதழ் ஆகிய பத்திரிகைகளின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். அவரது அனுபவம் மற்றும் திறமை காரணமாக தினபதி ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகத்தால் செய்தி ஆசிரியராகப் பணியுயர்த்தப்பட்டார்.

1983 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட கானமயில்நாதன் கொழும்பு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அவரது திறமையை இனங்கண்ட வீரகேசரி பத்திரிகை நிர்வாகம் யாழ்ப்பாண அலுவலகத்தின் ஆசிரிய பீடப் பொறுப்பாளராக அவரை நியமித்தது. அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து புதிதாக ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க எண்ணியவர்கள் அந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக வருமாறு அவரை அழைத்தனர். அதனை ஏற்றுக் கொண்ட அவர் 1985 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி முதல் உதயன் சஞ்சீவி பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக இருந்து அதனை ஆரம்பித்ததுடன், அவரது அந்திமக் காலம் வரை அதன் பிரதம ஆசிரியராக இருந்து, 36 வருடங்கள் அதனை வழிநடத்தி வந்துள்ளார். இடையில் சிறிது காலம் உதயனில் இருந்து ஒதுங்கியிருந்தார். அவ்வேளை ஆரம்பிக்கப்பட்ட காலைக்கதிர் பத்திரிகையின் ஸ்தாபக மற்றும் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார். மீண்டும் உதயனுக்குத் திரும்பி சிறிது காலம் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றி, மூப்புத் தளர்வு காரணமாக ஒதுங்கிக் கொண்டார்.

> **காலையில் திருநீற்றுக் குறியுடன் அலுவலகத்துக்கு வரும் அவர் தனது நேரத்தைப் பயனற்ற சம்பாசனைகளில் பயன்படுத்த மாட்டார். படிப்பது, சிந்திப்பது, எழுதுவது என்ற அடிப்படையிலேயே அவரது பணி இருக்கும். தனக்குக் கீழே பணியாற்றுபவர்களை சிக்மன் பிராய்ட் கூறுவது போல தந்தை முறை தலைமைத்துவ அணுகுமுறையில் வழிநடத்துவதை நான் அவதானித்திருக்கிறேன். தனது ஆளுமையாலும், நடத்தையாலும் தனக்குக் கீழ் பணியாற்றும் ஊழியர்களைக் குழந்தைகள் போலப் பின்பற்றச் செய்யும் தந்தையாக அவர் இருந்து வழிநடத்துவார்.**

தனது வேலையின் பெறுமதியை நன்குணர்ந்து, கடமைக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்ட அவர் கடமைக்காகத் தனது வாழ்க்கையையே அர்ப்பணித்தவராவார். காலையில் திருநீற்றுக் குறியுடன் அலுவலகத்துக்கு வரும் அவர் தனது நேரத்தைப் பயனற்ற சம்பாசனைகளில் பயன்படுத்த மாட்டார். படிப்பது, சிந்திப்பது, எழுதுவது என்ற அடிப்படையிலேயே அவரது பணி இருக்கும். தனக்குக் கீழே பணியாற்றுபவர்களை சிக்மன் பிராய்ட் கூறுவது போல தந்தை முறை தலைமைத்துவ அணுகுமுறையில் வழி நடத்துவதை நான் அவதானித்திருக்கிறேன். தனது ஆளுமையாலும், நடத்தையாலும் தனக்குக் கீழ் பணியாற்றும் ஊழியர்களைக் குழந்தைகள் போலப் பின்பற்றச் செய்யும் தந்தையாக அவர் இருந்து வழி நடத்துவார்.

அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய நிறைய அம்சங்களை அவருடன் பழகுவோர் கற்றுக் கொள்வார்கள். அதுபோல பல விடயங்களில் அவர் பலருக்கு முன்னுதாரணமாகவும் இருந்துள்ளார். ஒரு பத்திரிகையாளன் எப்படி இருக்க வேண்டும்? ஊடக அறம் பேணி எப்படித் தொழிற்பட வேண்டும் என்பதைப் பலரும் அவரிடம் இருந்து கற்றுக் கொண்டனர். அவற்றுக்கு உதாரணமாக அவரையே கருதிக் கொண்டனர். காய்தல் உவத்தலற்ற மனப்பாங்கு, பக்கசார்பற்ற, சமநிலைத் தன்மையான அணுகுமுறை என்பன ஊழியர்கள் தொடர்பில் அவரது பொது நிலைப்பாடாகும். எதையும் விமர்சன பூர்வமாகப் பகுத்தாய்ந்து, “எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” என்ற வள்ளுவர் வாக்குக்கமையச் செயற்படுவது பத்திரிகை ஆசிரியருக்கு வேண்டப்படும் தகைமையாகும்.

அது கானமயில்நாதன் அவர்களிடம் நிறைந்திருந்தது. ஆற அமர இருந்து, இரு பக்க நியாயங்களையும் அறிந்து எழுதுவதில் கரிசனை கொண்டிருப்பார்.

மிதவாத தமிழ் அரசியல் காலத்தில் பத்திரிகைத் துறைப் பயணத்தை ஆரம்பித்த அவர் ஈழ விடுதலை இயக்கங்களின் ஆதிக்க காலத்திலும், இந்திய, இலங்கை இராணுவங்கள் பிரதேசத்தின் ஆதிக்கத்தில் இருந்த காலத்திலும், விடுதலைப்புலிகளின் ஆட்சியிலிருந்த காலத்திலும், முள்ளிவாய்க்காலின் பின்னான காலத்திலும் என ஈழத்தமிழரது முக்கிய வரலாற்றுக் காலகட்டங்களில் எல்லாம் அந்த வரலாற்றை செய்திப்படுத்தி, பின்னைய வரலாற்றுக்கு வழிவகுத்து ஆவணப்படுத்தலைச் செய்துள்ளதுடன் அவற்றின் சாட்சியாகவும் உள்ளார். அந்த நிறைந்த பட்டறிவு அவரது ஆசிரிய தலையங்கங்களில் வெளிப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரித்துடைய தேசிய இனம் என்பதும், அவர்கள் தமது பிரதேசத்தில் கௌரவத்துடன் வாழ வேண்டியவர்கள் என்பதும் அவரது நிலைப்பாடாகும். அதற்கான தேவையை வலியுறுத்தியும், அதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களை நியாயப்படுத்தியும் அவர் ஆசிரிய தலையங்கங்களைத் தீட்டியுள்ளார். தமிழ் மக்கள் காலங்காலமாக அரசியல், சமூக, பண்பாட்டு ரீதியில் ஒடுக்கப்பட்டு வந்துள்ளமையையும் அவர் தனது ஆசிரிய தலையங்கங்கள் ஊடாகச் சுட்டிக் காட்டி வந்துள்ளார்.

ஈழநாடு, தினபதி, உதயன் பண்ணைகளில் அவரால் பட்டை தீட்டப்பட்ட நூறு வரையான ஊடகர்கள் உலகின் பல பகுதிகளிலும் வாழ்கின்றனர். தனது நடத்தை, செயற்பாடு, வழிநடத்தும் விதம் ஆகியவற்றினூடாக அவர் ஊடகவியலாளர்களை உருவாக்கினார். ஊடக ஒழுக்கம் என்பதற்கு முதன்மையளித்துச் செயற்பட்டவர். தனக்குக் கீழ் பணிபுரியும் ஊடகர்களைப் புகழ்ந்து பேசி, அவர்களைக் கற்பனை உலகில் சஞ்சரிக்க விட மாட்டார். ஆனால் வேறு நபர்களிடம் குறித்த ஊடகர்கள் தொடர்பில் சிலாகித்துக் கூறுவார். அத்துடன் ஊடகர்களைத் தரந் தாழ்த்திக் கூறி, அவர்களின் ஆர்வத்தை மழுங்கடிக்கவும் மாட்டார். தொடர்ச்சியாக இயங்கச் செய்து, தவறு திருத்தி, தட்டிக் கொடுத்து அவர்களை ஆற்றல் மிக்கவர்களாகப் புடமிட்டு வளர்ப்பதில் அவரது ஆளுமை மேன்மையானது. ஊடக இரகசியம் பேணுவதும் இவரது சிறப்பம்சம். எந்தச் செய்தி தொடர்பிலும், கட்டுரை தொடர்பிலும் ஆசிரியர் என்ற முறையில் தானே பொறுப்பேற்றுப் பதிலளிப்பார். செய்தியாளர்களையோ, செய்தி மூலங்களையோ ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டார். அத்தகைய கண்ணியமே பல செய்தியாளர்களை எழுத வைத்தது.

ஒரு நடமாடும் ஊடகப் பேராசிரியராக அவர் விளங்கினார் என்று கூறினால் அது மிகையல்ல. தன்னை வெளிப்படுத்தவும், முதன்மைப்படுத்தவும், விருதுகளுக்குப் பின்னால் அலையவும் அவர் முயன்றதில்லை. குண்டுத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட பல அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும், தளராத துணிவோடு பத்திரிகையை அவர் வழிநடத்தினார். அதனால்தான் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பினால் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வைத்து துணிச்சலான பத்திரிகைக்குரிய விருதை 2013 இல் உதயன் பெற்றுக் கொண்டது. யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் இராணுவ வாகனம் மோதி விபத்துக்குள்ளாகி, மூன்றாண்டு காலம் சுவிற்சர்லாந்தில் வதிந்த போதிலும், பத்திரிகைத்துறை மீதான ஆர்வம் காரணமாக மீண்டும் யாழ்ப்பாணம் வந்து உதயன் அலுவலகத்தில் வீட்டுச்சிறை போல வெளியே செல்லாமல் தங்கியிருந்து பணியாற்றினார்.

வட்டூர் கானம் என்ற புனைபெயரில் கவிதைகள், கட்டுரைகளையும் எழுதிய கானமயில்நாதன் வித்தாரம் என்ற பெயரில் பத்தியினையும் உதயனில் எழுதியுள்ளார். ஆழ்ந்தகன்ற அறிவு மிக்க அந்தப் பேராளுமை 22-11-2021 அன்று தனது 79 ஆவது வயதில் மூப்புக் காரணமாக இவ்வுலகை நீத்தார். செய்திகளாலும், ஆசிரிய தலையங்கங்களாலும் ஊடக உலகைக் கட்டமைத்திருந்த ஒரு ஊடக சாம்ராஜ்ஜியம் சரிந்து போன துயரம், அவரது நினைவுகளில் வாழும் ஊடகர்களில் மீளக் கட்டியெழும் என நம்பலாம். ஆம், அவர் வரலாற்றில் வாழ்வார். ■

# கார்த்திகைத் தீப நாளில் உதித்த யோக தீபம்

## பாபாஜியின் வரலாற்றுச் சிறப்பு

எமது சற்குரு பாபாஜி நாகராஜ் பல தருணங்களில் மெய்யடியார்கள் பலர் முன் நேரே தோன்றி காட்சி கொடுத்துள்ளார். மகா அவதார் பாபாஜி அவர்கள் சிதம்பரத்திலிருந்து 17 கி.மீ தொலைவில் பரங்கிப்பேட்டை என அழைக்கப்படும் சிறிய கிராமத்தில் கி.பி 203 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி ரோகினி நட்சத்திரத்தில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நாகராஜ். பின்னாளில் மகா யோகி பாபாஜி என அழைக்கப்படலானார்.

இவரின் பெற்றோர் கேரளாவிலுள்ள மலபார் பிரதேசத்திலிருந்து பரங்கிப்பேட்டைக்கு வந்து குடியேறினர். இவரது தந்தையார் முருகன் ஆலயத்தில் பிரதம பூசகராகப் பணியாற்றி வந்தார். ஆசாரம் மிக்கப் பிராமண குலத்தில் பிறந்து தெய்வீக சூழலில் வாழ்ந்தமையாலும் நாகராஜ் இறை பக்தி மிக்க சிறுவனாக வளரலானார்.

குழந்தை நாகராஜ் 5 வயது சிறுவனாக இருந்த போது தந்தை பூசகராகக் கடமையாற்றிய கோயில் திருவிழா ஒன்றைக் காண்பதற்காகச் சென்றிருந்தார். கோயிலின் நுழைவாயிலில் நின்று பெரும் கூட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது தற்போதைய பாகிஸ்தானின் பலுச்சிஸ்தானைச் சேர்ந்த வியாபாரி ஒருவன் மெதுவாகக் கடத்திச் சென்றான். பாபாஜியின் அழகிய தோற்றமும் பணமாக்கும் ஆவலும் அவனைத் தூண்டியிருக்க வேண்டும். இந்தியாவின் கிழக்கு கடற்பாதை வழியாக, படகின் மூலம் கல்கத்தா வரை கடத்திச் சென்று அங்கே ஒரு செல்வந்தருக்கு அடிமையாக விற்றான். அவரால் சிறுவன் நாகராஜின் முகத்தில் குடிகொண்டிருந்த தெய்வீகக் கலையை அவதானிக்க முடிந்தது. சிறுவனை அடிமையாக்க அவர் மனம் ஒப்பவில்லை. எனவே சிறுவனை பூரண சுதந்திரம் அளித்து விடுவித்தார்.


புதிய சூழலில் துறவு வாழ்க்கை மேற்கொண்டு யாத்திரை மேற்கொள்ளும் சன்னியாசிகளின் கூட்டத்தில் இணையும் வாய்ப்பு நாகராஜுக்குக் கிடைத்தது. அவர்களுடன் சேர்ந்து கொண்டதால் வேதங்கள், உபநிடதங்கள், மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை போன்ற நூல்களைக் கற்றுக் கொண்டார். மிக இளமைப் பருவத்திலேயே வேதசாத்திரங்கள் அனைத்தையும் கற்றறிந்த பண்டிதராக விளங்கினார். அந்த இளவயதிலேயே இறைவனை அறியும் ஆவல் அவர் உள்ளத்தில் எழத் தொடங்கியது. அவரது ஆன்மீகத் தேடலுக்கு குருவாக எவரும் இருக்கவில்லை. இத்தனையும் கற்றும் திருப்தி அடைந்தார் இல்லை. நூல் அறிவு ஒரு எல்லையில் முடிவடைவதைக் கண்டார். புலன்களையும் தாண்டிய அந்த அறிவின் உணர்வு நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ளும் ஆவல் அவரைத் தூண்டியது. அவரது ஆன்மார்த்தமான தூண்டுதலினால் தனது 11 வது வயதில் தென் இலங்கையிலுள்ள முருகன் ஆலயமான கதிர்காமத்தை நோக்கிப் புறப்பட்ட அடியார் குழுவுடன் இணைந்து கொண்டார். கால்நடையாகவும், படகுகள் மூலமாகவும் நீண்ட கடினமான பயணத்தை மேற்கொண்டார். பலமாதங்களின் பின்னர் கதிர்காமத்தைச் சென்றடைந்தார்.

கதிர்காமக் கோயில் சித்தர் போகநாதரால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு மூலத்தானத்தில் உள்ள இயந்திரத்தை போகநாதரே உருவாக்கினார். கதிர்காமத்தில் நாகராஜ், போகநாதரைச் சந்தித்தார். போகநாதரைக் கண்ட மாத்திரத்தே பாபாஜிக்கு இவரே தமது குரு என்ற உணர்வு ஏற்பட அவரைக் குருவாக ஏற்றுக் கொண்டார். ஏறக்குறைய ஆறு மாதங்கள் ஒரு மர நிழலில் பல்வேறு யோகங்களையும் தியான முறைகளையும் பயின்றார். நாளடைவில் போகநாதரின் வழிகாட்டலில் தத்துவ சித்திகளை அறிந்தவராகி சித்தாந்தத்தின் முழுமகிமைகளையும் உணர்ந்து கொண்டார்.

சித்தாந்தத்தின் பூரண ஞானம் பெற்றிருந்த பாபாஜி, கிரியா யோகம், குண்டலினி பிராணாயாமம் மற்றும் பக்தி யோகத்திலும் தேர்ச்சி பெற விரும்பினார். இவரது விருப்பத்தை அறிந்த போகர் சித்தர் தென்னிந்தியாவில் பொதிகை மலைச்சாரலை நோக்கி பயணம் செய்து குற்றாலம் என்ற இடத்தில் இவற்றை சித்தர் அகத்தியரிடம் கற்கும்படி பணித்தார். குற்றாலத்திலுள்ள சக்திபீடத்தை அடைந்த பாபாஜி, அகத்திய முனிவரைக் கண்டு கற்கும் வரை எங்கும் செல்வதில்லை என்று தீர்மானித்து, அங்கு ஒரு ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார். உடல், மனம், இதயம், ஆத்மா ஆகிய நான்கும் ஒன்றுபட்ட நிலையில் அவர் தவமிருந்தார். அவ்வழியே செல்லும் அடியார்கள் ஆகாரம், நீர் வழங்கினால் சிறிதளவு பெற்றுக் கொள்வார். நாளாக அவரின் உடல்நிலை பலவீனமடைந்து வந்தது. ஆனால் பாபாஜி தன் உடல் தனக்குச் சொந்தமில்லை என்ற நினைவிலேயே இருந்தார். சரியாக 48 ஆம் நாள் அகத்திய முனிவர் அவர் முன் தோன்றினார். பாபாஜியை, 'நாகராஜ்' என மென்மையாக அழைத்து கட்டி அணைத்துக் கொண்டார். அவருக்கு ஆகாரமும் நீரும் கொடுத்தார். அவருக்கு கிரியா குண்டலினி யோக முறையைப் பின்பற்றுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்களையும் கட்டுப்பாடுகளையும் எடுத்துக் கூறினார். காலப்போக்கில் கிரியா குண்டலினி யோகாவின் அதி உயர் நிலையை எய்தியதை உணர்ந்த அகத்தியர் அவரை இமயமலைத் தொடரின் மேற்பகுதியில் அமைந்துள்ள பத்திரிநாத் என்ற இடத்துக்குச் சென்று கற்றவற்றை சாதனை செய்ய ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

(பத்திரிநாராயணன் கோயிலும் அழக்நந்தா ஆறும், பத்திரிநாத். )

பத்திரிநாத் ஏறக்குறைய 10,000 அடி உயரத்தில் இமாலய மலைத் தொடரில் அமைந்துள்ள ஒரு தெய்வீக ஸ்தலமாகும். ஐப்பசி மாதத்திலிருந்து வைகாசி வரை கடுங்குளிரும் பனிப்பொழிவும் இருக்கும். மிக மனவுறுதி மிக்க யோகியர்களால் மட்டுமே இங்கு ஆண்டு முழுவதும் இருக்க முடியும். பல்லாண்டு காலமாக ஞானியர்களாலும், ரிஷிகளாலும், யோகிகளாலும், சித்தர்களாலும் புனிதமாக்கப்பட்ட பிரதேசம் பத்திரிநாத். இத்தகைய அரிய தலத்தில் பாபாஜி 18 மாதங்கள் தான் கற்றவற்றைக் கொண்டு கடுமையான தவம் இயற்றினார். தவத்தின் பயனாகச் சொரூப சமாதி நிலைக்கு வந்தார். அவரது பௌதீக உடல் தங்கம் போல் ஒளிர ஆரம்பித்தது. மூப்பு, பிணி, சாக்காடு என்பவற்றை வென்றவராகி அதே இளமைக் கோலத்தில் இன்றும் வாழ்ந்து வருகிறார். தமிழ் யோக சித்தாந்த மரபில் உள்ள 18 சித்தர்களுடன் மிக உயரிய நிலையில் உள்ளார்.



'ஓம் கிரியா பாபாஜி நம 'ஓம்' என்பது கிரியா யோகிகளிற்கும் சகலருக்கும் பாபாஜியின் அருளை வழங்கும் மந்திரமாகும். இதில் 'ஓம்' என்பது பிரணவ மந்திரம். சகல படைப்புகளுக்கும் காரணமான பிரபஞ்ச அதிர்வு. 'கிரியா' என்பது விழிப்புணர்வுடன் கூடிய செயல். 'பாபாஜி'- கிரியா யோக மரபின் மூல குரு. 'நம' என்பது வணக்கம் என்றும், 'ஓம்' - நம்முள் உணரும் பிரணவ ஒலி. இம்மந்திரத்தின் மூலம் பாபாஜி தன்னை பக்தர்களுக்கு வெளிப்படுத்துகிறார். தொடர்ந்து உச்சரிப்பதன் மூலம் சகஸ்ர சக்கரத்தில் அமைந்துள்ள பேரறிவாற்றலோடு நாம் தொடர்பு கொள்ளலாம். ஆற்றல் வாய்ந்த இந்த மந்திரத்தின் மூலம் பாபாஜி தனது சக்தியை சீடர்களுக்கு அளிக்கிறார். குருவின் சொல்லே மந்திரத்தின் வேராகவும் குருவுருவாகவும் திகழ்கிறது. எனவே எமது வாழ்க்கையின் இலட்சியமான மகிழ்ச்சி, அமைதி, அன்பு மற்றும் ஞானம் பெற்று உய்ய கிரியா பாபாஜியை சரணடைந்து பேரின்பம் பெறுவோமாக.

பாபாஜியினால் நேரடி சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட நான்கு கிரியா யோக வழிமுறைகள்

1.ஆதிசங்கரர் 9 ஆம் நூற்றாண்டு இந்தியாவில் இந்து-பௌத்த மத பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய பாபாஜியினால் கொடுக்கப்பட்ட அத்வைத வேதாந்த கிரியா யோக தீட்சை.



2.கபீர்தாஸ் 15 ஆம் இஸ்லாம்- இந்து மத பிரச்சினையை நிவர்த்தி செய்ய 'கபீர்கத் கிரியா யோக தீட்சை'.

3.லாகிரி மகாசாயர் 19 ஆம் நூற்றாண்டில் இந்திய வரலாற்றில் கிரியாவின் உயர்ந்த உண்மைகளை உலக மக்களுக்கு (வட இந்தியா- அமெரிக்கா) சென் றடைய கொடுக்கப்பட்டது 'யோகதா கிரியா யோகம்'.

4.யோகி இராமையர் 20 ஆம் நூற்றாண்டில் உலக மக்களுக்குச் சென்றடைய 'சைவ சித்தாந்த சிவயோக கிரியா யோகம்' வழங்கப்பட்டது. (52 நாடுகளில் கிரியா பாபாஜி சங்கங்கள் அமைக்கப்பட்டு கிரியா யோகம் வளர்ந்து வருகிறது.)

கிரியா யோகத்தின் எளிய விளக்கம்

கிரியா யோகமானது சிவயோகத்திலிருந்து உருவானது. இந்த சிவயோகத்தை சிவன் அகத்தியருக்கும், அகத்தியர் பாபாஜிக்கும் தீட்சை மூலம் கொடுத்தார்கள். பாபாஜி இதனை எமக்காக மிக இலகுவான முறையில் கிரியா யோகமாக வகுத்து, நாம் லௌகீக வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு இந்த கிரியா சாதனையை ஒவ்வொரு நாளும் செய்து அதீதமான பிரபஞ்ச சக்தியை உடலினுள் பெற்று மிகவும் உன்னதமான நிலையாகிய ஆன்ம ஈடேற்றத்தை அடைய வழி வகுத்துள்ளார். குரு-சீட பரம்பரை வழியாக இந்த யோகக்கலை கொடுக்கப்படுகிறது. எமக்கு இந்த தெய்வீகக் கலை பாபாஜியின் நேரடி சீடர் யோகி இராமையாவினால் கொடுக்கப்பட்டது.

கிரியா யோகத்தின் சிறப்பு

எமது வாழ்வில் கிரியா யோகத்தை கிடைக்க அருள் புரிந்த பாபாஜியின் பாதங்களுக்கு வணக்கம். கிரியா என்பது செயல். எமது உடலின் செயல்முறை இசைவாக்கம் யோகம் செய்வதை ஊக்குவிப்பதால் 'கிரியா யோகம்' என்று அழைக்கப்படுகிறது. இது 5 பகுதிகளைக் கொண்டது, முதலாவது தேக உடம்புக்குச் செய்யும் 18 ஆசனங்கள். இரண்டாவது சுவாச உடம்புக்குச் செய்யும் குண்டலினி பிராணாயாம பயிற்சி. மூன்றாவது மன உடம்பிற்குச் செய்யும் தியானப் பயிற்சி. நான்காவது அறிவு உடம்பிற்குச் செய்யும் மந்திரப் பயிற்சி. ஐந்தாவது ஆன்ம உடலை உணரும் தன்மையும் உள்ளடங்கியது. அது மாத்திரமல்ல இந்த 5 உடலுறைகளும் சைவசித்தாந்தத்தில் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என சித்தரிக்கப்பட்டுள்ளது.

தேக உடம்பிற்கான யோகாப் பயிற்சியை தொடர்ந்து சிலகாலம் செய்து தேக உடம்பைச் சமச்சீரான நிலைக்குக் கொண்டு வந்த பின்னர் குருவிடம் இருந்து யோக தீட்சையைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த தீட்சையைப் பெற்றவர்கள் ஒவ்வொரு நாளும் குறைந்தது 30 நிமிடங்கள் 5 உடலுக்குமாக செய்ய வேண்டும். செய்து முடிவில் பாபாஜியின் பஞ்சாட்சர மந்திரத்தை (ஓம் கிரியா பாபாஜி நம ஓம்) 16 தடவை எழுதி அந்த நாளுக்கு ரிய சாதனையை முடிக்க வேண்டும்.

உண்மையை உணர்தலே முக்தி, கைவல்யம், மோட்சம். இவ்வுடல் இருக்கும் போதே இதனை உணரும் போது அது சீவன் முக்தி எனப்படும். விடுதலையை வலியுறுத்துவதே ஆன்மீகத்தின் நோக்கம். முக்தியைப் பெறக் கர்மம், பக்தி, யோகம், ஞானம் என நான்கு வழிகளைப் பெரியோர்கள் வகுத்துள்ளனர். அவை நான்கும் ஒன்று சேர்ந்தது பாபாஜியின் கிரியா யோகம். இம் மார்க்கம் பயத்திலிருந்தும், சோகத்திலிருந்தும் விடுதலை தரும். அறியாமையிலிருந்து விடுதலை, இன்மையிலிருந்து விடுதலை, அழிவிலிருந்து விடுதலை என மூவகையிலும் கிரியா யோகம் விடுதலை தரும். விடுதலையைத் தருவதே குருவின் நோக்கம். விடுதலை பெற்றவர் சமநிலை உடையவர்.

பாதை வேறுபடலாம். ஆனால் முடிவு ஒன்றே. பாபாஜியின் பாதை எல்லோரையும் நேசித்து அன்போடு வழிநடத்த வழி காட்டுவது. நாம் எம் முற்பிறவியில் செய்த நல்வினையால் இப்பிறவியில் பாபாஜியின் கிரியா யோகத்தைப் பயில்வதற்குக் கொடுத்து வைத்துள்ளோம். எனவே இளம் சந்ததியினர் இந்த கிரியா யோகத்தை தமது வாழ்வில் கடைப்பிடித்து வருவார்களானால் மாசுபட்டு வரும் சூழலினால் எதிர் நோக்கும் நோய் நொடிகளிலிருந்து (கொரோனா) தம்மைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நாம் வாழ்வில் தெரிந்தும் தெரியாமலும் செய்யும் பாவங்களில் இருந்து விடுபட வழி வகுக்கிறது. எனவே பாபாஜி விரும்பும் கிரியா சேவை செய்து கிரியா யோகத்தை வளர்ப்போம்.

**ஜெய் பாபாஜி, ஜெய் பாபாஜி,**
**ஜெய் ஜெய் பாபாஜி**
**ஓம் கிரியா பாபாஜி நம ஓம்**

■

**திரு.க.இறைவன்**
கொழும்பு பாபாஜி சென்ரர்

## மைக்கல் கொலினின் இரண்டு புதிய கவிதைப் படைப்புக்கள்

# இவனைச் சிலுவையில் அறையுங்கள் எழுதித்தீராப் பிரியங்கள் - குறித்த பார்வை

புலோலியூர் வேல்நந்தன்

தீம்புனலின் புதுப்புனலில் இவ்வாரம் அறிமுகம் காண்பது நாளைய தினம் (28.11.2021) மட்டக்களப்பில் வெளியீடு காணவுள்ள மைக்கல் கொலினின் ஐந்தாவது நூலாகவும் மூன்றாவது கவிதைத் தொகுப்பாகவும் அமையும் “இவனைச் சிலுவையில் அறையுங்கள்” தன் மனைவி மீதான 22 வருட காதல் வாழ்வின் வெளிப்படாக அமையும் ‘எழுதித்தீராய் பிரியங்கள்’ என்ற வண்ணமயமான கவிதைத் தொகுப்புமே ஆகும். இவை மகுடம் பதிப்பகத்தின் 41 ஆம், 42 ஆம் நூற் பதிப்புக்களாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

முதலில் இவனைச் சிலுவையில் அறையுங்கள் என்ற கவிதைத் தொகுப்பை நோக்கின் எழுபத்திரண்டு பக்கங்களில் இத் தொகுப்பு அமைகிறது. பரிசுத்த வேதாகமத்தைக் கேள்விக்குட்படுத்தும் புரட்சிகரமான பல கவிதைகள் புதிய மீள் வாசிப்பு உத்திகளை கையாண்டு புதிய மொழிதல் முறைமைகள் வழி எளிமையாக வெளிப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளன.

இந்நூலுக்கான பதிப்புரையை மனித மொழியில் ஒரு புதிய விளக்கம் என்ற தலைப்பில் மைக்கல் கொலினின் நண்பரும் படைப்பாளியுமான கவிஞர் அ.ச.பாய்வா அவர்கள் மைக்கல் கொலனின் படைப்புலகம் பற்றிய முழுமைத் தரிசனத்தைத் தருகிறார். திருகோணமலையை பிறப்பிடமாகவும் தற்போது மட்டகளப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் கொலின் அவர்கள் கவிஞர், எழுத்தாளர், குறும்பட இயக்குநர், சஞ்சிகையாளர், பத்திரிகையாளர், வெளியீட்டாளர் எனப் பல் பரிமாணங் கொண்ட இலக்கியச் செயற்பாட்டாளராக எல்லோருடனும் நல்லுறவைப் பேணும் ஒருவராக எடுத்துக் காட்டுவதுடன் தனது




புதுப்புனல் 19

நீண்ட இலக்கியப் பயணத்தில் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை பல முதன் முதல்களின் சொந்தக்காரராகவும் மைக்கல் கொலின் அவர்கள் விளங்குகின்றார். அவ்வகையில் 1992 இல் வெளிவந்த “என் பிரிய ராஜகுமாரிக்கு” என்ற இவரது புதுக் கவிதைத் தொகுதியே திருகோணமலையில் அச்சில் வெளிவந்த முதல் புதுக் கவிதைத் தொகுப்பு திருமலையின் முதற் குறும்படமும் இவருடையதே - திருகோணமலையில் இவர் வெளியீட்ட ‘தாகம்’ கலை இலக்கிய புரட்சிகர இதழே அங்கு தொடர்ந்து பத்து ஆண்டுகள் வந்த முதலாவது இதழாக விளங்குகிறது. தற்போது இவரது ‘மகுடம்’ இலக்கிய சஞ்சிகைப்பணியும் பதிப்புப் பணியும் முக்கியமானவை. பரசுராமபூமி என்ற இவரது கவிதைத் தொகுப்பே இதிகாச புராண, மறைநூல் கருத்துக்களை மறுவாசிப்புக்குட்படுத்தி வந்த முதற் தொகுப்பு. இவரது சிலுவைகளே சிறகுகளாய் கவிதைத் தொகுப்பு அண்மையில் சாகித்திய விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக சிறப்புப் பெற்றது. “வீணையடி நீ எனக்கு” என்ற இவரது நாவலே கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலைச் சொன்ன முதல் நாவல் என்ற சிறப்புக்குரியது. அந்த வகையில் இவற்றைத் தொடர்ந்து வெளிவரும் கவிதைத் தொகுப்புக்களாக இவ் இரு கவிதைத் தொகுப்புக்களும் அமைகின்றன. அண்மைக்காலமாக இவரது படைப்புச் செயற்பாடுகள் பன்முக வடிவங்கள் மூலம் புதிய உத்வேகம் பெற்று வருவதுடன் பதிப்பு முயற்சிகளிலும் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றார். இந்த வகையில் இவனைச் சிலுவையில் அறையுங்கள் என்ற இத் தொகுப்பின் கவிதைகள் பாஸ்கா காலக் கவிதைகளாய் அமைந்து கிறிஸ்தவ இலக்கியத்தின் இது சார்ந்த முதல் முயற்சியாகவும் அமைகின்றது. கத்தோலிக்கர்கள் 40 நாட்களுக்கு மேலான நோன்பிருத்தலில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு கவிதையாக 2021 ஆம் ஆண்டின் பாஸ்கா காலத்தைச் சிறப்பித்துப் பாடப்பட்ட கவிதைகளே இவையாகும். அந்த வகையில் புதிய ஏற்பாட்டை மறு வாசிப்புக்கு உட்படுத்திய முதல் கவிதை நூலும் இதுவே ஆகும். ஒரு காலத்து வேத வசனங்கள் சமகாலத்தோடு எப்படிப் பொருந்திப் போகின்றன என்ற பரிசோதனை முயற்சியாய் இது அமைகின்றது. இந்நூலுக்கான அணிந்துரையைக் கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அருட்பணி அ. அகஸ்தின் நவரெத்தினம் அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தம் உரையில் திருவிபிலிய வரலாற்றை விளக்கி அதில் மறு வாசிப்பு என்ற வகையில் மைக்கல் கொலின் புதுக்கவிதை வடிவில் செய்துள்ள புரட்சிகளை எடுத்துக் காட்டியுள்ளதுடன். இம் மீள் வாசிப்பு பாரம்பரியங்களைப் பேணுபவர்களுக்குச் சற்று நெருடலாகவே இருக்கும் என்று கூறியுள்ளார். இந் நூலுக்கான அணிந்துரை தம் எழுத்துக்களாய் எம்மை வியக்க வைக்கும். தமிழ் நாட்டுப் பேராசிரியர் அ. ராமசாமி அவர்கள் வேதாகமத்தின் வாசனை வீசும் கவிச்சொற்கள் என்ற தலைப்பில் வழங்கியுள்ளார். அவர் தம் உரையில் அகத்திணை கவிதை மரபில் இருந்து பக்தி கவிதை மரபு பெற்றுக் கொண்ட விடயங்களைச் சொல்லி அதன் நீட்சியைப் புதுக் கவிதையாக இத் தொகுப்புத் தருகிறது என்கிறார்.

என்னுரையில் மைக்கல் கொலின் அவர்கள் பாஸ்கா காலக் கவிதைகளாய் முகநூல் வழி இக் கவிதைகள் உருவான வரலாற்றையும் இம் முயற்சி ஒரு முதல் முயற்சி என்பதையும் குறிப்பிடுவதுடன் தனக்குப் பல வழிகளிலும் உற்சாகமூட்டிய, உதவிய உள்ளங்களுக்கு நன்றிகளையும் பதிவு செய்துள்ளார். இனி கவிதைக் தொகுப்பினுள் நுழைந்தால் முதற் கவிதையே

மதத்தை மதியாமல் / மனித்தை உணராமல் / இன்று / உடலங்களை எரிப்பவர்கள் / குழந்தையின் / உயிரற்ற உடலை வைத்து / இன ரீதியான அரசியல் / செய்பவர்களின் / அரசியல் சித்தாந்தத்தைச் / சிலுவையில் அறைவோம்

என மனசாட்சியில் அறைகிறது. கொரோனாக் கால உடலம் சார் அவலச் சித்தரிப்பாய் அது அமைகிறது. இரண்டாவது கவிதை இப்படிச் சொல்கிறது.

தட்டுங்கள் திறக்கப் படும் / திறக்காவிட்டால் / உடையுங்கள் / கேளுங்கள் கொடுக்கப்படும் / கொடாது விட்டால் / பறித்துப் பெறுங்கள்...

என்றாவது அமைந்து யேசுவின் வசனத்தின் மறு வாசிப்பாய் புதிய சமூகப்புரட்சிக்கு வித்திடுகிறது. மைக்கல் கொலனின் துணிவு பாராட்டுக்குரியது.

“இங்கே
இயேசுவுக்குப் பதிலாக
இப்போதெல்லாம்
யூதாஸ்களே
சிலுவை சுமக்கிறார்கள்” என்கிறது மற்றொரு கவிதை

“உங்களில் பாவம் செய்யாதவன்
இவன் மேல் முதல் கல்லை எறியட்டும்” என்ற சம்பவத்தை மீள் வாசிப்புக்கு உட்படுத்தி அக் கவிதையின் ஒரிடத்தில் இப்படிச் சொல்கிறார் மைக்கல் கொலின்.

அடுத்த கல்லை
இயேசுவின் மேல்
எறிவதற்காய்
ஓங்கிய கரங்களுடன்
அவர்கள்
தீர்ப்பிடல்கள்
தொடர்கின்றன

மற்றொரு கவிதையில் ...

“உங்கள் அத்திவாரங்கள்
மதங்களின் மீதல்ல
மக்கள் மனங்களில் உறுதியாகட்டும்
இல்லையேல்
மணல் வீடு கட்டியவன்
நிலையே உங்களுக்கும்” என எச்சரிக்கிறார்.

ஜெரு சலேம்
தேவாலயத்தின் உள்ளே
சாட்டையுடன் யேசு
..............................
எங்கெல்லாம்
தேவனின் இல்லம்
அசுத்தப்படுத்தப்படுகிறதோ
கொலைக்களமாக
மாற்றப்படுகிறதோ
அங்கெல்லாம் நீங்களும்
இயேசுவாய் மாறுங்கள்
உங்கள் கரங்களில்
மாறட்டும் சாட்டைகள்

என மற்றொரு கவிதை பலருக்குமான சாட்டை அடியாக அமைகிறது. இன்னும் பல கவிதைகளை சொல்ல வேண்டும் போல் இருந்தாலும் இப் பக்க வரையறை இடம் தராமையால் இத் தொகுப்பு நிச்சயம் பல விமர்சனங்களோடு பேசப்படும் தொகுப்பாகம் என்று கூறி இனி இவரால் வெளியிடப்படுகின்ற காதல் கவிதைகளின் தொகுப்பாய் அமைகின்ற அடுத்த தொகுதிக்குள் செல்வோம். எழுதித் தீராப் பிரியங்கள் என அவரது காதல் மனைவியின் தோற்றத்தை முன் அட்டையாகவும் பின் அட்டையில் மைக்கல் கொலினின் உருவமும் அவரது கவிதையொன்றும் அலங்கரிக்க முற்று முழுதாய் வண்ண வடிவமைப்பில் மலர்ந்திருக்கிறது இத் தொகுதி. இதற்கான ஒரு குறிப்பைத் தற்போது லண்டனில வசிக்கும் முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீடாபதி பேராசிரியர் பாலசுகுமார் அவர்கள் வழங்கியுள்ளார். இந்நூலை கொலினின் பாடசாலைக்கால நண்பி ஜேர்மனியில் வசிக்கும் நிவாஷினி அவர்கள் வெளியிடுகிறார் என்பதும் மைக்கல் கொலினின் மண வாழ்வின் 22 ஆம் வருட நிறைவையொட்டி இத் தொகுப்பு வெளியிடப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். “எழுதித் தீராப் பிரியங்கள்...” என்ற தலைப்பே நெஞ்சைக் கவர்கிறது. இத் தொகுப்பு எங்கும் மனம் வசீகரிக்கும் காதல் கவிதைகள் நிறைந்து வழிகின்றது. காதலை அனுபவித்துப் பாடுவது என்பது அதுவும் 22 வருடங்களின் பின்பும் அதே மாறாக் காதல் உணர்வுடன் பாடுவதென்பது வரம். அது மைக்கல் கொலினிக்கு வாய்த்திருப்பது மகிழ்ச்சி. எல்லாக் கவிதைகளையும் சொல்ல முடியாவிட்டாலும் சில கவிதைகளை எடுத்துக் காட்டி இப் பத்தியை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

“அதீத்தின்
பிரியங்களுடன்
பெருங்கடலெனப்
பரந்திருக்கிறாய் நீ
என்றும் தீரா
பெருந்தாகத்துடன்
நீந்தும்
மீன் குட்டியாய் நான்” என்கிறார் ஒரு கவிதையில், மற்றொரு இடத்தில்

“மனக்கிண்ணம்
ததும்பத் ததும்ப
காதல் செய்கிறேன்
என் உயிர்ப்பூவில்
வழிகிறது
ஜீவிதத்தின் அன்பு...” என்கிறார்.

“உன்னைக் காணாத
பொழுதுகளின் வலிகள்
ஓயாத அலைகள்
உன்னைக் கண்ட
பொழுதுகளின்
மயக்கம்
சுனாமிப் பேரலைகள்” என்கிறார்.

எதிர்காலத்தில் எம் மண்ணின் ஒரு காதல் பாடலாசிரிய ராக மிளிர்வதற்குரிய எத்தனங்களும் தெரிகின்றன. பன்முக இலக்கிய ஆளுமை கொண்டவரின் தொடரும் இலக்கியச் செயற்பாட்டுப் பணிகளை, காதல் வாழ்வை வாழ்த்துவதில் தீம்புனலின் புதுப்புனலும் பேருவகை அடைகிறது. ■



# கிராம சமுதாய அபிவிருத்தியில் சமுதாய நூலகங்களின் பங்கு:

## தகவல் வறுமைத் தணிப்புக்கான உபாயங்களின் வழியாக கிராம சமுதாய அபிவிருத்தியை உறுதிசெய்தல்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான ஓர் ஆலோசனைக் குழுவை (advise group) வைத்து தொழிற்படும் அமைப்பாகும்.

கிராம சமுதாயங்களில் எழும் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு வழிகாட்டும் தகவல்களைப் பெற்றுத் தரும் நிலையங்களாகத் தொழிற்படும். சமூக புறமொதுக்கல் (social exclusion) தொடர்பான பிரச்சினைகளை விடுவிப்பதற்கான தகவல்களை உடனுக்குடன் வழங்கும் நிலையங்களாக அமையும்.

கிராமப்புற மக்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தும் தகவல்களை வழங்குவதன் மூலமாக அவர்களுக்கு அவசியமான சமூகத் தொழினுட்ப (social technical) அபிவிருத்தியை ஏற்படுத்தும். இதனால், கிராம மக்களின் வாழ்வு, தொழில் முறை, பண்பாடு தொடர்பான அறிவின் மீள்-கண்டுபிடிப்புகள் நிகழ உதவுகின்றன. இதன்மூலம் புதிய புதிய ஆய்வுகள், புத்தாக்கங்கள் கிராமிய சமுதாயத்தில் சாத்தியமாகின்றன.

எப்போதுமே தகவல் ஒரு நபரை அல்லது சமுதாயத்தைத் தங்கள் நிலையில் சக்தி மிக்கவர்களாக வைத்திருக்கும். இதனால் சமூகப் போட்டி நிலைகளில் அவர்கள் ஆதிக்கம் மிக்கவர்களாக ஆக்கப்படுவர். கிராமிய மக்களைப் போட்டிமிக்க உலகில் ஆதிக்கம் மிக்கவர்களாக மாற்ற சமுதாய நூலகங்கள் உதவுகின்றன.

விவசாயம், சுகாதாரம், மனித உரிமைகள், கல்வி, வேலைவாய்ப்பு, சந்தை, நிதி, இடர் முகாமைத்துவம் முதலான துறைகளில் கிராம மக்களின் தகவல் அறிவைப் பிரயோகிப்பதன் வழியாக அவர்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்தை நிலைத்திருக்கச் செய்கின்றன.

மனிதனின் அடிப்படைத் தேவைகளான காற்று, நீர், உணவு, வாழ்விடம் என்பவற்றைப் போலவே இன்று தகவலும் ஆகிவிட்ட நிலையில் நிலம், ஊழியம், மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை அர்த்தமுள்ளதாகவும் உற்பத்தித் திறன் மிக்கதாகவும் நவீன உலகத்தில் ஆக்கிக்கொள்வதற்கான தகவல்களைத் தருவதாக சமுதாய நூலகங்கள் தொழிற்படுகின்றன.

நிலைபேறான அபிவிருத்தி என்பது அறிவையும் தகவல்களையும் கையகப்படுத்துதல், பரப்புதல், உபயோகப்படுத்துதல் ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டது. கிராம சமுதாயங்களைப் பொறுத்தவரை இம்மூன்றுக்கும் சமுதாய நூலகங்கள் உதவுகின்றன. இதனால் கிராம மக்களிடையே நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கான வேறுபட்ட சமநிலைகளை உருவாக்கும்.

தகவல் வறுமையுள்ள மக்களை நிறைவற்ற வளமுள்ளவர்களாகவே இன்றைய உலகம் காண்கிறது. இதனால், தகவல் வறுமையானது அவசியமான அடிக்கட்டமைப்பில் தேக்கநிலை, தகவல்களைப் பெறும் வழிகள் மற்றும் திறன்களிலான தேக்கநிலை என்பவற்றைக் கொடுக்கிறது. இவற்றிலிருந்து மக்களை மீட்டெடுத்து வேலைவாய்ப்புகள், வியாபாரம், படைப்பாக்கம், சமூக வலைப்பின்னல் ஆகியவற்றைப் பெறுவதற்கான இடைவெளியைக் குறைக்கும். இதனால், பூகோள நிலைப்பட்ட மாற்றங்களை கிராம மக்களுக்கு உடனடியாக கொணர்ந்து சேர்க்கும். கிராம மனிதர்கள் தம்மை பூகோளப் பிரசைகளாக மாற்றிக்கொள்ள வழி வகுக்கும்.

தகவல் வறுமைக்குப் பின்னணிக் காரணமாக அமைவது தகவலைக் கையாள்வதில் சமமின்மை நிலவுவதே. இந்தச் சமமின்மை அரசியல், பண்பாட்டு, பொருளாதார, கல்வி, நியம, புவியியல், தொழினுட்பவியல் காரணங்களால் நிகழ்கின்றன. இதனால், இந்தக் காரணிகளைக் கடந்து செல்லும் நிலைக்கு மக்களை மாற்றுவது சமுதாய நூலகங்களாகும்.


சமுதாய நூலகங்கள் தகவல்ப் பரப்பலுக்கு உறுதுணையாவதால் கிராமப்புற மக்கள் தங்களது மரபார்ந்த வாழ்க்கைக் கூறுகளில் வினைத்திறனை உலகறியச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. உள்ளூர்ப் பண்பாட்டின் செழுமையைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும், செழுமைபெற விளைவிப்பதற்கும் இது துணை செய்கின்றது.

மேற்கண்ட தொழிற்பாடுகள் யாவும் மரபார்ந்த கிராம மட்ட நிறுவனங்களின் (community based organizations) செயற்பாடுகளைக் கிராம சமுதாய அபிவிருத்தியை நோக்கி மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் உள்வாங்கப்பட வேண்டும். மரபார்ந்த கிராம மட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் யாவும் எறும்பு ஊர்ந்த கற்குழித் தடங்களாக நிலைத்துப்போயின. இதனால் கிராம மட்ட அமைப்புக்களின் செயற்பாடுகள் பத்திரிகை போடுவதுடன் முடிந்துபோய் விடுகின்றன. இப்போக்கு கிராம மட்ட அமைப்புக்களை ‘வாசிகசாலைகளாக’ பார்க்கும் மரபான பார்வையையே இன்றும் கொடுக்கிறது. இந்தக் கண்ணோட்டம் காலத்துக்கு ஏற்ப மாற்றம் பெற வேண்டும்.

வேண்டப்படும் மாற்றம் என்ன?

சமுதாய நூலகங்களுக்கான பல்பரிமாணம் கொண்ட தொழிற்பாடுகளைக் கிராம மட்டங்களில் இயங்கும் சனசமூக நிலையங்கள் உள்வாங்கவேண்டும். உலகத்தைத் தமது உள்ளங்கையில் வைத்திருக்கும் இன்றைய மக்களின் தேவையுணர்ந்து செயலாற்றும் அமைப்புகளாக சனசமூக நிலையங்கள் மாற்றம் பெற வேண்டும். வாசிகசாலை என்ற பரிமாணம் சமுதாய நூலகங்களின் பரிமாணத்துக்கு விரிவாக்கம் பெற வேண்டும். உலகத்தைக் கிராமங்களை நோக்கி இழுத்து வரும் அதே நேரத்தில் கிராமங்களை உலகத்தை நோக்கி விரித்துச் செல்லும் நோக்கில் சனசமூக நிலையங்கள் தொழிற்படுவதற்கு அவை சமுதாய நூலகங்களின் தொழிற்பாடுகளை உள்வாங்கவேண்டியது அவசியமாகின்றது.

இற்றைப்படுத்தப்பட்ட (updated) தகவல்களை வழங்குவதன் வாயிலாக கிராமத்துப் பிள்ளைகளை நவீன உலகத்துக்குப் பொருத்தமானவர்களாக மாற்றுதல், எதிர்வரும் நூற்றாண்டுகளுக்கான பிரசைகளாக வாழ அவர்களின் அனுபவங்களை விரிவாக்கம் செய்தல், நவீன வேலையுலகுக்கான வாய்ப்புகளைக் கண்டடைய வழிகாட்டல், மக்களைத் தங்கள் சுய மற்றும் கிராம முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளையும் வளங்களையும் வழிமுறைகளையும் கண்டறிந்து புதிய புதிய செயற்றிட்டங்களை உருவாக்கி அவற்றை முன்னெடுப்பதற்கான அறிவு மற்றும் திறன்களை அடைய வழிகாட்டுதல், கிராமப்புறங்களுக்கான பயன்தரும் நவீன முயற்சியாண்மைகளை இனங்காணுதலும் அவற்றை முகாமை செய்தலுக்குமான அறிவைப் பெறுதல் முதலானவற்றை வெளியிலிருந்து உள்ளே கொணர சனசமூக நிலையங்களோடு சமுதாய நூலகங்கள் ஒருமித்துப் பணியாற்றுதல் வேண்டும். சமுதாய நூலகங்கள் வாயிலாகத் தகவல் உலகில் கிராமிய மரபுகளை புத்துயிர்ப் பெற வைப்பதற்கான ஆவணமாக்கல் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். கிராமங்களின் கவனிக்கப்பாடதிருக்கும் பல்துறைசார்ந்த மரபார்ந்த நுட்பங்களைப் பதிவாக்கம் செய்ய வேண்டும். இத்தகைய இருவழிச் செயற்பாடுகளின் மூலம் கிராமங்களின் விருத்திக்கான வழிமுறைகள் எய்தப்படுதல் வேண்டும். ■




# வெப்பம் தணிக்கும் கண்ணாடிப் பூச்சு!

அடுக்குமாடிக் கட்டடங்களின் ஜன்னல்கள் வழியே வெப்பம் உள்ளே வருவதைத் தடுக்கவும், குளிர்சாதன வசதிகளின் பயன்பாட்டைக் குறைக்கவும் ஒரு புதிய தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.


ஜன்னல் கண்ணாடிகள் மீது டைட்டானியம் டையாக்சைடு, டங்ஸ்டன் டிரையாக்சைடு, நியோடைமியம்-நியோபியம் மற்றும் டின் ஆக்சைடு ஆகிய வேதிப்பொருட்களின் கலவையைச் சாதாரண ஜன்னல் கண்ணாடிகள் மீது பூசினாலே போதும். அந்தக் கண்ணாடி வழியே வெளிச்சம் உள்ளே சென்றாலும், வெப்பம் பெருமளவு தடுக்கப்பட்டுவிடும். அதுமட்டுமல்ல, ஜன்னல் கண்ணாடிக்கு, கறுப்பு நிற கண்ணாடிக் காகிதங்களை ஒட்டுவது, கண் கூசும் சூரிய வெளிச்சத்தை வேண்டுமானால் மட்டுப்படுத்தலாம். ஆனால், வெயிலிலுள்ள அகச்சிவப்புக் கதிர்களை, கறுப்புக் காகிதங்களால் தடுக்க முடியாது. இதனால், வெப்பம் அப்படியே கட்டடத்திற்குள் இறங்கும். இதற்கென குளிர்சாதனங்கள் இயங்கும் போது மின் கட்டணம் தாறுமாறாக எகிறும்.

எனவே, சிக்கனத்திற்குச் சிக்கனம், குளிர்ச்சிக்கு குளிர்ச்சி என, இரட்டை தீர்வுகளைத் தரும் கண்ணாடிப் பூச்சுக்கு நிச்சயம் வரவேற்பு இருக்கும் என நம்பலாம்.

குளிரூட்டும் கறுப்புக் கண்ணாடிகளைப் போலன்றி, இந்தப் புதிய பூச்சுள்ள கண்ணாடி வழியே வெளிக் காட்சிகளை தெளிவாகப் பார்க்க முடியும்.

சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் இஸ்ரேலிலுள்ள ஹீப்ரு ஜெருசலேம் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் இந்த புதுமையைக் கூட்டாக உருவாக்கியுள்ளனர்.

அடுக்குமாடிக் கட்டடங்களில், ஜன்னல் வழியே சூரிய ஒளி உள்ளே நுழையும்போது, கட்டடமே வெப்பமாகும். அப்போது, குளிர்சாதனங்கள் அனைத்துமே இயங்கினால் தான், ஆட்கள் உள்ளே இருக்க முடியும். ■



# நிலாவில் கிடைக்கவிருக்கும் தாது வளம்!

நிலாவின் தென் துருவத்தில், உறைந்த திட நிலையில் காபனீரொட்சைட் படிமங்கள் ஆங்காங்கே இருப்பதை ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம் மற்றும் கோள் அறிவியல் நிலையம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வு இது.

அடுத்த 10 ஆண்டுகளில், மீண்டும் நிலாவிற்கு மனிதர்கள் போய் வருவது அதிகரிக்கவிருக்கிறது. எனவே நிலாவிலுள்ள இந்த வளங்கள் மிகவும் மனிதர்களுக்கு உறுதுணையாக இருக்கும். எப்படி? நிலாவில் தென் துருவத்தின் இருண்ட பகுதியில், குறைந்தது 204 சதுர கி.மீ பரப்பளவுக்கு காபனீரொட்சைட் படிமங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

இதை மனிதர்கள் நிலாவில் மீண்டும் இறங்கி உறுதி செய்யவுள்ளனர். அப்படி உறுதியானால், அவர்களுக்கு செவ்வாய் செல்லவோ, பூமிக்கு திரும்பவோ தேவையான ராக்கெட் எரிபொருளுக்கு காபனீரொட்சைட் பயன்படும். மேலும், அங்கேயே இரும்பு மற்றும் இதர உயிரிப் பொருட்களைத் தயாரிக்க இந்த இயற்கை வளங்கள் மூலப் பொருட்களாகப் பயன்படும். மனிதர்களுக்கு நிலாவில் வீடு கட்டவும் இவை எதிர்காலத்தில் உதவும். ■

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)


மறுதலிப்பதில்லை என்பதையும் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

ஆயினும் அண்மைக்காலத்தில் பெருகியுள்ள மதவெறி கொண்ட இந்துத்துவவாதிகள் மற்றும் இலங்கையின் அடிப்படைவாதிகளான பொதுபலசேனா இராவணசேனை என்பன தங்களுக்குத் துணையாக தொன்மக் கதைகளையே வரலாறாகக் கொண்டு அவிழ்த்துவிடும் உள் நோக்கங்கொண்ட வரலாற்றுப் பொய்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கறாறான ஆய்வுமுறைகளைக் கடைப்பிடித்து தமிழ் பிராமியில் எழுதப்பட்ட பழந்தமிழ் கல்வெட்டுக்களை வாசிப்பதற்குத் தகுதரமான முறையை தனது 40

# சிந்துவெளி ஆய்வில் திராவிடத் தொன்மங்கள்:

## பத்ம ஸ்ரீ ஐராவதம் மகாதேவனின் முன்மொழிவுகள்



ஆண்டுகால கடுமையான ஆய்வின் முடிவில் முன்வைத்துப் புகழ்பெற்றவர் ஐராவதம் மகாதேவன் அவர்கள். தொல் தமிழ் எழுத்துக்களின் காலக்கணிப்பிலும் அதை தமிழ் பிராமி எனப் பெயரிடும் முறையிலும் முரண்பட்டாலும் அவரது வாசிப்பு முறையைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் ஏற்றுக் கைக்கொள்வதுடன் மேம்பாடுகள் தேவையென்ற போதிலும் அதனையே பழந்தமிழ் வரிவடிவத்தை வாசிப்பதற்கான தகுதரமான முறையாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிந்துவெளி ஆய்வுக்கான மையத்தை ரோஜா முத்தையா ஆய்வு நிறுவனத்தில் உருவாக்கிச் செயற்பட்ட ஐராவதம் மகாதேவன்தான் தொன்மங்களை முன்வைத்து சிந்துவெளிக் குறியீடுகளைக் குறி நீக்கம் செய்யும் போது அதற்கு சிந்துவெளி நாகரீகத்தின் பின் வந்த இந்திய நாகரீகங்களான பழந்தமிழ் நாகரீகத்தின் இலக்கியங்களிலிருந்தும் வேதகால நாகரீகத்தின் வேதங்களிலிருந்தும் அவற்றின் வழியோட்டங்களை முன்வைத்தே அணுகுகிறார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளிலிருந்து சிந்துவெளி எழுத்துகளைப் படிப்பதில் அறிவியல்சார் அணுகுமுறையில் ஈடுபட்டு ஆழ்ந்து உழைத்துள்ள பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்ப்போலா நோரோசாவ் (Knorozov) தலைமையில் ஆய்வு செய்த ரஷ்ய அறிஞர்கள் குழு தமிழ்நாட்டு அறிஞர் ஐராவதம் மகாதேவன் ஆகியோர் தெள்ளத்தெளிவாக அம்முத்திரை எழுத்துக்கள் திராவிட மொழி சேர்ந்தவை என்று நிறுவியுள்ளனர்.

இம்முத்திரைகளின் ஆய்வில் ஐராவதம் மகாதேவன் ஏழாண்டு காலம் கடுமையாக உழைத்து முத்திரை வாசகங்களின் நிரல்படுத்திய பட்டியலை 'The Indus Script: Texts, Concordance and Tables' என்ற சிறந்த ஆய்வு நூலாக இந்திய மத்திய ரசின் தொல்லியல்துறை மூலம் 1977 இல் வெளியிட்டார். அதன்பின் இதுவரை சிந்துவெளி முத்திரை எழுத்து ஆய்வே தம் வாழ்நாள் பணியாகக் கொண்டு ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவர். அண்மைக் காலம்வரை அவர் அம் முத்திரை வாசகங்களின் மொழி 'பழந்திராவிடம்' என்ற நிலையில் இருந்தார். இப்போது அவை காட்டும் பண்பாடு சங்ககாலத் தமிழகப் பண்பாட்டை ஒத்திருந்தது என்ற கருதுகோளுக்கு வந்துள்ளார். அக் கருதுகோளுக்கான ஆதாரங்களை 'Vestiges of Indus Civilization in Old Tamil' ' என்ற நூலாக வெளியிட்டார். தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்க இந்த ஆய்வு நூலைப் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தினூடாக பேராசிரியர் பா.ரா.சுப்பிரமணியன், 'சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்' என்ற பெயரில் திறம்படத் தமிழாக்கம் செய்துள்ளார். இம்மொழிபெயர்ப்பை நூலாசிரியரும் மெய்ப்புப் பார்த்துள்ளார்.

சிந்துவெளிப் பண்பாட்டின் எச்சங்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மிக மென்மையாகவும் தொன்மக் கதைகளில் அழுத்தமாகவும் பதிவாகி இருப்பதைத் தொகுத்துக்கொண்டு சிந்துவெளிப் பண்பாட்டு வரிவடிவங்களுடன் தொடர்பு படுத்திக் காட்டி நேரடி மொழிபெயர்ப்பு, சிந்துவெளி வரிவடிவங்களில் இலக்கண விகுதிகள், ஒலி ஒற்றுமையால் விளையும் சிலேடை, சிந்துவெளி நாகரீகத்தைத் தமிழகத்தோடு தொடர்புபடுத்தும் கூறுகள் ஆகியவை குறித்து அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் முக்கியம் வாய்ந்தவை. தமிழகத் தொன்மக் கதைகளை அவர் மேற்கூறிய முறைகளாலேயே விளக்குகிறார்.

இதனூடாக சிந்துவெளி வரிவடிவ ஆய்வுகளில் பல ஆண்டுகளாக ஈடுபட்டிருக்கும் அஸ்கோ பர்போலா போன்றவர்களிடம் காணப்படாத ஒரு புதிய அணுகுமுறையை மகாதேவன் பின்பற்றியிருக்கிறார். இந்த அணுகுமுறைக்கு அவர் கொண்டிருப்பது கடன் மொழிபெயர்ப்பு என்பது இரு மொழிகளுக்கு இடையே நிகழ்ந்திருக்கக்கூடிய நேர் மொழி பெயர்ப்பு ஆகும். சிந்துவெளியை வாழ்விடமாகக் கொண்டிருந்தவர்கள் வெளியிலிருந்து வந்தவர்களின் மேலாதிக்கத்தின் கீழ் வந்தபோது இரு மொழிகளும் தம்மிடையே கொண்ட உறவால் நேரடியான மொழிபெயர்ப்புகள் நிகழ்ந்திருக்கக் கூடிய வாய்ப்புகள் மிகுதி. இந்த நேரடி மொழி பெயர்ப்புகளை இரு மொழிகளிலும் காண முடியும். அதாவது திராவிட மொழிகளிலிருந்து ரிக்வேத காலத்து வடமொழியிலும், வடமொழியிலும் திராவிட மொழிகளிலும் அவை நிகழ்ந்துள்ளன. இந்த நேரடி மொழி பெயர்ப்புகளை மொழியியல் மற்றும் பண்பாட்டு அடிப்படையில் கண்டு, கவனத்துடன் கணித்து, சிந்துவெளி ஆய்வில் பயன்படுத்தியிருப்பது மகாதேவன் காட்டும் புதிய பாதையாகும்.

( பத்ம ஸ்ரீ ஐராவதம் மகாதேவன் அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவாக இக்கட்டுரை)

■

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணக் குடாநாடு தனக்குத் தேவையான அளவு பருவகால மழைவீழ்ச்சியைப் பெறுவதில்லையா? மழைவீழ்ச்சியினால் கிடைக்கும் நீர் குடாநாட்டின் தேவைகளுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறைவானதா?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழைநீரினைச் சேகரிக்கக்கூடிய நீரேந்து பகுதிகள் இல்லையா?

யாழ்ப்பாணக்குடா நாட்டின் தரையமைப்பு கிடைக்கும் மழைநீரினை விரைந்து கடலுக்குப் பாச்சுமளவிற்கு அதிகூடிய சாய்வான தளங்களைக் கொண்டதா?

யாழ்ப்பாணக் குடாநாடு கடல்நீரின் பெருக்கத்தினால் பாதிக்கப்படக்கூடியளவிற்கு அலைகடலின் மத்தியிலோ அல்லது கடல்மட்டத்திற்குக் கீழானதாகவோ அமைந்துள்ளதா?

யாழ்ப்பாணக்குடா நாட்டின் நிலக்கீழ் தரையமைப்பு நீரினைச் சேகரித்து வைக்க முடியாத அளவிற்குக் கடினமான கற்பாறை மேலடுக்குகளைக் கொண்டுள்ளதா? அல் லது நிலத்தினுள் செல்லும் நீரினை மீண்டும் மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத ஆழத்திற்கு நீரினைப் புதைக்கும் தரையமைப்பினைக் கொண்டதா?

முன்பு வாழ்ந்த மக்கள் தொகையிலும் அதிகரித்த மக்கள் தொகையினை யாழ் குடாநாடு உள்வாங்கியுள்ளதா?

கிடைக்கும் மழைநீருக்கும் ஏற்கெனவே நிலத்தினுள் தேங்கியுள்ள நீருக்கும் என்ன நடந்தது?

யார் இதற்கு பொறுப்பாளிகள்?

இதனை எவ்வாறு சீர் செய்யலாம்?

இவ்வாறு இவ்விடத்தில் நாம் பல நூற்றுக்கணக்கான வினாக்களைக் கேட்க வேண்டியுள்ளது. இந்தப் பலநூறு கேள்விகளும் மிகவும் சிறியவைகளாகவும் இலகுவானவைகளாகவும் இருக்கும் பட்சத்தில் ஒரு சிறுபிள்ளையினாலும் ஒரு சாதாரண குடிமகனாலும் பதிலளிக்கக்கூடியவையே. அவ்வாறு இலகுவாக்கப்பட்ட சிறிய கேள்விகளை புரியக்கூடியதும் பதிலளிக்கக் கூடியதுமான தாய்மொழியில் கேட்கும் போது அங்கு உண்மையான பிரச்சினைகள் அடையாளங்காணப்பட்டு அவற்றிற்கான மூலகாரணங்களும் அறியப்படும்.

பிரச்சினைக்கான

# இல்லாமை என்பது பிரச்சினையல்ல

மூலங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்ட ஒருவரால் அதற்கான தீர்வினையும் முன் மொழிவது எளிது. அவர்கள் தங்களது பிரச்சினைக்கான தீர்வுகளைத் தாங்களே முன்மொழியும் போது அவற்றை செயற்படுத்தி அதன் விளைவுகளை அவர்களால் தக்கவைக்கமுடியும்.

ஆனால் நாங்கள் இங்கு என்ன செய்கின்றோம்? என்றால் அறிவார்ந்தவர்கள், துறைசார் நிபுணர்கள், அதிகாரிகள், அதிகாரத்தில் உள்ளவர்கள் என்ற பதாகைகளுடனும் மமதையுடனும் மக்களை அணுகுகின்றோம். ஏற்கெனவே முற்கற்பனை செய்யப்பட்டுத் தயாரிக்கப்பட்ட ஆங்கில மற்றும் துறைசார் வித்துவச்சொற்கள் அடங்கிய வினாக்கொத்துக்களுடன் மக்களின் பிரச்சினைகளை வரையறுக்க முயற்சிக்கின்றோம். அவர்கள் தங்கள் பிரச்சினைகளையும் அதன் மூலகாரணங்களையும் புரிந்து அவர்களாகவே தீர்வைக்கண்டறியும் பொறிமுறையினைக் கட்டியெழுப்பாமல் அவர்களது பிரச்சினைக்கான தீர்வுகளை நாங்கள் வெளியிலிருந்து அவர்கள் மீது வீசுகின்றோம். அல்லது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயத்தைச் செயற்படுத்துவதற்காக அவர்களது பிரச்சினையின் பரிமாணத்தை நாங்கள் எடுத்துச்சென்றுள்ள விடயத்திற்குப் பொருந்துமாறு மாற்றியமைக்க முற்படுகின்றோம். நாங்கள் கொண்டுசென்ற பாதணிகளுக்கு ஏற்றவாறு அவர்கள் தங்கள் கால்களை வெட்டுமாறு அல்லது அதற்குள் திணித்துக்கொண்டு அதனால் ஏற்படும் சிரமங்களையும் வலிகளையும் பொருட்படுத்தாமல் எங்களை நோக்கிச் சிரிக்குமாறு நிர்ப்பந்திக்கின்றோம். நாங்கள் சொல்வது போல் நீங்கள் இம்முறை சிரிக்காவிடில் எதிர்கால வள ஒதுக்கீட்டிலும் பயனாளிகள் பட்டியலிலும் நீங்கள் உள்ளடக்கப்படமாட்டீர்கள் என அச்சுறுத்துகின்றோம்.

நான் ஏன் இந்தக் கபடத்தனமான விளையாட்டினை எமது சொந்தச் சமூகத்துடன் சகமனிதனுடன் விளையாடுகின்றேன்? நான் யாருக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருக்கவேண்டும்? எனக்குக் கூலிகொடுக்கும் நிறுவனங்களினதும் அதன் உரிமையாளர்களாக அல்லது அதனைக் கட்டுப்படுத்துபவர்களாக இருக்கும் தரகு முதலாளித்துவ சக்திகளின் அபரிமிதமான இலாப வேட்கைகளின் கையாட்களாக எமது சமூகம் மிக மோசமாகச் சீரழிந்து போவதற்கு நான் எவ்வாறு உடந்தையாக இருக்கின்றேன்? போன்ற வினாக்களை நாங்கள் எங்களை நோக்கி எப்போதாவது கேட்டதுண்டா?

ஒரு செயலைச் செய்வதற்கு முன்பு நாங்கள் அதுபற்றி பல வினாக்களை வினாவ வேண்டும். பொதுமக்களையும் சகமனிதனையும் கூட கேள்விகளுக்கு ஊடாகச் சிந்திக்கத் தூண்டவேண்டும்.

"மாற்றம் என்ற சொல்லைத்தவிர ஏனையவைகள் யாவும் மாற்றமுடையவை"

எங்களது விருப்புக்கள் யாவும் மாற்றத்தை நோக்கியவை. இப்போது இருக்கும் நிலையிலிருந்து மற்றுமொரு நிலைக்குச் செல்வதனை மாற்றம் என்கின்றோம். இப்போது இருக்கும் நிலை யாது? போகவிரும்பும் நிலை என்ன? ஏன் அந்த நிலைக்குப் போகவேண்டும்? ஏன் இந்த நிலையில் இருக்கின்றோம்? இந்த நிலையில் இருப்பதனால் எமக்குள்ள பாதகமான விடயங்கள் யாது? இந்த நிலையில் நாங்கள் இருப்பதற்கு எவர் காரணம்? நாங்கள் விரும்பும் நிலையினை நாங்கள் எப்போது அடைய விரும்புகின்றோம்? ஏன் அடையவிரும்புகின்றோம்? எவ்வாறு அடைய விரும்புகின்றோம்? எதனைக்கொண்டு அடைய முயற்சிக்கப்போகின்றோம்? எப்போது ஆரம்பிக்கப்போகின்றோம்? எவ்விடத்தில் ஆரம்பிக்கப்போகின்றோம்? யாருடன் இணைந்து ஆரம்பிக்கப்போகின்றோம்? யாருக்காக ஆரம்பிக்கப்போகின்றோம்?

இத்தகைய எதனை? எதனால்? எவர்? எவருக்காக? எதனைக்கொண்டு? எப்படி? எப்போது? எங்கே? எதனை நோக்கி? போன்ற மிகச்சிறிய வினாக்களைத் தொடர்ச்சியாக மாறிமாறிக் கேட்கும் போது ஒற்றைச்சொற்களுக்கு ஊடாக மிக இலகுவான சிறிய பதில்கள் கிடைக்கும். அவற்றை தர்க்கரீதியாக வரிசைப்படுத்தினால் நாங்கள் செய்யப்போகும் முயற்சிக்கான பதில்கள் தெளிவாகும்.

இத்தகைய கேள்விகள் ஊடாக வேள்விகள் செய்யும் போது அனைவருக்கும் புரிதலும் உடன்பாடும் அதிகமாகும். அதனை விடுத்து பதவிக்கதிரைகளில் இருக்கும் போது நாங்கள் விக்ரமாதித்தனின் கதிரையில் அமர்ந்து சகலத்திலும் வல்லவர்களாகத் தோற்றம் காட்டினால் விக்ரமாதித்தன் கதிரையில் இருந்து விழும்போது எங்கள் சொந்தச் சமூகத்திற்கு அஞ்சியே நாங்கள் அஞ்ஞான வாசம் போகவேண்டியிருக்கும்.

■







# விடுகதைகள்

01. மண்ணுக்குளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்?
**மஞ்சள்**
02. தொப்பி போட்ட காவல்காரன், உரசி விட்டால் சாம்பல் ஆவான்?
**தீக்குச்சி**
03. ஊர் சுற்ற கூட வருவான் ஆனால் வீட்டுக்குள்ளே வரமாட்டான்?
**செருப்பு**
04. ஏழு குதிரை பூட்டிய தேரில் வரும் மன்னவன்?
**சூரியன்**
05. தொட்டு விட்டால் ஏதும் இல்லை அரைத்து விட்டால் சிவந்துடுவான்?
**மருதாணி**
06. பாட்டி வீட்டுத் தோட்டத்தில் தொங்குகின்ற பாம்புகள்?
**புடலங்காய்**
07. சொன்னதைச் சொல்லும் பொண்ணுக்கு, பச்சைப் பாவாடை கேட்குதாம்?
**பச்சைக்கிளி**
08. கீழே ஊற்றிய தண்ணீர் மேலே தொங்கி இனிக்குது?
**இளநீர்**
09. சேற்றுக்குள்ளேயே வாழ்பவனுக்கு ஆகாசத்தில் நண்பனாம்?
**தாமரை சூரியன்**
10. வண்ணப் பட்டு சேலைக்காரி, நீலப் பட்டு ரவிக்கைக்காரி?
**மயில்**

# என் கனவு

ஜென்ம ஜென்மமாய்
மூடிக் கிடந்தது மனவாசல்

திறக்கும் தயக்கத்தோடு
பரமபதம் ஆடுகையில்
விழித்தால் உண்மை புரியும்
அசரீரி கேட்டது

விழித்தேன்
என்னை யாரும் அழைக்கவில்லை
அது கனவு!

கனவுக் குரலைத் தினமும்
தேடுகின்றேன்
கனவிலே கேட்ட குரலோடு
இலட்சியத்தை நோக்கிப்
பயணிக்கிறேன்.

**சி. லக்ஷனா**





# பாசமான நாய்



ஒரு ஊரில் குமார் என்பவர் ஒரு நாயை வளர்த்து வந்தார். ஒருநாள் இரவு நேரத்தில் குமாரின் வீட்டிற்குத் திருடர்கள் திருட வந்தார்கள். அப்போது குமார் வீட்டிற்கு வந்தார். குமாரைக் கண்டு அதிர்ச்சியடைந்த திருடர்கள் குமாரை நோக்கிக் கல் எறிந்தனர். அந்தக் கற்களில் ஒன்று குமாரின் தலையில் பட்டதும் குமார் "அய்யோ!" என்று கத்தியவாறு மயங்கிக் கீழே விழுந்தான். குமாரின் குரலைக் கேட்ட அவனது நாய் மிகவும் விரைவாக ஓடிவந்து திருடர்களைக் கடித்தது. குமாரின் நாய் கடித்த வலி தாங்காமல் திருடர்கள் ஓடினர். அதைக் கண்ட முதியவர் ஒருவர் குமாரின் வீட்டின் அருகே வந்தார். குமாரின் நிலையைக் கண்டதும் குமாரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். சிறிது நேரத்தின் பின் குமார் கண் விழித்தான். அவன் கண் விழித்த போது அவன் அருகே வைத்தியர் இருப்பதைக் கண்டார் அப்பொழுது அவன் வைத்தியரிடம் கேட்டார் என்னை யார் காப்பாற்றியது என்று. அப்பொழுது வைத்தியர் கூறினார் நீங்கள் வளர்த்த நாய்தான் என்று கூறினார். அவன் மகிழ்ச்சியடைந்து தனது நாயின் பாசத்தை உணர்ந்தான், அதன் பிறகு அவன் வீட்டிற்குச் சென்றான். அவனது நாய் இவனை நோக்கி ஓடி வந்தது. அவன் நாயை கட்டிப் பிடித்து ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

**ச. ஆருசன் - ம. சோபிதன்**
தரம் - 05
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்.



**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**


**தீம்புனல்**
**கனகசபை கட்டடத் தொகுதி**
**பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**
தொ.பே.: 021 226 2564

# மின்கலன் இல்லாத காது கேட்கும் கருவி!

காது கேட்கும் கருவியில் பல தொழில்நுட்ப மேம்பாடுகள் வந்துவிட்டன. இருந்தாலும், இதுவரை மாறாமல் இருப்பது, அதிலுள்ள குட்டி மின்கலம் தான். எதிர்பாராத நேரத்தில் அல்லது மிகவும் தேவையான நேரத்தில் மின்கலனின் மின்சாரம் தீர்ந்துவிடும். இந்தச் சிக்கலை எப்படிப் போக்குவது என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர்.

மின்கலனே தேவைப்படாத ஒரு காது கேட்கும் கருவியை வடிவமைத்தால் எப்படி இருக்கும்? இப்படி சீனாவிலுள்ள ஹவாசோங் அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தபோது, ஒரு ஆச்சரியமான தீர்வு கிடைத்தது. காதில் அணிந்து கொள்ளும் கருவியின் வெளிப்புறத்தில் பொருத்தும் விதத்தில் ஒரு பொருளை அவர்கள் உருவாக்கினர். அந்தப் பொருள் இருவகை பொருட்களின் கலவை, ஒன்று பீசோ எலக்ட்ரிக் தன்மை கொண்டது. இன்னொன்று டிரைபோஎலக்ட்ரிக் தன்மை கொண்டது.

வெளியிலிருந்து காதை அடையும் ஒலிகள் ஏற்படுத்தும் அதிர்வால், பீசோ எலெக்ட்ரிக் படலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். பீசோஎலக்ட்ரிக் படலத்துடன் பட்டு விலகுவதால் டிரைபோ எலெக்ட்ரிக் படலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். இந்த இருவகை மின் உற்பத்தியும் தினமும் நடப்பதால், காது கேட்கும் கருவியால் மின்கலன் இல்லாமலேயே மின்சாரத்தைப் பெற்று இயங்கும். சீனாவின் இந்த கண்டுபிடிப்பு மலிவு விலையில் சந்தைக்கு வரும் நாள் வெகு தொலைவில் இல்லை.



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 27.11.2021 அன்று வெளியிடப்பட்டது.